கல்கி



ALKI நவம்பர் 29, 1953

4 அண



நாளுக்கு நாள் அதிக
தெளிவான,
எழிலோங்கும் சருமம்

ரெக்ஸோனுவிலுள்ள **கேடில்** இந்த
அற்புத வேலையைச் செய்யட்டும்

தினமும் ரெக்ஸோனு சோப் உபயோகியுங்கள். இதன் கேடில் கலந்த நுரை உங்கள் சருமத்தை நாளுக்கு நாள் அதிக மிருதுவாகவும், தெளிவாகவும் இருக்கச் செய்யும்.



ரெக்ஸோனு
கேடில்* கலந்த சோப் இது ஒன்றே

* சருமத்திற்கு ஊட்டமளித்து மிருதுவாக்கும் எண்ணெய்களின் பிரத்தியேகக் கலவையின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர்.

RP. 109-50 TM

ரெக்ஸோனு ப்ரோப்ரைட்டரி லிமிடெடுக்காக இந்தியாவில் தயாரித்தது.

கல்கி பொருளடக்கம்

மலர் 13 இதழ் 18 | 1953 நவம்பர் 29 | விஜய ஞு கார்த்திகை 14

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

அதோகதிதான்!



ராஜாஜி மந்திரி சபையைக் கவிழ்க்கச் சில காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் செய்யும் முயற்சி பலித்தால், சென்னை மாகாணத்தின் கதி என்ன ஆகும்?

க்ளோரோபில் சேர்ந்த மக்ளீன்ஸை இப்பொழுது லக்ஷக்கணக்கானவர் உபயோகிக்கின்றனர்



ஏனெனில்: அதுதான், இயற்கையின் துர்கந்த நாசினி கலந்த, பற்களை வெண்மையாக்கும் பற்பசையில் உலகிலேயே மிகச் சிறந்தது.

ஆரம்ப முதல் வெற்றி யளிக்கும் க்ளோரோபில் சேர்ந்த மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசை, முன்னைவிட இப்பொழுது அதிகமாக உபயோகிக்கப் படுகிறது. ஒரிஜினல் பற்பசையில் உள்ள கால நிரூபணமான எந்த பொருளையும் விட்டு விடவில்லை—அதே விசேஷ விதிகளுடன் க்ளோரோபிலும் சேர்க்கப் பட்டுள்ளது. ஆனால் க்ளோரோபில் உங்கள் பற்களை சுத்தம் செய்வதில்லை; உங்கள் ஸ்வாசத்தை சுத்தி செய்கிறது. ஆகவே, க்ளோரோபில் சேர்ந்த பற்பசை வாங்கும்போது, வெண்மையாக்கும் நல்ல பற்பசையையே வாங்குவது எவ்வளவு அவசியம் பாருங்கள். அதிக வெண்மையான பற்களும், நறுமணம் கமழும் மூச்சும் பெற, க்ளோரோபில் சேர்ந்த மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையையே கட்டாயமாக வாங்குங்கள்.



க்ளோரோபில் சேர்ந்த மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசை.

மக்ளீன்ஸ் பற்பசை உபயோகிப்போர் தயவு செய்து கவனிக்கவும்: ஒரிஜினல் மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசை இப்பொழுதும் எங்கும் கிடைக்கும்.

CHI-5-TAM.

கல்கி

மலர் 13

தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார்

இதழ் 18

குட்டி சாம்ராஜ்யங்களின் முட்டுக்கட்டை!

அன்னிய நாட்டைச் சேர்ந்த இரண்டு பிரபல தலைவர்கள் இப்போது மிகவும் முக்கிய காரியத்தை முன்னிட்டுப் புதுடில்லிக்கு விஜயம் செய்திருக்கிறார்கள். அவர்கள் பண்டித ஜவாஹர்லால் நேருவைக் கண்டு பேசியிருக்கிறார்கள்.

மேற்படி தலைவர்கள் இந்தியா முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்யத் திட்டமிட்டிருக்கிறார்கள்; இந்திய மகா ஜனங்களிடமும் தங்களுடைய கஷ்டங்களை முறையிட்டுக் கொள்ளத் தீர்மானித்திருக்கிறார்கள்.

அந்தத் தலைவர்களில் ஒருவர் முப்பத்து மூன்று வயதான டாக்டர் ஜகன்; மற்றவர் ஸ்ரீ பர்ன்ஹாம்.

அவ்விருவரும் சமீப காலம் வரையில் பிரிட்டிஷ் கயானாவில் முறையே பிரதம மந்திரியாகவும் கல்வி மந்திரியாகவும் இருந்தார்கள்; இப்போது அவர்கள் அப்பதவிகளை இழக்கும்படி நேர்ந்திருக்கிறது.

அவர்கள் தங்களுடைய நாட்டின் கட்சியை எடுத்துக் கூறி, நேருஜியின் உதவியையும் இந்திய மக்களின் அனுதாபத்தையும் ஆதரவையும் பெறுவதற்காக இந்தியாவுக்கு வந்திருக்கிறார்கள்.

* * * *

பிரிட்டிஷ் கயானா தென் அமெரிக்காவின் வட கோடியில் உள்ள நாடு.

அது நூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேலாகப் பிரிட்டிஷ் சர்க்காரின் காலனியாக இருந்து வருகிறது.

எனினும் பிரிட்டிஷ் கயானா பிரிட்டனைக் காட்டிலும் பெரியது என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் அவ்வளவு பெரிய நாட்டின் ஜனத் தொகை நாலு லட்சம் கூட இல்லை.

அந்த நாட்டு மக்களில் பெரும்பாலோர் கிழக்கு இந்திய ஜாதியினர்; மீதியுள்ளவர்கள் நீக்ரோவர்கள் ஆவர்.

பிரிட்டிஷ் கயானா தங்கச் சுரங்கம், வைரச் சுரங்கம் போன்ற இயற்கைச் செல்வம் நிறைந்த நாடு. மனிதன் ஊடுருவிச் செல்ல முடியாத அந்த நாட்டின் அடர்ந்த காடுகளில் எண்ணிக்கையற்ற அபூர்வ மரங்களும் மேற்கொண்டு அபரிமிதமான சுரங்கச் செல்வமும் இருப்பதாகக் கூறப்படுகிறது.

சென்ற பல நூற்றாண்டுகளாக ஜனநாயக மணத்தையே கண்டறியாத பிரிட்டிஷ் கயானா மக்களுக்குச் சில மாதங்களுக்கு முன் ஓரளவு அதிர்ஷ்டம் அடித்தது.

பிரிட்டிஷ் சர்க்கார் அந்த நாட்டில் ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தார்கள்.

அதன்படி நடந்த தேர்தலில் வெற்றி பெற்ற பொதுஜனப் பிரதிநிதிகளே, டாக்டர் ஜகன் தலைமையில் மந்திரி சபையை அமைத்தார்கள்.

பிரிட்டிஷ் கயானா பார்லிமெண்டில் மொத்தம் உள்ள இருபத்திநான்கு ஸ்தானங்களில் பதினெட்டு டாக்டர் ஜகன் கட்சிக்குக் கிடைத்தன.

ஏராளமாகச் சர்க்கரை உற்பத்தியாகும் அந்த நாட்டில் உள்ள சர்க்கரைத் தொழிற்சாலைகள் அன்னியர்களுக்குச் சொந்தமாக இருப்பதால், அங்கு அடிக்கடி வேலை நிறுத்தங்கள் நிகழலாயின.

பிரிட்டிஷ் கயானாவில் இன்னும்கூட பிரிட்டிஷ் கவர்னரின் ஆதிக்கம் இருந்து வருவதை டாக்டர் ஜகன் ஆட்சேபிக்க முற்பட்டார். கவர்னருக்கு அளிக்கப் பட்டுள்ள விசேஷ அதிகாரங்களை ரத்து செய்தாலன்றி, பிரிட்டிஷ் கயானா முன்னேறுவது முடியாத காரியம் என்று அந்த நாட்டில் உள்ள தலைவர்கள் வற்புறுத்தத் தொடங்கினர்.

பிரிட்டிஷ் கயானா மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்குப் பிரிட்டிஷ் சர்க்கார் இணங்க முற்பட்டிருக்கலாம்; அல்லது அந்த நாட்டினரைச் சமாதானப் படுத்தக் கூடிய வேறு முறைகளைக் கைக் கொண்டிருக்கலாம்.

ஆனால், பிரிட்டிஷ் காலனி மந்திரி ஆலிவர் லிட்டில்டன் அத்தகைய சமாதான முறைகளைக் கைக் கொண்டு பிரிட்டிஷாரின் 'கௌரவத்தை'க் குலைக்க விரும்ப வில்லை.

அதற்கு மாறாக, அவர் பிரிட்டிஷ் கயானா மக்களின் மண்டையில் ஓரே போடாகப் போட்டு விட்டார். அந்த நாட்டின் அரசியலையே 'சஸ் பெண்ட்' செய்து, பார்லிமெண்டையும் 'டிஸ்மிஸ்' செய்து விட்டார்.

பார்லிமெண்டே ஒழிந்து விட்டதால், மந்திரி சபையும் மறைந்து விட்டது!

அதாவது பிரிட்டிஷ் கயானா மக்களின் ஜன நாயக அரசியல் வாழ்வு ஆறு மாத அற்ப வாழ்வாக முடிந்து விட்டது!

அவ்விதம் பார்லிமெண்டைக் கலைத்து, அரசியலை ஸ்தம்பிக்கச் செய்தது ஜனநாயக தர்மத்துக்கு முற்றிலும் விரோதம் என்று முறையிட்டுக் கொள்ளவே பிரிட்டிஷ் கயானா தலைவர்கள் இந்தியாவுக்கு வந்திருக்கிறார்கள். இந்தியாவின் உதவியால் அப்பிரச்னையை ஐக்கிய நாடுகள் சபையில் எழுப்பியோ, அல்லது வேறு நியாயமான வழியிலோ அதற்குப் பரிகாரம் தேடலாம் என்ற நம்பிக்கையுடன் இருந்து வருகிறார்கள்.

* * *

பிரிட்டிஷ் அதிகாரிகளின் கடுமையான நடவடிக்கைகளைக் கண்டு மனக் கொதிப்பு அடைந்த பிரிட்டிஷ் கயானா தலைவர்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து கொள்ள முற்பட்டிருப்பார்களாயின், அந்த நாட்டில் கென்யா முதலிய இடங்களைப் போல் பெரும் நெருக்கடி ஏற்பட்டிருக்கும்.

அவர்கள் சாத்வீக முறைகளின் மூலம் தங்கள் கஷ்டங்களுக்குப் பரிகாரம் தேட முயற்சிப்பது மிகவும் போற்றத் தக்கது.

"நானும் எனது கட்சியினரும் காந்திய வழியையே பின் பற்றி வருகிறோம். அரசியலில் ஈடுபட எனக்கு ஊக்கமும் உத்வேகமும் அளித்தவர்கள் மகாத்மா காந்தியும் பண்டித ஜவாஹர்லால் நேருவும் தான். அவர்களுடைய உயர்ந்த கொள்கையும் லட்சியமுமே எங்களை ஆகர்ஷித்தன. இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு என்ன முறைகளைக் கைக் கொண்டதோ, அதே முறைகளை நாங்களும் கடைப்பிடிக்க உறுதி கொண்டிருக்கிறோம். பிரிட்டிஷ் கயானா அன்னியர் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவதற்காக நாங்கள் ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்திருக்கிறோம். வரி கொடா இயக்கம் தொடங்கவும் உத்தேசித்திருக்கிறோம்."

இவ்விதம் டாக்டர் ஜகன் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டிருக்கிறார்.

உலகத்தில் உள்ள சாம்ராஜ்யங்கள் ஒழிந்து விட்டன. ஆனால் வல்லரசுகளின் சாம் ராஜ்ய ஆசை ஒழிய வில்லை என்பதையே பிரிட்டிஷ் கயானா போன்ற காலனிகள் காட்டுகின்றன.

அன்னியர் ஆதிக்கத்துக்கு உட்பட்டு உழன்று வரும் காலனிகள் ஒன்றிலாவது இன்று நிலைமை அமைதியாக இல்லை. ஒவ்வொரு காலனியிலும் ஒவ்வொரு விதமான போராட்டம் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பது போல், சாம்ராஜ்யங்கள் ஒழிந்தும் குட்டி சாம் ராஜ்யங்களாகிற காலனிகள் ஒழிய வில்லை.

சுதந்திரம் என்றும் ஜனநாயகம் என்றும் இடைவிடாது கூறிவரும் வல்லரசுகள் காலனிகளைக் கைவிட்டு விட்டால், பல நாடுகளிலும் சுதந்திரத்துக்கும் ஜனநாயகத்துக்கும் இடையூறாக இருந்து வரும் பெரும் முட்டுக்கட்டை தீர்ந்து விடும்.

போகாத ஊருக்கு வழிகாட்டும் டாக்டர்கள்

சென்ற வாரம் சென்னையிலே நடந்த தென்னிந்திய டாக்டர்கள் மகாநாட்டுக்குத் தலைமை வகித்த டாக்டர் கே. வி. நம்பியார் தமது தலைமை உரையில் கிராமங்களுக்கு வைத்திய வசதி அளிக்கும் விஷயமாகக் குறிப்பிட்டார்.

கிராமங்களில் போக்குவரத்து, பள்ளிக்கூட வசதிகள் சரிவர இருந்தால்தான் டாக்டர்கள் அங்கு போய் இருக்க விரும்புவார்களாம். இல்லாவிட்டால் பட்டணங்களில் பட்டினி கிடக்கும் டாக்டர்கள்கூடக் கிராமங்களில் சென்று ஸ்தாபிக்கப் பிரியப்பட மாட்டார்களாம். இதனாலேயே சென்ற இருபது வருஷங்களாகச் சர்க்கார் எவ்வளவோ முயற்சி செய்தும் அத் துறையில் போதிய பலன் கிடைக்கவில்லை என்று டாக்டர் நம்பியார் கூறினார்.

டாக்டர்கள் கிராமங்களுக்குச் சென்று ஸ்தாபிக்க வேண்டுமாயின் சர்க்கார் என்னென்ன செய்ய வேண்டும் என்பதையும் மகாநாட்டுத் தலைவர் சாங்கோபாங்கமாக விவரித்தார்.

கிராமங்களில் சர்க்கார் பல வசதிகளையும் ஏற்படுத்த வேண்டும். அங்கு நியமிக்கும் டாக்டர்கள் முழு நேர ஊழியர்களாகக் கருதப்பட வேண்டும். அவர்களுக்குப் பென்ஷன் உரிமை அளிக்க வேண்டும். அத்துடன் அவர்களுக்குப் பிரத்தியேகமாகக் கிராம 'அலவன்ஸ்' தொகையும் கொடுக்க வேண்டும் என்று டாக்டர் நம்பியார் நிபந்தனைகளை அடுக்கிக் கொண்டே போனார்.

இந்தியாவில் உள்ள ஜனங்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் கிராமங்களில்தான் வசிக்கிறார்கள். அவர்கள் போதிய வைத்திய வசதி இராமல் கஷ்டப்பட்டு வருகிறார்கள்.

மாணவர்களுக்கு மூன்று வருஷ வைத்தியப் படிப்பு போதும் என்ற யோசனையைச் சமீபத்தில் சென்னை சர்க்கார் கைவிட்டு விட்டார்கள். அந்த யோசனையை டாக்டர்கள் எதிர்த்ததே சர்க்காரின் மேற்படி முடிவுக்குக் காரணம்.

எஸ். எஸ். எல். ஸி. வரையில் வாசித்தவர்களுக்கு இரண்டு வருஷ காலம் பயிற்சி அளித்துக் கிராமங்களில் சாதாரண நோய்களுக்கு வைத்தியம் செய்ய ஏற்பாடு செய்யலாம் என்ற திட்டமும் பெரிய டாக்டர்களுக்குப் பிடிக்கவில்லை.

இவ்விதம் டாக்டர்கள் அனுபவ சாத்தியமான ஒவ்வொரு யோசனையையும் ஆட்சேபித்தவண்ணமிருந்தால், இந்தியக் கிராமங்களுக்கு வைத்திய வசதி அளிப்பது முடியாத காரியம் ஆகிவிடும்.

மேற்படி டாக்டர்களின் கூற்று போகாத ஊருக்கு வழி காட்டுவதாக இருக்கிறது. அவர்கள் விதிக்கும் நிபந்தனைகள் எல்லாம் நிறைவேறுவதற்கு இன்னும் பல ஆண்டுகள் செல்லும். அதுவரையில் கிராம ஜனங்கள் வைத்திய வசதி இன்றி மடிந்து கொண்டிருக்க வேண்டுமா!

அனுபவசாலிகளான டாக்டர்கள் சுயநலத்தையும் பணத்தையுமே முக்கியமாகக் கருதாமல், ஜீவகாருண்யத்துடன், சேவை உணர்ச்சி

யுடன் இந்தப் பிரச்னையை நோக்குவார்களாயின், மேற்படி ஆட்சேபனைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இடம் இராது.

சில சினிமாப் படங்களில் டாக்டர்கள் கொடூரமானவர்களாகச் சித்திரிக்கப்படுவதைப் பார்க்கிறோம். டாக்டர்களைப் பற்றி மக்கள் கேவலமாக நினைக்கும்படியாகச் சித்திரிப்பது நியாயமா என்றும் கேட்கத் தோன்றுகிறது. ஆனால் கிராமங்களுக்குச் செல்லும் விஷயமாக டாக்டர்கள் விதிக்கும் நிபந்தனைகளைப் பார்க்கும்போது, சினிமாவில் தோன்றும் சம்பவங்களில் உண்மை இராமற் போகவில்லை என்ற எண்ணம் ஏற்படுகிறது.

எனவே, கிராம ஜனங்களுக்கு வைத்திய வசதி அளிக்கும் விஷயமாக டாக்டர்கள் உடனடியாக அனுபவ சாத்தியமான யோசனைகளை அங்கீகரித்து அமுலுக்குக் கொண்டுவர முற்பட வேண்டும். இன்றேல் அந்தப் பிரச்னையைச் சமீப காலத்தில் தீர்க்க முடியாது.

தடுமாற்றம் கூடாது!

சோஷலிஸ்ட் கட்சி உறுதியான கொள்கைகளை உடைய கட்சியாகும். இந்தியாவில் அக்கட்சியின் தலைவர்களான ஸ்ரீ ஜயப்பிரகாச் நாராயண், ஸ்ரீ அசோக மேத்தா, டாக்டர் லோஹியா ஆகியவர்கள் கட்சியின் தாற்காலிக லாபத்துக்காகவோ, நிரந்தரமான லாபத்துக்காகவோ கூடக் கொள்கைகளிலிருந்து பிறழக் கூடியவர்கள் அல்ல.

ஆனால் பிரஜா கட்சியும் சோஷலிஸ்ட் கட்சியும் ஒன்றான நாளிலிருந்து, சில சந்தர்ப்பங்களில் அக்கட்சியில் கொள்கைத் தடுமாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டு வருகின்றன.

பிரஜா கட்சி தனித்திருந்தபோது, அக் கட்சித் தலைவர்கள் ஆந்திர கேசரி பிரகாசத்துக்குச் சாதிய வாதிகளோடும் குழுப்ப வாதிகளோடும் ஒத்துழைக்கும் உரிமையை அளித்தார்கள். அதன் பலனைப் பல விரும்பத் தகாத விளைவுகள் ஏற்பட்டன. கடைசியில், ஸ்ரீ டி. பிரகாசம் பிரஜா—சோஷலிஸ்ட் கட்சியிலிருந்தே விலகிக் கொண்டு விட்டார். ஸ்ரீ தென்னட்டி விசுவநாதனை அந்தக் கட்சியிலிருந்து விலக்கிவிட வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது.

திருவாங்கூர்—கொச்சி பொதுத் தேர்தலில், பிரஜா—சோஷலிஸ்டுகள் காங்கிரஸுக்கு விரோதமான மற்றக் கட்சிகளுடன் உடன்படிக்கை செய்து கொண்டு ஒத்துழைக்க அனுமதித்தால், அது, தாற்காலிக லாபத்தை முன்னிட்ட கொள்கைத் தடுமாற்றமே யாகும்.

பம்பாய்ப் பிரஜா—சோஷலிஸ்டுகள் மேற்படி ஏற்பாட்டை ஜயந்திரிபுக்கு இடமின்றி வன்மையாகக் கண்டித்திருக்கிறார்கள்.

பம்பாய் சோஷலிஸ்டுகளின் கருத்தே நாடெங்கு முள்ள உண்மையான சோஷலிஸ்டுகளின் கருத்து என்று வெளியாகி வருகிறது.

திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்திலுள்ள பிரஜா சோஷலிஸ்டுகள், தேர்தலில் கிடைக்கும் என்று எண்ணும் தாற்காலிக லாபத்தை முன்னிட்டு, அடிப்படைக் கொள்கைகளைக் கைவிட்டுக் குழப்பச் சேற்றில் மாட்டிக் கொள்வது நல்லதன்று.

சேற்றுக் குட்டையில் அகப்பட்டுக் கொண்ட கிழப் புலி, தங்கக் காப்பைக் காட்டி வழிப்போக்கர்களை அழைத்து வயிற்றை நிரப்பிக் கொண்டிருந்த கதையைப் பிரஜா — சோஷலிஸ்டுகள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

பாணன் செய்த தவறு!

பாணன் யாழை மீட்டி விட்டான்! யாழின் நரம்பிலிருந்து எழும் இன்னிசையில் தன்னை மறந்த லயத்தில் ஆழ்ந்து விட்டான்! ஆகா! என்ன இனிமை!

ஆயினும், அரியாசனத்தில் வீற்றிருக்கும் கடையெழு வள்ளல்களில் ஒருவனாகிய நள்ளிக்கு ஒரு ஐயம். அவன் பாணர்களின் தலைவனான வன்பரணரைக் கூப்பிட்டு ஒரு கேள்வி கேட்டான். அக் கேள்வியிலிருந்தே அவன் எவ்வளவு ஆழ்ந்த சங்கீத ஞானம் பெற்றவன் என்று தெரிந்து விடுகிறது.

"பரணரே! இது என்ன! உம்முடைய பாணன் மரபு தவறி யாழ் வாசிக்கிறான்! காலையில் வாசிக்க வேண்டிய மருதப் பண்ணை மாலையிலும், மாலையில் வாசிக்க வேண்டிய செவ்வழிப் பண்ணைக் காலையிலும் வாசிக்கிறானே!"

அதற்கு வன்பரணர் பின்வருமாறு கூறினார்: "நள்ளி! நீ நீடூழி வாழ்வாயாக! இந்தப் பாணன் இப்படி முறை தவறிப் பாடுகிறான் என்றால் அதற்குக் காரணம் நீதான்."

"அது எவ்விதம்!"

"ஆமாம்! உன் அளவு கடந்த அன்பின் காரணமாக அளித்த விருந்துபசாரங்களில் மதிமயங்கிப் போன பாணனுக்கு எது காலை, எது மாலை என்பதே புரியவில்லை. அவன் என்ன செய்வான்!"

நள்ளி வாழியோ நள்ளி, நள்ளென்
மாலை மருதம் பண்ணிக் காலைக்
கைவழி மருங்கில் செவ்வழி பண்ணி
வரவெமர் மறந்தனர் அதுநீ
புரவுக்கடன் பூண்ட வண்மை யானே! —புறம் 149.

[பண்ணி: பாடி; கைவழி: யாழ்; வரவு: மரபு; வண்மை: கொடை.]

அறங்களையும் கலைகளையும் ஒருங்கே வளர்த்த அரசர் ஆண்ட நாடு செந்தமிழ் நாடு. இத்தகைய செந்தமிழ் நாட்டில் பிறந்த நாம் பாக்கியசாலிகள்.

இவ்விதம் அட்டைச் சித்திரத்தைப் பார்க்கும்போது, நம் காதில் மருதப் பண்ணே, செவ்வழிப் பண்ணே பாய்வது போன்ற பிரமையே ஏற்பட்டு விடுகிறதல்லவா!

பள்ளம் தோண்டுகிறார்களே !

மலையாளத்திலும் தென் கன்னடத்திலும் ராஜாஜியின் சுற்றுப் பிரயாணம் நடைபெற்று முடிந்தது. தமிழ் நாட்டில் எந்த மூலை முடுக்கில் சென்றாலும் மக்கள் ராஜாஜிக்கு அமோக வரவேற்பு அளிப்பது போலவே மலையாளத்திலும் தென் கன்னடத்திலும் பெருந் திரளாக மக்கள் கூடி அவரை வரவேற்று உபதேச மொழிகளைக் கேட்டு மகிழ்ந்தார்கள்.

அந்தப் பிரதேசங்களில் ராஜாஜி மக்களுக்குச் செய்த உபதேசங்களில் ஒன்று "காங்கிரஸை ஆதரியுங்கள்; பலப்படுத்துங்கள் !" என்பது.

தமிழ் நாட்டிலிருந்து கொஞ்சம் தூரத்திலே தள்ளிச் சென்று அவ்விதம் ராஜாஜி உபதேசித்தது பொருத்தமான காரியந்தான்.

தமிழ் நாட்டுப் பொதுக் கூட்டங்களில் ராஜாஜி தற்சமயம் அவ்வாறு பேசும் பட்சத்தில், ஜனங்களுக்கு எவ்வளவுதான் அவரிடம் மரியாதையிருந்தாலும் கொஞ்சம் சிரிப்பு வரத்தான் செய்யும். அவ்விதம் ஹாஸ்யமாகப் பேசுகிறாரோ என்றுகூட ஜனங்களுக்குத் தோன்றலாம்.

"ஏன் சிரிக்கிறீர்கள் !" என்று ஜனங்களைப் பார்த்து நாம் கேட்டால், "இந்த உபதேசத்தை எங்களுக்குச் செய்து என்ன பயன் ! காங்கிரஸ் எம். எல். ஏ.க்களுக்கும் மாகாண காங்கிரஸ் நிர்வாகிகளுக்கும் அல்லவோ செய்ய வேண்டும் ! அவர்கள்தான் காங்கிரஸுக்கு ஆழமாகப் பள்ளம் தோண்டிக் கொண்டிருக்கிறார்களே ! நாங்கள் காங்கிரஸை ஆதரித்து என்ன செய்ய!" என்று ஜனங்கள் திருப்பிக் கேட்பார்கள்.

* * *

ஏழெட்டு வருஷங்களுக்கு முன்பு சென்னை இராஜ்யத்தில் காங்கிரஸ் அபரிமிதமான செல்வாக்குப் பெற்றிருந்தது. தேர்தல்களில் காங்கிரஸ் நூற்றுக்கு நூறு வெற்றிபெற்று வந்தது. ஆனால் சென்ற வருஷ ஆரம்பத்தில் நடந்த பொதுத் தேர்தலில் காங்கிரஸின் செல்வாக்கு இம்மாகாணத்தில் எவ்வளவு விபரீதமாகச் சீர்குலைந்து விட்டது என்பது வெளியாயிற்று.

இதன் காரணம் என்னவென்பது சிறிது அரசியல் அறிவுள்ளவர்கள் அனைவருக்கும் தெரிந்ததே. இம் மாகாணத்திலுள்ள காங்கிரஸ் தலைவர்கள் தங்களுக்குள்ளே பூசல்களை விளைத்துக் கொண்டதும், அதிகாரத்தைக் கைப்பற்றும் ஆசையினால் ஒருவரை யொருவர் வெளியேற்ற முயன்றதும் ஆகிய திருவிளையாடல்களினாலேயே பொது மக்களுக்குக் காங்கிரஸினிடம் இருந்த பக்தியும் மரியாதையும் குன்றி விட்டன.

"காங்கிரஸ் உயர்ந்த ஸ்தாபனந்தான்; ஆனால் இங்கேயுள்ள காங்கிரஸ்காரர்கள் வெறும் வேஷதாரிகள்; சுயநலப் பித்தலாட்டக்காரர்கள்" என்ற எண்ணம் மக்களிடையே பரவியது.

இந்தச் சூழ்நிலையைக் காங்கிரஸை எதிர்த்த கட்சியினர் அனைவரும் நன்கு பயன்படுத்திக் கொண்டு பிரசாரம் செய்தார்கள்.

இதன் காரணமாகவே சென்ற தேர்தலில் காங்கிரஸ் தோல்விமேல் தோல்வியாக அடைந்து காங்கிரஸ்வாதிகள் தலைகுனியும்படி நேர்ந்தது.

* * *

சென்ற பொதுத் தேர்தல் முடிவு வெளியானதும் இம்மாகாணத்துக் காங்கிரஸ்காரர்கள் அனைவருக்கும் நல்லறிவு பிறந்து விட்டதாகக் காணப்பட்டது. ராஜாஜியைத் தலைமை வகித்து நடத்தும்படி ஒரு முகமாக வேண்டிக் கொண்டார்கள். அவரும் அந்த நெருக்கடியான தருணத்தில் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அவருடைய தலைமையில் காங்கிரஸ் மந்திரிசபை ஒன்றன்பின் ஒன்றாகப் பல அரும்பெரும் காரியங்களைச் சாதித்தது.

இம் மாகாணப் பொது மக்களிடையில் காங்கிரஸ் இழந்திருந்த நம்பிக்கையைத் திரும்பவும் அடைந்து வருவதாகத் தோன்றியது.

ராஜாஜி மந்திரிசபை ஏற்பட்டு இன்னும் இரண்டு வருஷம் பூர்த்தியாகவில்லை. ஆரம்பித்த காரியங்கள் பல அரைகுறையாக நிற்கின்றன.

இதற்குள் மறுபடியும் 'பழைய குருடி கதவைத் திறடி' என்று காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் முன்போலவே ராஜாஜியை வெளியேற்றும் முயற்சியைத் தொடங்கி நேருவுக்கு மகஜர் அனுப்பினார்கள். அவர் அதைத் திருப்பி அனுப்பி "இது கொஞ்சமும் நன்றாயில்லை" என்று தம் அபிப்பிராயத்தைத் தெரியப்படுத்திய பிறகும், இவர்கள் தங்கள் பிரயத்தனத்தைக் கைவிடாமல் தொடர்ந்து செய்து வருவதாகத் தெரிகிறது.

ஞாபகத் தவறு ஏன்?

ராஜாஜிக்கு எதிரான முயற்சியை நடத்தி வரும் எம். எல். ஏ.க்கள் அம் முயற்சியின் பலாபலன்கள் என்னவென்பதைச் சிறிதேனும் சிந்தித்துப் பார்த்தார்களா ! இம்மாதிரி இரண்டாவது தடவையும் பழைய பிசகையே செய்வதால் விளையக் கூடிய விபரீதங்களை அவர்கள் எண்ணிப் பார்த்தார்களா !

எண்ணிப் பார்த்திருந்தால், தங்கள் நலத்துக்குத் தாங்களே கேடு விளைவித்துக் கொள்கிறோம்; காங்கிரஸின் நற்பெயருக்கும் பெரிய பள்ளம் தோண்டிக் கொண்டிருக்கிறோம் என்பது அவர்களுக்குத் தெரியாமல் போயிருக்குமா !

"எதற்காக நாம் இவ்வளவு ஆத்திரப்படுகிறோம் ! இந்த ராஜாஜி அப்படி எத்தனை காலக்தான் முதன் மந்திரியாக இருந்து விட முடியும் ! செயற்கைக் கிளர்ச்சியினால் அன்றி இயற்கையான முறையில் தலைமை மாறினால், பின்னால் அதிகாரத்துக்கு வருவோருக்கு எவ்வளவு அநுகூலமாயிருக்கும் ! நாட்டு மக்களிடையில் காங்கிரஸுக்கு ஏற்பட்டு வரும் செல்வாக்கை யெல்லாம் அப்படியே பயன்படுத்திக் கொள்ளலாமே ! இப்படி அவசரமும் ஆத்திரமும் காட்டி, ஜனங்களின் வெறுப்புக்கு ஆளாகி, காங்கிரஸ் எதிரிகளின் சிரிப்புக்கு உள்ளாகி, காங்கிரஸின் சீரழிவுக்குக் காரணமாகிறோமே ! இது எதற்காக ! இதனால் யாருக்கு என்ன பயன் !" என்று சாதாரணமாக எவருக்கும் தோன்றக்கூடிய எண்ணம் காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் சிலருக்கு மட்டும் தோன்றாமல் போனது ஏன் !

இதற்குப் பதில் பகவத் கீதையிலேயே மிகத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. பகவான் கிருஷ்ண பரமாத்மாவே சொல்லி யிருக்கிறார். மகாத்மா காந்தி தினந்தோறும் மாலை நேரத்தில் நடத்திய பிரார்த்தனைகளில் பாராயணம் செய்யப் பட்ட பகவத்கீதை சுலோகம் ஒன்றில் அந்தப் பதில் காணப்படுகிறது.

> "ஆசையினால் குரோதம் உண்டா கிறது: குரோதத்திலிருந்து மோகம் பிறக்கிறது: மோகம் ஞாபகத்தை அழித்து விடுகிறது......"

பகவத்கீதை சொல்வதைக் காட்டிலும் நாம் அதிகமாகச் சொல்லக் கூடியது ஒன்றுமில்லை.

நமது எம். எல். ஏ.க்களில் ஒரு சிலருக்கு ஆசை பிறந்து அதிலிருந்து குரோதம் உண்டாகிச் சென்ற வருஷ ஆரம்பத்தில் பொதுத் தேர்தல் கற்பித்த படிப்பினை மறந்து போய் விட்டது.

அதை அவர்களுக்கு ஞாபகப்படுத்துவதற்காகத் தமிழ்நாடு முழுவதிலுமுள்ள எத்தனையோ காங் கிரஸ் ஸ்தாபனங்களும் காங்கிரஸ் வாதிகளும் முயற்சி செய்து வருகிறார்கள்.

"தினமணி"ப் பத்திரிகையில் பல தினங்கள் தொடர்ந்து கடிதங்கள் வெளியிட்டு வந்தார்கள். கடைசியில் சமாளிக்க முடியாமற் போய்க் கடிதம் எழுதி யவர்களின் பெயர்களை மட்டும் ஒரு பத்தி நிறைய அச்சிட்டிருக்கிறார்கள்.

பற்பல பொதுக் கூட்டங்களில் ராஜாஜிக்கு எதிராகச் 'சதி செய்யும்' எம். எல். ஏ.க்களின் மீது காரசாரமான கண்டனத் தீர்மானங்கள் நிறைவேறி யிருக்கின்றன.

ராஜாஜிக்கு விரோதமான முயற்சிகளைப் பல மாகக் கண்டித்து அநேக காங்கிரஸ் கமிட்டிகள் தீர்மானம் நிறைவேற்றி யிருக்கின்றன.

ஊருக்கு ஊர் அதே முறையில் துண்டுப் பிர சுரங்கள் வெளியாகி வருகின்றன.

இப்படி யெல்லாம் பொது மக்கள் ஞாபகப் படுத்திய பிறகாவது, காங்கிரஸுக்குப் பள்ளம் தோண்டும் திருப்பணியை நம் காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் நிறுத்தி விடுவார்கள் என்று எதிர் பார்ப்போமாக.

ஒருவரை யொருவர் வெளியேற்றச் செய்யும் முயற்சிகளில் அவர்கள் ஈடுபடுவதினால், "காங் கிரஸ்காரர்கள்" என்று சொல்லிக் கொண்டு தமிழ் நாட்டில் யாரும் தலை நிமிர்ந்து நடக்க முடியாமல் போய்விடும் என்பதை ஞாபகப்படுத் திக் கொள்வார்களாக.

ஞாபகம் அழிந்த பிறகு மேலே நடப்பது என்ன என்பதையும் பகவத் கீதை சொல்லுகிறது :—

> "......ஞாபகம் அழியும்போது புத்தி யும் நாசம் அடைகிறது: பிறகு சர்வ நாசம் ஏற்படுகிறது."

தனிப்பட்ட மனிதர்களின் ஆசையி லிருந்து தோன்றும் ஞாபகத் தவறு அவர்களுக்கு மட்டும் தீங்கை விளைக்கிறது.

ஆனால் ஜனப் பிரதிநிதிகளான எம். எல். ஏ.க் களுக்கு ஞாபகத் தவறு உண்டானால், அது தேச நலத்தையே நாசமாக்கி விடும்.

தமிழ் நாடு தனி இராஜ்யமாகி முன்னேற்றப் பாதையில் விரைவாகச் செல்ல வேண்டிய இச் சமயத்தில் நம் எம். எல். ஏ.க்கள் அத்தகைய கைங்கரியத்தைச் செய்ய வேண்டாம்.

பழைய அனுபவங்களை மறந்து, ஒற்றுமையைக் குலைத்து, காங்கிரஸ் மகாசபைக்கும், தேச நலத் துக்கும் பாதகம் செய்ய வேண்டாம்.

விழுப்புரம் மகாத்மா காந்தி பாடசாலை

அபூர்வமான அடக்கத்துடன் அற்புதமான கல்வித் தொண்டு நடத்தி வரும் விழுப்புரம் ஸ்ரீ லட்சுமணசாமியைப் பற்றியும், அவருடைய மகாத்மா காந்தி பாடசாலையைப் பற்றியும் "கல்கி"யில் வெளியான விவரங்கள் நேயர்களுக்கு நினைவிருக்கும். நல்லவர்களுக்கும் நல்ல தொண்டு செய்கிறவர்களுக்கும் சோதனைகள் ஏற்படுவது இயல்பு. சென்ற ஆண்டு தீபாவளிப் பண்டிகை யின் போது ஸ்ரீ லட்சுமணசாமிக்கும் அவருடைய பாடசாலைக்கும் ஒரு பெரும் சோதனை ஏற் பட்டது. யாரோ அறியாச் சிறுவர்கள் கொளுத்தி எறிந்த பட்டாசு வெடி மேற்படி பள்ளிக்கூடத் துக் கூரைக் கட்டிடத்தின் மேலே விழுந்து, கூரை தீப்பற்றி அதிவிரைவில் பரவிப் பள்ளிக்கூடத்தின் பெரும் பகுதியை எரித்துத் தீர்த்து விட்டது. இந்தப் பரிதாபக் காட்சியைக் கண்ட ஸ்ரீ லட்சு மணசாமி சில தினங்கள் மன மூடைந்து உட் கார்ந்து விட்டார். பின்னர்,

> "ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது உஞற்று பவர்"

என்னும் திருவள்ளுவரின் அருள்வாக்கை ஸ்ரீ லக்ஷ்மணசாமி நினைவு கூர்ந்து பள்ளிக்கூடத்தைப் புனர் நிர்மாணம் செய்யத் தொடங்கினார். ஸ்திரத் தரமான உறுதியுள்ள கட்டிடமாகவே கட்டி விடுவதென்று தீர்மானித்து, நண்பர்களின் உதவி யினால் முதலில் ஒரு அறை கட்டி விட்டார். சுமார் 750 சிறுவர் சிறுமிகள் படிக்கும் பள்ளிக்கூடத் துக்கு ஒரு அறை போதாது தானே! மேலும் தொடர்ந்து கட்டிடப் பணியைச் செய்யும் பொருட்டு, வரும் டிசம்பர் 6-ஞாயிற்றுக்கிழமை மாலை, வெள்ளித்திரையிலும் பரத நாட்டியத் துறையிலும் புகழ்பெற்ற குமாரி கமலாவின் உதவி நாட்டியக் கச்சேரி ஏற்பாடு செய்திருக்கிறார். அன்று பிற்பகல் விழுப்புரத்தில் நடைபெற விருக் கும் ஆரம்பக் கல்வி ஆசிரியர் மகாநாட்டுக்காக விஜயம் செய்யும் மந்திரிகள் ஸ்ரீ சி. சுப்பிரமணியம் அவர்களும், ஸ்ரீ மாணிக்கவேல் அவர்களும் இக் கச்சேரியிலும் பிரசன்னமா யிருக்க இசைந்திருக் கிறார்கள் என்று அறிகிறோம்.

உட்கார்ந்து நிம்மதியாகப் படிக்க இடமின்றித் திண்டாடிக் கொண்டிருக்கும் சுமார் 750 குழந்தை களின் நிலைமையை விழுப்புரத்திலும் சுற்றுப் புறங்களிலும் உள்ளவர்கள் மனதிற் கொண்டு மேற்படி உதவிக் கச்சேரிக்குப் பெருந் திரளாக விஜயம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறோம். சுமார் மூன்று மணி நேரத்துக்குமேல், மிக்க உயர்தரமான நடனக் கலையின் அற்புதங்களை அவர்கள் கண்டு களிப்பதுடன், தங்களுடைய சொந்த நகரைச் சேர்ந்த சிறுவர்—சிறுமியர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவி செய்தோ மென்னும் மகிழ்ச்சியையும் அடைவார்கள்.

பிரபல திருமணம்



தஞ்சை ஜில்லாவில் பிரபல பஸ் சர்விஸான "ஸ்ரீ சக்தி விலாஸ்" சொந்தக்காரரான ஸ்ரீ ஜி. வீரப்பப் பிள்ளை அவர்களின் செல்வக் குமாரி சௌபாக்கியவதி கிருஷ்ணவேணிக்கும், சென்னை, சேத்துப்பட்டு ஸ்ரீ என். ஆருவமுத பிள்ளை அவர்களின் செல்வக் குமாரன் சிரஞ்சீவி I. நம்பிராஜனுக்கும், பொறையாரில் மிகவும் சிறப்பாக திருமணம் நடந்தேறியது. மணமக்களுக்கு காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராச்சாரியார் அவர்களிடமிருந்தும் மற்றும் நாட்டின் பல பாகங்களிலிருந்தும், ஏராளமான வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்தன. அன்று மாலை கானகலாதர மதுரை ஸ்ரீ மணி அய்யர் அவர்களின் இன்னிசை நடைபெற்றது.

வாழ்க கிருஷ்ணவேணி – நம்பிராஜன்

பொன்னியின் செல்வன்

கல்கி

அத்தியாயம் 55

"பைத்தியக்காரன்"

கடம்பூரிலிருந்து தஞ்சைப் பிரயாணத்தின் முதற்பகுதியில் வந்தியத்தேவன் பெரும்பாலும் நினைவிழந்த நிலையில் இருந்தான். கட்டை வண்டி ஒன்றில் அவனைக் கட்டிப் போட்டிருந்தார்கள். கரிகாலன் உயிரிழந்த அன்றிரவு புகையும் தீயும் அவனை வெகுவாக வாட்டியிருந்தன. பிரயாணத்தின்போது சிறிது நினைவு தோன்றிய போதெல்லாம் கண்களின் எரிச்சலும் உடம்பின் நோவும் அவனுக்கு அளவில்லாத வேதனையை உண்டாக்கின. அரை நினைவாக இருந்தபோது ஏதேதோ பயங்கரமான தோற்றங்கள் அவன் முன்னே தோன்றி அவனை வாட்டி எடுத்தன. வீரபாண்டியனுடைய தலை மட்டும் அவன் முகத்தருகில் வந்து "அடே! நீயா என் பழிக்குக் குறுக்கே நிற்கிறாய்?" என்று கூறிவிட்டுக் கோபமாக விழித்தது. நந்தினி சில சமயம் அணிபணி அலங்காரங்களுடன் அவன் முன்னால் நின்று புன்னகை புரிந்து அவனைத் தன் மாயவலையில் அகப்படுத்தப் பார்த்தாள். இன்னொரு சமயம் தலைவிரி கோலமாக நின்று கண்ணீர் விட்டுப் புலம்பினாள். மற்றொரு சமயம் பேய்க் கோலம் பூண்டு பயங்கரமாகச் சிரித்தாள். ஆதித்த கரிகாலனைத் தொடர்ந்து ஒரு நிழலுருவம் கையில் கத்தியுடன் வந்து கொண்டிருந்தது. வந்தியத்தேவன் அதைத் தடுப்பதற்காகப் பாய்ந்து சென்ற போதெல்லாம் இன்னொரு ராட்சத நிழல் வடிவம் பின்புறமாக வந்து அவன் கழுத்தைப்பிடித்து இறுக்கியது. கொழுந்து விட்டு எரிந்த நெருப்பில் அவனை ரவிதாஸனும் அவனுடைய தோழர்களும் தூக்கிப் போட்டார்கள். அவன் உடம்பு பற்றி எரிந்து கொண்டிருந்தபோது, கந்தமாறன் அவனைப் பார்த்து "அடே சிநேகத் துரோகி! உனக்கு நன்றாய் வேணும்!" என்றான். பார்த்திபேந்திரன் அவனைப் பார்த்து "அடே! உனக்கும் இளைய பிராட்டி குந்தவைக்கும் திருமணம் நிச்சயமாகி விட்டதா? முகூர்த்தம் எப்போது?" என்று கேட்டு விட்டு இடி இடி என்று சிரித்தான். சேந்தன் அமுதன் அவனைத் தீயிலிருந்து தப்புவிப்பதற்காக எங்கிருந்தோ ஓடி வந்தான். வைத்தியரின் மகன் பினாகபாணி ஒரு மரத்தடியில் ஒளிந்திருந்து சேந்தன் அமுதன் தலையில் ஒரு பெரிய தடியால் அடித்தான்.

உடம்பெல்லாம் தீப்பற்றி எரிந்தபோது வந்தியத்தேவனுக்குச் சகிக்க முடியாத தாகம் எடுத்தது. "தண்ணீர்! தண்ணீர்!" என்று அலற எண்ணினான். ஆனால் சத்தம் வரவில்லை. தொண்டை வறண்டு நாக்கு வீங்கி மேலண்ணத்துடன் ஒட்டிக் கொண்டு அவனைப் பேச முடியாமல் செய்தது. இந்த நிலையில் மணிமேகலை கையில் பொற் கிண்ணத்தில் தேவாமிர்தத்தை எடுத்துக் கொண்டு வந்து அவன் வாயில் ஊற்றினாள். அவளுக்கு அவன் நன்றி கூற எண்ணுவதற்குள் அவள் இருளில் மறைந்து விட்டாள்!...ஆகா! இந்தப் பெண்ணின் அன்புக்குப் பிரதியாக மூன்று உலகங்களையும் அளிக்கலாம்! ஆனால் தனக்கு என்று ஒரு சாண் அகலம் உள்ள இராஜ்யம்கூட இல்லாத நிலையில் இருக்கும்போது, மணிமேகலைக்கு மூன்று உலகங்களையும் கொடுப்பது பற்றி நினைப்பது என்ன அறிவீனம்?

அதோ பூங்குழலி! "என் காதலர்களைப் பார்!" என்று கொள்ளிவாய்ப்

பிசாசுகளை அவன் சுட்டிக்காட்டுகிறான்; என்ன அதிசயமான பெண்! "இந்த மண்ணுலகத்தில் கிடந்து ஏன் உழலுகிறாய்? பொன்னுலகத்துக்கு உன்னை அழைத்துச் செல்லுகிறேன் பார்!" என்று கூறுகிறாள். "பொன்னியின் செல்வன் உள்ள உலகத்தைத்தானே சொல்லுகிறாய்?" என்கிறான் வந்தியத் தேவன். உடனே நாலாபுற மிருந்தும் கொள்ளிவாய்ப் பிசாசுகள் வந்து அவனைச் சூழ்ந்து கொள்ளுகின்றன. வந்தியத் தேவன் பீதியடைந்து கண்களை மூடிக் கொள்கிறான். பிசாசுகள் அவனைக் கட்டித் தூக்கிக் கொண்டு போய்க் கோடிக்கரையின் மணல் மேட்டின் மேலேறிக் கீழே உருட்டி விடுகின்றன....

வந்தியத் தேவன் திடுக்கிட்டுக் கண் விழித்துப் பார்க்கிறான். கையில் தீவர்த்திகளைப் பிடித்த காவல் வீரர்கள் அவனை ஒரு படகில் ஏற்றியிருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்கிறான். இது என்ன நதியோ, தெரியவில்லை. கொள்ளிடம் அல்லது காவேரி அல்லது குடமுருட்டி ஆறாக இருக்கலாம்......இதற்குள் மறுபடியும் இருள் வந்து கவிந்து அவன் அறிவை மறைத்துக் கொள்கிறது......

இப்படி எத்தனையோ விதமான அநுபவங்களுக்குப் பிறகு திடீரென்று ஏழு கடலும் கொந்தளித்துப் பொங்குவது போன்ற சத்தம் கேட்கிறது. அவன் மேலே ஒரு பெரிய அலை வந்து மோதி அவனை மூழ்க அடிக்கிறது...இப்போது வந்தியத் தேவன் பூரணப் பிரக்ஞை வந்தவனாகக் கண்விழித்துப் பார்க்கிறான். எதிரே சற்றுத் தூரத்தில் தஞ்சாவூர்க் கோட்டை வாசல் தெரிகிறது. அவன் கட்டுண்டு கிடந்த கட்டை வண்டிக்கு முன்னும் பின்னும் நாலு புறங்களிலும் ஜனசமுத்திரமாகக் காட்சி அளிப்பதைக் காண்கிறான். அத்தனை பேரும் சேர்ந்து ஓலமிடும் ஓசைதான் ஏழுகடலும் பொங்குவது போன்ற சத்தமாகத் தனக்குக் கேட்டது என்று அறிகிறான். ஆதித்த கரிகாலரின் கடைசி ஊர்வலம் தஞ்சைக் கோட்டையை நெருங்கி விட்டபடியால்தான் அவ்வளவு கூட்டம் என்றும் தெரிந்து கொள்கிறான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் அத்தனை கூட்டமும் அவ்விடம் விட்டு அகன்று சென்று விடுகிறது. அவனும் சம்புவரையரும் மட்டும் காவலர்கள் சிலர் புடைசூழத் தஞ்சைக் கோட்டைக்குள் அழைத்துச் செல்லப்படுகிறார்கள். ஆகா! அந்த மகா வீரரின் இறுதிக் கிரியைகள் நடக்கும்போது, அவருடைய அந்தரங்கத்துக்குரிய தோழனாக இருந்த தனக்கு அருகில் இருக்கவும் இயலாமற் போயிற்று. அவனுடைய துரதிர்ஷ்டம் இதுமட்டுமா? கடைசி வரையில் அவருடைய உயிருக்கு ஆபத்து வராமல் பாதுகாக்க எவ்வளவோ முயற்சி எடுத்துத் தோல்வியடைந்த தன்பேரில் அவரைக் கொன்றதாகக் குற்றம் சுமத்தியிருக்கிறார்கள்! அவருடைய திருமேனி கடம்பூர் மாளிகையில் பிடித்த தீயிலேயே எரிந்து போகாமல், இத்தகைய மகா வீரனுக்குரிய மரியாதைகளைப் பெருந்திரளான மக்கள் செய்வது சாத்தியமாகும்படி செய்தவன் அவன். அப்படிப்பட்ட தன்னை இப்போது கொலைகாரர்களையும் சதிகாரர்களையும் அடைக்கும் பாதாளச் சிறைக்குக் கொண்டு போகிறார்கள். கொண்டு போனால் என்ன? சீக்கிரத்திலேயே தன்னைப் பற்றி இளைய பிராட்டியும் பொன்னியின் செல்வரும் விசாரிப்பார்கள். விசாரித்துத் தான் சிறையில் அடைக்கப்பட்டது தெரிந்ததும் பதை பதைப்பார்கள். உடனே சிறையின் சாவியை எடுத்துக் கொண்டு ஓடி வருவார்கள். தன்னை விடுதலை செய்வார்கள். கரிகாலரின் உயிரைத் தன்னால் காப்பாற்ற முடியாமற் போனபோதிலும் அவருக்காகத் தான் செய்த முயற்சிகளையெல்லாம் அறிந்து பாராட்டுவார்கள்.......

ஆனால் உண்மையாகவே பாராட்டுவார்களா? தன்னுடைய ஞாபகம் அவர்களுக்கு இருக்குமா? சகோதரனைப் பறிகொடுத்தவர்கள் அந்தத் துக்கத்தில் மற்றதையெல்லாம் மறந்து விட மாட்டார்களா? தான் குற்றவாளி இல்லை என்று சொன்னால்தான் நம்புவார்களா? நம்பினாலும் முன்போல் தன்பேரில் நட்புரிமை பாராட்டுவார்களா?

தங்க நாணயத் தொழிற்சாலையின் வழியாக அவனைப் பாதாளச் சிறைக்குக் கொண்டு போனபோது அவனுடைய நம்பிக்கை வர வரக் குறைந்து கொண்டு வந்தது. அந்தத் தொழிற்சாலையைச் சின்னப் பழுவேட்டரையர் சற்று முன்னதாகவே மூடி விட்டார். அந்த வழியில் அப்போது ஆங்காங்கே சிற்சில காவலர்கள் மட்டுமே நின்றார்கள். அவர்கள் பனைமரச் சின்னம் பொறித்த பட்டயங்களைப் பூண்டிருக்கவில்லை. கொடும்பாளூர் வேளார் பழைய சிறை காவலர்களையெல்லாம் அனுப்பிவிட்டுத் தம்முடைய

ஆட்களை அங்கே காவலுக்குப் போட்டிருந்தார். புதிதாகச் சிறைக்குள் வந்த இருவரையும் அவர்கள் வெறிக்க வெறிக்கப் பார்த்தார்கள். ஒருவரோடொருவர் "இவன்தான் கடம்பூர் சம்புவரையன்; இவன் வாணர் குலத்து வந்தியத் தேவன். இளவரசனைக் கொன்றவர்கள்" என்று பேசிக் கொண்டது வந்தியத் தேவன் காதில் விழுந்தது. புலிக்கூண்டுகள் இருந்த அறை வழியாக அவர்களை அழைத்துச் சென்றபோது, சோழர் குல மன்னர்களின் பிறக் கருணைக்கு அவை சின்னங்களாகத் தோன்றின. மறுபடியும் கீழிறங்கிய படிகள் வழியாக அழைத்துச் சென்று வந்தியத் தேவனை ஒரு தனி அறையில் அடைத்துப் பூட்டி விட்டுக் காவலர்கள் சென்றபோது, அவனுடைய நம்பிக்கை முழுதும் போய் விட்டது. அங்கிருந்து தான் விடுதலையாகப் போவதில்லை. உயிர் போன பிறகு தன் உடலைத்தான் ஒருவேளை அங்கிருந்து அப்புறப் படுத்துவார்கள் என்று எண்ணிக் கொண்டான். சின்னப் பழுவேட்டரையருக்கு முன்னமேயே தன்பேரில் சந்தேகம். பார்த்திபேந்திரனுக்கோ தன் பேரில் ஒரே துவேஷம். கிழவன் மலையமானுக்குப் பார்த்திபேந்திரன் பேச்சில் தான் நம்பிக்கை. பழுவேட்டரையர்கள் பரிந்து பேசிச் சம்புவரையர் பேரில் குற்றமில்லை என்று சீக்கிரத்தில் விடுதலை செய்து விடுவார்கள். தன்னை விடுதலை செய்வதற்கு யார் சிரத்தை எடுத்துக் கொள்ளப் போகிறார்கள்? ஒருவரும் இல்லை. தன்பேரில் கொலைக் குற்றமே சாட்டி விடுவார்கள். குற்றம் சாட்டிப் பகிரங்கமாக விசாரணை செய்வார்களா? விசாரித்தால் ஒருவேளை அவன் உண்மையை எடுத்துச் சொல்லிப் பார்க்கலாம். இல்லை, இல்லை! விசாரணையே செய்ய மாட்டார்கள். விசாரணை நடத்தினால் நந்தினியைப் பற்றியும் ரவிதாஸன் கூட்டத்தைப் பற்றியும் உண்மை வெளியாக வேண்டியிருக்கலாம். அதையெல்லாம் யாரும் விரும்ப மாட்டார்கள். தன்னை அச்சிறையிலேயே கிடந்து சாகும்படி விட்டு விடுவார்கள். அல்லது விசாரணை ஒன்றுமின்றிக் கரிகாலரைக் கொன்றவன் என்பதாகத் தீர்மானித்து நாற்சந்தியில் கொண்டு போய்க் கழுமரத்தில் ஏற்றி விடுவார்கள்.

தெய்வமே! முதன் முதலில் தஞ்சை நகருக்குப் புறப்பட்டு வந்தபோது அவன் உள்ளத்தில் பொங்கிக் கொண்டிருந்த உற்சாகம் என்ன? என்னவெல்லாம் பகற் கனவு கண்டு கொண்டிருந்தான்? முக்கியமாக, குடந்தை ஜோதிடர் வீட்டில் இளைய பிராட்டி குந்தவையையும் வானதியையும் சந்தித்ததிலிருந்து அவன் எப்படிப்பட்ட குதூகலக் கடலில் மிதந்து கொண்டு இந்தத் தஞ்சைக்கு வந்தான்! அப்போது சின்னப்பழுவேட்டரையர் தன்னை ஒற்றன் என்று சந்தேகித்துப் பாதாளச் சிறையில் அடைத்து விடுவாரோ என்று அவன் சிறிது அஞ்சியதுண்டு. அது இப்போது வேறொரு விதத்தில் உண்மையாகி விட்டதே! வான வெளியில் உல்லாசமாகத் திரிந்து பறக்கும் பறவையைப் போல் வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த தன்னை இந்த இருளடைந்த அறையில் பூட்டி விட்டார்களே! இதில் தன்னால் எத்தனை காலம் இருக்க முடியும்? முடியாது! முடியாது! உயிரை விடுவதற்கு ஏதேனும் விரைவில் வழிதேட வேண்டியதுதான்......

இவ்வாறெல்லாம் எண்ணி எண்ணி ஏக்கமடைந்து செயலற்று உட்கார்ந்திருந்தான் வந்தியத் தேவன்.

அந்தச் சமயத்தில் பக்கத்து அறையில் யாரோ தொண்டையைக் கனைப்பது கேட்டது. சற்று நேரத்துக்கெல்லாம் கர்ண கடூரமான குரலில்,

"பொன்னார் மேனியனே!......"

என்ற தேவாரப் பாடலும் கேட்டது.

வந்தியத்தேவனுக்கு உடனே சேந்தன் அமுதனுடைய ஞாபகம் வந்தது. பாடியவன் அவன் இல்லை. சேந்தன் அமுதனுடைய குரல் தெய்வீகமான இனிமை பொருந்தியது. இப்போது பாடுகிற குரல் கர்ண கடூரமானது. ஆயினும் அதே பாடலை இங்கே பாதாளச் சிறையில் இருப்பவன் பாடும் காரணம் என்ன?

சிவ, சிவா! காதால் கேட்க முடியவில்லை. பாதாளச் சிறையில் அடைபட்டிருப்பது போதாது என்று இந்த அபூர்வமான சங்கீதத்தைக் கேட்கும் தண்டனை வேறேயா?

"யார், அப்பா, அங்கே?" என்றான் வந்தியத் தேவன்.

"நான் தான் பைத்தியக்காரன்!" என்று பதில் வந்தது.

"அப்பா! பைத்தியக்காரா! கருணை கூர்ந்து உன் பாட்டை நிறுத்து!"

"ஏன்? என்னுடைய பாட்டு உனக்குப் பிடிக்கவில்லையா?"

"பிடிக்காமல் என்ன? உன் பாட்டு எனக்கு ரொம்பரொம்பப் பிடிக்கிறது!"



"பாட்டை நிறுத்திய பிறகு ரொம்பப் பிடிக்கிறதாக்கும்!"

"அப்படி ஒன்றும் நீ பைத்தியக்காரனுகத் தெரியவில்லை. இந்தப் பாட்டை உனக்கு யார் சொல்லிக் கொடுத்தது?"

"நீ இப்போது இருக்கும் அறையில் சில காலத்துக்கு முன்பு இன்னொரு வாலிபன் வந்திருந்தான். சில நாட்கள் தான் அவன் இருந்தான். அப்போது அவன் ஓயாமல் இந்தப் பாட்டைப் பாடிக் கொண்டிருந்தான்! எனக்கு அது பாடமாகி விட்டது" என்ருன்.

வந்தியத் தேவன் உடனே அந்த வாலிபன் சேந்தன் அமுதன்தான் என்று தீர்மானித்துக் கொண்டான். தான் தப்பித்துச் செல்வதற்கு உதவி செய்ததற்காகச் சேந்தன் அமுதனைச் சின்னப் பழுவேட்டரையர் சில நாட்கள் பாதாளச் சிறையில் அடைத்திருந்தார் என்பதைக் கேள்விப் பட்டிருந்தான். இந்த அறையில் இருந்தவன் அவனுகத் தான் இருக்க வேண்டும். ஆகா! சேந்தன் அமுதன் எவ்வளவு தங்கமான பிள்ளை! எத்தகைய அருமையான சிநேகிதன்!

"இந்த அறையில் சிலநாள் இருந்த வாலிபன் யார்? உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

"தெரியாமல் என்ன? அவன் பெயர் சேந்தன் அமுதன். யாரோ ஒரு ஊமைச்சியின் மகனும்! உண்மையில் அவன் யார் என்பது மட்டும் உலகத்துக்குத் தெரிந்தால்?......"

"தெரிந்தால் என்ன ஆகும்?"

"உலகமே தலைகீழாகப் போய்விடும்!"

"உலகம் தலை கீழானால், நமக்கு இந்தப் பாதாளச் சிறையிலிருந்து விடுதலை கிடைக்குமா?"

"நிச்சயமாய்க் கிடைக்கும்?"

"அப்படியானால் அவன் யார் என்று தான் சொல்லேன்?"

"அவ்வளவு சுலபமாக உன்னிடம் சொல்லி விடுவேனா? அதைச் சோழ சக்கரவர்த்தியின் காதிலே மட்டுந்தான் சொல்வேன்! இன்னும் சுந்தர சோழர்தானே சோழ நாட்டின் சக்கரவர்த்தியா யிருக்கிறார்?" என்று கேட்டான்.

"ஆமாம்; அதைப் பற்றி உனக்கு என்ன சந்தேகம்!"

"சில நாளைக்கு முன்பு இங்கே சில மாறுதல்கள் நடந்தன. பழைய சிறைக் காவலர்கள் எல்லாம் மாறிப் புதிய சிறைக் காவலர்கள் வந்தார்கள். தங்க நாணய வார்ப்படச் சாலையை மூடிவிட்டார்கள். அதை மூடாதிருந்த போது, கன்னார்கள் வேலை செய்யும் சத்தம் இடை விடாமல் கேட்டுக் கொண்டிருக்கும்."

"ஏன் மூடி விட்டார்கள்! ஏன் காவற்காரர்கள் மாறினார்கள்?"

"சின்னப் பழுவேட்டரையர் கோட்டைக் காவலை விட்டு ஓடிப் போய் விட்டாராம். கொடும்பாளூர் வேளார் தஞ்சைக் கோட்டையைப் பிடித்துக் கொண்டாராம். காவற்காரர்களின் பேச்சிலிருந்துதான் இவைகளைத் தெரிந்து கொண்டேன்......"

"ஓகோ! அதுவும் அப்படியா?" என்றான் வந்தியத்தேவன். உண்மையிலேயே அவன் பெரு வியப்படைந்தான்.

கொடும்பாளூர் பூதி விக்கிரம கேசரி தன்னை நன்கு சோதித்து அறிந்தவர். அவர் ஒருவேளை தன் பேச்சை நம்பித் தன்னை விடுதலை செய்வாரா?—அவரால் தான் அது எப்படி முடியும்? யாராலேதான் முடியும்? இளவரசர் கரிகாலரைக் கொன்றவன் என்று குற்றம் சாட்டப் பட்டவனை யார்தான் எளிதில் விடுதலை செய்துவிட முடியும்?

"என்ன, தம்பி, மௌனமாகி விட்டாய்? மறுபடியும் பாடத் தொடங்கட்டுமா?" என்று பைத்தியக்காரன் தொண்டையைக் கனைத்தான்.

"வேண்டாம், வேண்டாம்! நீ கூறியதைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன். சேந்தன் அமுதன் ஊமைச்சியின் மகன் அல்லவென்று சொன்னாயே?



பின், அவன் யாராயிருக்கும் என்று யோசிக்கிறேன்."

"அந்தப் பேச்சை விட்டு விட்டு வேறு ஏதாவது சொல்லு!"

"உன்னை எதற்காகப் பைத்தியக்காரன் என்று சொல்லிக் கொள்கிறாய்?"

"இங்கே வந்தவர்கள் எல்லாரும் என்னைப் பைத்தியக்காரன் என்று சொல்லுவதினாலேதான்."

"ஏன் அப்படி அவர்கள் எல்லாரும் சொல்லுகிறார்கள்?"

"ஈழத்தில் பாண்டிய வம்சத்து மணி மகுடமும் தேவேந்திரன் அளித்த இரத்தின ஹாரமும் இருக்குமிடம் எனக்குத் தெரியும். என்னை விடுதலை செய்தால் அவை இருக்குமிடம் சொல்வேன் என்று இங்கே வருகிறவர்களிடமெல்லாம் நான் சொல்வதுண்டு. அதற்காக என்னைப் பைத்தியம் என்கிறார்கள்."

"உன்னைப் பைத்தியம் என்கிறவர்கள் தான் உண்மைப் பைத்தியக்காரர்கள்."

"நீ என் வார்த்தையை நம்புகிறாயா?"

"பரிபூரணமாக நம்புகிறேன். ஆனால் நான் நம்பி என்ன பயன்! உனக்கு என்னால் ஒரு உதவியும் செய்ய முடியாதே?"

"அப்படிச் சொல்லாதே! நீ இப்போது இருக்கும் அறையில் அடைக்கப்படுகிறவர்கள் எல்லாரும் சீக்கிரத்தில் விடுதலை செய்யப்படுவது வழக்கமாயிருந்து வருகிறது" என்று சொன்னான்.

"அது என்ன வழக்கம்? சில உதாரணங்கள் சொல், பார்க்கலாம்."

"யாரோ வைத்தியர் மகன் ஒருவன், பினாகபாணி என்கிறவன், உன் அறையில் அடைக்கப்பட்டிருந்தான். அவனைப் பழுவூர் ராணி நந்தினி தேவி வந்து விடுதலை செய்து அழைத்துப் போனாள். அந்த அறையிலேயே சேந்தன் அமுதன் இருந்தான். அவனைக் குந்தவை தேவியும் கொடும்பாளூர் இளவரசியும் வந்து விடுதலை செய்தார்கள்...."

வந்தியத் தேவன் ஒரு நெடிய பெருமூச்சு விட்டு விட்டு, "அந்த மாதிரி என்னை வந்து விடுதலை செய்ய எந்த ராணியும் இளவரசியும் வர மாட்டார்கள்!" என்றான்.

"அப்படியானால் நானே உன்னை விடுதலை செய்கிறேன்" என்றான் அடுத்த அறையில் இருந்தவன்.

"இப்போது தான் நீ பைத்தியக்காரன் போலப் பேசுகிறாய்!" என்றான் வல்லத் திளவரசன் வந்தியத் தேவன்.

"இல்லை; என் வார்த்தையை நம்பு!"

"வேறு வழியில்லை; உன்னை நம்பித் தான் தீரவேண்டும்."

"அப்படியானால், இன்றிரவு காவலர்கள் வந்து நமக்கு உணவு அளித்து விட்டுப் போகும் வரையில் பொறுமையுடன் இரு!" என்றான் பைத்தியக்காரன் என்று பெயர் வாங்கியவன்.

அத்தியாயம் 56

"சமய சஞ்சீவி"

அன்றிரவு கடைசிக் காவலன் வந்து விட்டுப் போனதும், வந்தியத் தேவன் அடுத்த அறையிலிருந்த பைத்தியக்காரன் என்ன சொல்லப் போகிறான் என்று அறிய ஆவலுடன் காத்திருந்தான்.

அந்த அறையின் ஒரு பக்கத்துச் சுவரில் எலி பிறாண்டுவது போல் ஏதோ சத்தம் கேட்டது. வந்தியத் தேவனுக்குப் புலி சிங்கத்தினிடம் பயமில்லை; ஆனால் பூனைகளுக்கும் எலிகளுக்கும் பயம். இரவெல்லாம் அந்த இருளடர்ந்த அறையில் எலிகளுடன் காலங் கழிக்க வேண்டுமோ என்று கவலைப்பட்டவனாக, "பைத்தியக்காரா! தூங்கிப் போய் விட்டாயா?" என்று கேட்டான்.

அதற்குப் பதில் ஒன்றும் வரவில்லை.

எலி பிறாண்டும் சத்தம் மட்டும் பொதுவாகக் கேட்டுக் கொண்டிருந்தது.

சற்று நேரத்துக்கெல்லாம் சுவரிலிருந்து சில கற்கள் பெயர்ந்து விழுந்து துவாரம் ஒன்று உண்டாயிற்று.

அதன் வழியாகப் பைத்தியக்காரன் குரல், "அப்பனே! தூங்கி விட்டாயா?" என்று கேட்டது.

"இல்லை; தூங்கவில்லை. உனக்காகத் தான் காத்திருக்கிறேன். இது என்ன வேலை?" என்றான் வந்தியத் தேவன்.

"இது ஆறு மாதத்து வேலை. அதற்கு முன்னால் என் கைச் சங்கிலியைத் தறித்துக் கொள்வதற்கு ஆறு மாதம் பிடித்தது" என்றான் பைத்தியக்காரன்.

சற்று நேரத்துக்கெல்லாம் துவாரத்தை இன்னும் பெரிதாகச் செய்து கொண்டு வந்தியத் தேவனுடைய அறைக்குள்ளே அவன் புகுந்தான்.

வந்தியத் தேவன் அவனுடைய கரங்களைப் பிடித்து இறக்கி விட்ட பிறகு,

"இவ்வளவு கஷ்டப்பட்டு இந்தச் சுவரில் துவாரம் செய்தாயே? இதில் என்ன பயன்? வெளிச் சுவரில் துவாரம் போட்டாலும் பயன் உண்டு!" என்றான்.

"இங்கிருந்து வெளிச்சுவர் என்பதே கிடையாது. புலிக் கூண்டு அறையின் வழியாகத்தான் வெளியேற முடியும். இந்த அறை சில சமயம் காலியாக இருப்பதுண்டு. அப்போது பூட்டப்படாமலு மிருக்கும். ஆகையால், என் அறையிலிருந்து தப்பிச் செல்வதைவிட இங்கிருந்து தப்புவது சுலபம்."

"இன்றைக்கு வந்த என்னை நம்பி இதை வெளிப்படுத்தி விட்டாயே? நான் உன்னைக் காட்டிக் கொடுத்து விட்டால் என்ன செய்வாய்?"

"ஒருவனை நம்பலாம், நம்பக் கூடாது என்பதைக் குரலிலிருந்தே கண்டு பிடிக்கலாம். சேந்தன் அமுதனை நம்புவேன்; ஆனால் பினாகபாணியை நம்பமாட்டேன். உன் குரலிலிருந்து உன்னை நம்பலாம் என்றும் முடிவு செய்தேன். மேலும் தப்பிச் செல்லும் காரியம் இப்போது நடந்தால்தான் நடந்தது. சரியான சந்தர்ப்பம் இதுதான்!"

"அது ஏன்?"

"காவற்காரர்கள் மாறியிருக்கிறார்கள் என்று சொன்னேன் அல்லவா? அவர்களில் இரண்டு பேர் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டேன். புலிக் கூண்டைத் திறந்து விடுவதைப் பற்றி அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். 'புலிக் கூண்டைத் திறக்கும்போது நம் பேரிலேயே புலி பாய்ந்து விட்டால் என்ன செய்கிறது?' என்று ஒருவன் கேட்டான். அதற்கு மற்றவன் 'சாகவேண்டியதுதான்!' என்றான். இதிலிருந்து அவர்கள் புலிக்கூண்டைத் திறக்கமாட்டார்கள் என்பது நிச்சயம். புதிய காவற்காரர்களாதலால் திடீரென்று பாய்ந்து சென்று தப்பித்துக் கொள்ளலாம் என்று என் எண்ணம். எப்படியிருந்தாலும், இங்கேயே கிடந்து சாவதைக் காட்டிலும் விடுதலைக்கு ஒரு முயற்சி செய்து பார்ப்பது நல்லதல்லவா?"

"உண்மைதான்!"

"ஒருவனாக முயற்சி செய்வதைக் காட்டிலும் இரண்டு பேராக முயற்சி செய்வது எளிது. நீ என்னைப் போல் இல்லை; புதிதாக வந்தவன். நல்ல திடகாத்திரனாயிருக்கிறாய். இரண்டு காவலர்களை நாம் இருவரும் கட்டிப் போட்டு விட்டு அவர்களிடமிருந்து சாவிகளைப் பிடுங்கிக் கொண்டு வெளியேறலாம் அல்லவா?"

"நல்ல யோசனைதான். எப்பொழுது புறப்படலாம்?"

"கொஞ்சம் பொறு; சரியான சமயம் பார்த்துச் சொல்கிறேன்."

"நானும் ரொம்பக் களைத்துப்போயிருக்கிறேன். ஒரு நாள் — இரண்டு நாள் போனாலும் நல்லதுதான்."

பிறகு, அந்தப் பைத்தியக்காரன் அவன் சிறையிலிருந்த காலத்தில் வெளி உலகில் நடந்த முக்கிய சம்பவங்களையெல்லாம் வந்தியத் தேவனிடம் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

ஆதித்த கரிகாலர் இறந்தார் என்று கேட்டதும், "ஆகா! அப்படியானால் நாம் இப்போது வெளியேறுவது மிக முக்கியம்!" என்றான்.

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?"

"அடுத்தபடி இராஜ்யத்துக்கு யாரையாவது இளவரசுப் பட்டம் கட்டவேண்டும் அல்லவா?"

"இளவரசுப் பட்டம் என்ன? சக்கரவர்த்தி உடல் நோயினாலும் மனச்சோர்வினாலும் பீடிக்கப் பட்டிருக்கிறார். இராஜ்ய பாரத்தை அடியோடு விட்டு நீங்க விரும்புகிறார்!"

"யாருக்கு மகுடம் சூட்டுவதாகப் பேச்சு நடக்கிறது?"

"சிற்றரசர்கள் சிலர் மதுராந்தகருக்குப் பட்டம் கட்ட விரும்புகிறார்கள். மற்றும் சிலர் பொன்னியின் செல்வருக்கு மகுடம் சூட்ட விரும்புகிறார்கள்!"

"சக்கரவர்த்தியின் கருத்து என்ன?"

"இராஜ்யத்தில் வீண் சண்டை ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு மதுராந்தகர் சிங்காதனம் ஏறுவதையே சக்கரவர்த்தி விரும்புகிறாராம்."

"அப்படியானால், நாம் சீக்கிரத்தில் வெளியேற வேண்டியது ரொம்ப ரொம்ப அவசரமாகிறது!" என்றான் அந்தப் பைத்தியக்காரன்.

பிறகு, அவன் ஈழ நாட்டில் பாண்டியர் மகுடமும் இரத்தின ஹாரமும் இருக்குமிடம் பற்றித் தான் தெரிந்து கொண்ட விதத்தை விவரமாகக் கூறினான்.

சோழ குலத்து இரகசியத்தைப் பற்றி மறுபடியும் வந்தியத் தேவன் கேட்டதற்கு, "அதை இப்போது சொல்ல மாட்டேன். இருவரும் தப்பிப் பிழைத்து வெளியேறினோமானால் சொல்லுவேன். இல்லாவிடில் அந்த இரகசியம் என்னோடு மடிய வேண்டியதுதான்!" என்றான்.

வந்தியத் தேவனுடைய உள்ளம் தீவிரமாகச் சிந்தனையில் ஆழ்ந்தது. அந்தப்

பைத்தியக்காரன் சொல்லக் கூடிய அத்தகைய இரகசியம் என்னவா யிருக்கும் என்று ஊகிக்கப் பார்த்தான். பற்பல நிழல் போன்ற நினைவுகள் அவனுடைய மனத்திரையில் தோன்றி மறைந்தன.

*   *   *

திடீரென்று வைத்தியர் மகனைப் பார்த்ததும் வந்தியத் தேவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. தானும் அடுத்த அறையில் உள்ளவனும் சேர்ந்து செய்திருக்கும் யோசனைக்கு இவன் தடை போட்டு விடுவானோ என்று கவலைப் பட்டான். பினாகபாணியின் நயவஞ்சகப் பேச்சை அவன் நம்ப வில்லை. அவனும் பைத்தியக்காரனும் இவ் விஷயத்தில் ஒரு மனமுடையவர்களா யிருந்தார்கள். ஏதோ துர் எண்ணத்துடனேதான் பினாகபாணி வந்திருக்கிறான் என்று முடிவு செய்து கொண்டார்கள். ஒருவரைச் சிறையில் விட்டு விட்டு இன்னொருவர் வெளியேறிப் போவதில்லை யென்று சபதம் எடுத்துக் கொண்டார்கள். மறுபடியும் பினாகபாணி வந்தால் என்ன செய்கிறது என்றும் தீர்மானித்துக் கொண்டார்கள்.

எனவே, இரண்டாவது தடவை பினாகபாணி வந்தபோது இருவரும் மூன் ஜாக்கிரதையாக இருந்தார்கள். பைத்தியக்காரனிடம் முத்திரை மோதிரத்தைக் காட்டி அவனுடைய இரகசியத்தைச் சொல்லும்படி வைத்தியர் மகன் கேட்டுக் கொண்டிருந்தபோது வந்தியத் தேவன் இரண்டு அறைகளுக்கும் நடுவில் சுவரில் ஏற்கெனவே செய்திருந்த துவாரத்தின் வழியாக ஓசைப்படாமல் புகுந்து அந்த அறைக்குள்ளே வந்தான்.

பினாகபாணி திரும்பி அவனைத் தாக்கவே, இருவரும் துவந்த யுத்தம் செய்தார்கள். வேறு சமயமா யிருந்தால் வந்தியத்தேவன் வைத்தியர் மகனை ஒரு நொடியில் வென்று வீழ்த்தியிருப்பான். மேலே நெருப்புச் சுட்ட புண்கள் இன்னும் நன்றாக ஆறாதபடியாலும், காளாமுக ராட்சதன் அவனுடைய தொண்டையைப் பிடித்து அமுக்கிய இடத்தில் இன்னும் வலித்துக் கொண்டிருந்த படியாலும் துவந்த யுத்தம் நீடித்தது. அச்சமயத்தில் பைத்தியக்காரன் கையில் சங்கிலியுடன் வந்து பினாகபாணியின் கழுத்தில் போட்டு இறுக்கினான். பினாகபாணி கீழே விழுந்தான்.

பிறகு, இருவருமாக அவனை அந்த அறையின் சுவர்களில் இருந்த இரும்பு வளையங்களுடன் சேர்த்துக் கட்டினார்கள். அப்படிக் கட்டும்போதே வந்தியத் தேவன், "பினாகபாணி! நாம் இருவரும் சக்கரவர்த்தியைக் குணப்படுத்துவதற்காகச் சஞ்சீவி மூலிகையைத் தேடி ஈழ நாட்டுக்குப் போனோமே, நினைவு இருக்கிறதா? அப்போது நாம் சஞ்சீவி கொண்டு வருவதில் வெற்றி பெறவில்லை. ஆனால் இப்போது நீ எங்களுக்குச் 'சமய சஞ்சீவி'யாக வந்து சேர்ந்தாய்! இந்த உதவிக்காக மிக்க வந்தனம். வைத்தியர் மகனாகிய நீ இனி மேல் வைத்தியத்துடன் நிற்பது நல்லது. ஒற்றன் வேலையில் தலையிட்டு ஏன் வீணாகக் கஷ்டத்தை விலைக்கு வாங்கிக் கொள்கிறாய்?" என்று சொன்னான்.

பினாகபாணி அதற்கு ஒன்றும் பதில் சொல்லவில்லை. திடீரென்று நேர்ந்த இந்த விபத்தினால் அவன் பேச்சிழந்து நின்றான். ஆனால் அவனுடைய கண்கள் மட்டும் கோபக் கனலைக் கக்கின என்பது அவன் கொண்டு வந்து கீழே போட்டிருந்த தீவர்த்தி வெளிச்சத்தில் நன்றாகத் தெரிந்தது.

பின்னர் இருவரும் வைத்தியர் மகன் கொண்டு வந்திருந்த அதிகார முத்திரையைக் கைப் பற்றிக் கொண்டார்கள். பினாகபாணி தலையில் சுற்றி யிருந்த துணியை எடுத்து வந்தியத் தேவன் தன் தலையில் சுற்றிக் கொண்டான்.

அந்த அறையிலிருந்து வெளி வந்து கதவைப் பூட்டினார்கள். பிறகு மெள்ள மெள்ள நடந்து பாதாளச் சிறையின் படிக்கட்டில் ஏறினார்கள். வழி சரியாகத் தெரியாதவர்க ளாதலால், நிதானமாக அங்கு மிங்கும் பார்த்துக் கொண்டு நடந்தார்கள். புலிகளின் உறுமல் சத்தம் கேட்டதும் இருவருக்கும் மேலே போகச் சிறிது தயக்கமாகவே இருந்தது. ஒரு வேளை, தாங்கள் தப்புவதை எப்படியோ அறிந்து புலியைக் கூண்டிலிருந்து அவிழ்த்து விட்டிருப்பார்களோ?

வந்தியத் தேவனும் பைத்தியக்காரனும் புலிக் கூண்டு அறைக்குள்ளே மெதுவாக எட்டிப் பார்த்தார்கள்.

அந்த அறையில் அச்சமயம் ஒரே ஒரு காவலன்தான் இருந்தான். உறுமிய புலிகள் இருந்த கூண்டை அவன் உற்று நோக்கிக் கொண்டிருந்தான். ஒரு வேளை புலிக் கூண்டைத் திறந்து புலிகளைத் தங்கள் மீது ஏவிவிட அவன் யோசிக்கிறானோ, என்ன? அச்சமயம் வைத்தியர் மகன் கூச்சல் போட ஆரம்பித்திருந்தான். அந்தக் கூச்சல் இக்காவலனுடைய சந்தேகத்தைக் கிளப்பி விட்டிருக்கலாம் அல்லவா? பினாகபாணியின் வாயில் துணியை அடைத்து விட்டு வராதது எவ்வளவு தவறாகப் போயிற்று?

சைக்கிள் வேணு

ஞானம்

படை பதைக்கும் அந்த வெய்யிலில், ஒரு சிறு கூடையில் உணவுப் பாத்திரத்தை வைத்துத் தலையில் தூக்கிக் கொண்டு வேகமாக நடந்து கொண்டிருந்தாள் ஒரு சிறுமி. பொடி மணலின் சூடு தாங்காமல் தத்தளித்துப் போனாள். எப்படியோ தட்டுத் தடுமாறித் தெருக் கோடியிலிருந்த சைக்கிள் கடையை அடைந்தாள்.

''ஏன் ரங்கம்! மாமா கடைக்கு வந்ததும் நானே வீட்டுக்கு வர மாட்டேனா! மண்டை வெடிக்கிற இந்த வெய்யிலில் நீ ஒரு நாளைப் போல் தினம் சாப்பாடு எடுத்து வரணுமா!'' என்றான் வேணு கனிவுடன், ரங்கத்தின் தலையிலிருந்த கூடையை இறக்கி வைத்துக் கொண்டே.

ரங்கத்தால் பேச முடியவில்லை. தாகம் தொண்டையை வறட்டிற்று. 'உஸ், உஸ்' என்று பெருமூச்சு விட்டுக் கொண்டு உள்ளங் கால்களைத் தடவிக் கொண்டாள். பூப் போன்ற அந்தப் பாதங்கள் கன்றிச் சிவந்து போயிருந்தன.

''ஒரு வாய் தண்ணீர் குடி'' என்று டம்ளரை நீட்டினான். மேல் துண்டைக் குளிர்ந்த நீரில் நனைத்து அவள் முகத்தைத் துடைத்து விட்டான்.

''ரங்கம்! வெய்யிலில் நீ தினம் வந்தால் உடம்புக்காகாது. மாமா வந்ததும் நானே வந்து விடுகிறேன். உனக்கு ஏன் சிரமம்!'' என்றான் பரிவுடன்.

'அப்பா தூங்கி யெழுந்து காப்பி குடித்து விட்டு நாலு மணிக்குத் தானே கடைக்கு வருவாரு. நீ அதுவரையில் பட்டினி கிடக்கிறதா, வேணு! சாப்பிட்டு விட்டு வீட்டிலிருந்து கடைக்கு வந்தாயானால் அப்பவே ஜீரணமாயிடும். சின்னம்மா கொடுக்கிற சோறு வயிற்றுக்குப் போதுமா!'' என்று கூறி அச்சிறுமி அநுபவசாலியான ஒரு தாயார் போல் அன்புடன் வேணுவுக்கும் பரிமாற ஆரம்பித்தாள். காலையில் ஒரு மணிக்கு, ஒரு டம்ளர் பழைய சோற்றுக் கரைச்சலைக் குடித்து விட்டு, பகல் இரண்டு மணிவரை ஒட்ட ஒட்டக் கிடக்கும் வேணு, 'லபக் லபக்' கென்று நாலே கவளத்தில் இலையைக் காலி செய்துவிட்டு, ''இன்னிக்குக் குழம்பு மிகவும் ஜோர்'' என்றான்.

அவன் சாப்பிடுவதையே பார்த்துக் கொண்டிருந்த ரங்கம் கண்களில் நீர் ததும்ப, ''சின்னம்மா இரண்டு கரண்டி குழம்புதான் ஊத்தினாங்க! நான் என்ன செய்யட்டும் வேணு!'' என்று நெஞ்சம் தழுதழுக்கக் கூறினாள்.

''அப்பாடா! இதுவே வயிறு ரொம்பி மூச்சுத் திணறுது. இன்னும் எத்தனை சாப்பிடுவது! என்னைச் சாப்பாட்டு ராமன்னு நினைத்து விட்டாயா! வயிற்றில் இனி இடமே இல்லை'' என்று புளுகினான் வேணு. உண்மையில் அவன் வயிற்றில் ஒரு தவலைச் சோற்றுக்குக் கூட இடம் இருந்தது.

''பார் ரங்கம்! நேத்திக்கு ரிப்பேருக்கு வந்த சைக்கிள் சுத்த 'லோடு'தாவா யிருந்தது. அர்ஜெண்டா இரண்டே நாளில் நல்லா ரிப்பேர் செய்து வைத்தால் ஐந்து ரூபாய் தருவதாய்ப் பேச்சு. இந்தக் கிராக்கி வந்தது மாமாவுக்குக் கூடத் தெரியாது. நேற்றும் இன்றும் மாமா சாப்பாட்டுக்குப் போனதும் ரிப்பேர் செய்ய ஆரம்பித்து இன்று முடித்து விட்டேன். பழைய காலத்து வண்டி: ஏகப்பட்ட வேலையும் இருந்தது. ரங்கம்! இந்த ஐந்து ரூபாய்க்கு அலமேலுக்கு வாங்கியிருக்கிற பச்சை நிறப் பாவாடை மாதிரி ஆசைப் பட்டாயே, வாங்கித் தைத்துத் தந்து விடுகிறேன்'' என்று கனிவுடன் கூறினான் வேணு.

''ஐயோ! வேண்டாம் வேணு! பாவாடை தைத்தால் எப்படியும் சின்னம்மாவுக்குத் தெரியாமல் போகாது. அப்புறம் திருட்டுப் பிழைப்பா செய்யறேன்னு அப்பா உன்னையும் அடிப்பாரு...



அக்டோபர் மீ 11-ல் தியாகராஜநகர் வாணி மகாலில் குமாரி சித்ரலேகாவின் பரதநாட்டியக் கச்சேரி சிறப்பாக நடந்தேறியது. முதல் மந்திரி ராஜாஜி உள்படப் பிரமுகர்கள் பலர் சபையில் வீற்றிருந்து குமாரியின் நாட்டியத் திறமையைப் பாராட்டி மகிழ்ந்தனர். குமாரி சித்ரலேகாவின் பெற்றோர்களான டாக்டர் ராஜகோபாலன், டாக்டர் சந்தகந்தரி ஆகியவர்களை ராஜாஜி பாராட்டும் காட்சியை மேலேயுள்ள படத்தில் காணலாம்.

நீ சொல்லிக் கிட்டிருந்தயே, 'சீனிவாசு இங்கிலீஷ் புஸ்தகம் மாதிரி ஒன்னு வாங்கிப் படிக்கணும் என்று. அதை வாங்கிக் கொண்டேன்."

"அதுவா! சீனுவாசு தன் புஸ்தகத்தை எல்லாம் பழைய பேப்பர்க்காரனுக்குப் போட்டு விட்டான். நான் அதை மலிவாக ஒரு ரூபாய்க்கு எல்லாத்தையும் வாங்கியாச்சு. மாடிமேலே இருக்கிற வாத்தியார், 'தெரியாத போனால் கேளு. சொல்லித் தரேன்' என்று சொல்லியிருக்கிறார்" என்று களிப்புடன் கூறினான்.

படிப்பு என்றதுமே வேணுவின் முகம் மலர்வதைக் கண்ட ரங்கம் "பாவம், வேணு! படிக்க எத்தனை ஆசைப்படுது! சின்னம்மா ஒரே பிடிவாதமாகப் படிக்க வேண்டாம், சம்பளம் கட்ட முடியாது என்று கடையில் வைச்சுட்டார்!" என்று மனசுக்குள் அனுதாபப் பட்டாள்.

"பணத்தை ஒளிச்சு ஒளிச்சு வைத்துச் செலவிட்டால் அவ்வளவுதான் ஜாக்கிரதை!" என்ற ரங்கம் விழப்போகும் அடிகளை நினைத்து உடலைக் குலுக்கிக் கொண்டாள்.

"சரி, நான் வேறு புஸ்தகங்கள் வாங்கிக் கொள்ளுகிறேன்" என்றான் வேணு.

மணி மூன்றடித்தது. "அம்மாடி! மூணுமணி ஆயிடுச்சே! சின்னம்மா திட்டும், நான் போகிறேன். துணி துவைக்கணும். அலமேலு பாவாடைக்குச் சவுக்காரம் போட்டு வைச்சிருக்கு" என்று கூறிக் கொண்டே பரபரப்புடன் எழுந்தாள் ரங்கம்.

"பார்த்துப் போ. கார் வரப்போகுது" என்றான் வேணு. ரங்கம் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே நடந்தாள்!

* * *

கோபால் நாயுடுவின் காலஞ்சென்ற மூத்த தாரத்தின் பெண் ரங்கம். அவருடைய சகோதரி மகன் வேணு. பிறந்ததுமே தாய் தந்தையரை உருட்டி விட்டு மாமன் வீடு வந்து சேர்ந்தவன். கோபால் நாயுடுவுக்கு இளையாளாக வந்த பங்கஜம் மாற்றாந் தாய் என்ற ஸ்தானத்திற்காகவே பிறந்தவள். ரங்கத்தை எவ்வித மெல்லாம் கொடுமைப் படுத்த முடியுமோ அப்படியெல்லாம் துன்புறுத்துவாள். 'துடைகாலி' வேணு கால்வைத்த இடத்திலேயே தரித்திரம் ஒட்டிக் கொள்ளும் என்று தூஷிப்பாள். அவனை நாலு வகுப்பு வரை பள்ளிக் கூடம் போக அனுமதித்திருந்தாள். பிறகு நோட்டு, புஸ்தகம், செலவு அதிகமாகிறதென்று சொல்லி நிறுத்தி விட்டாள். ஜலம் இழுப்பது, கடைகண்ணிக்குப் போவது, பங்கஜத்துக்குப் பிறந்த இரட்டைக் குழந்தைகளான சீனுவாசனையும், அலமேலுவையும் அழவிடாமல் பார்த்துக் கொள்ளுவது என்று ஏகப்பட்ட பொறுப்புகள் வேணு தலைமீது விழுந்தன.

ரங்கம் சின்னஞ்சிறு சிறுமிதான் என்றாலும், அவள் பெண் பிள்ளை ஆயிற்றே! அவள் ஓடியாடி விளையாடவும், பள்ளிக்கூடம் போகவும் பங்கஜம்





யுனைடெட் கமர்ஷியல் பாங்கியின் குறுகிய கால கடன் வசதி பெறும் சலுகையைப் பெற்றுக் கொண்டு சென்னை நகரசபை புதிதாகக் கணக்கு வைத்துக் கொள்வதை யொட்டி நவம்பர் 19உ யன்று பாங்கியின் காரியாலயத்தில் ஒரு விழா நடை பெற்றது. இந்த வைபவத்துக்கு டாக்டர் ஸி. பி. ராமசாமி ஐயர் அவர்கள் தலைமை வகித்தார். நகரசபை கமிஷனர் ஸ்ரீ சுப்பராயன், நகரசபை உத்தியோகஸ்தர்கள், மற்றும் சென்னை நகரப் பிரமுகர்கள் பலரும் விஜயம் செய்து விழாவைச் சிறப்பித்தனர். மேற்படி பாங்கியின் டெபுடி ஜெனரல் மானேஜர் ஸ்ரீ எஸ். டி. சதாசிவன் அவர்களிடம் சென்னை நகரசபை மேயர் ஸ்ரீ பரமேஸ்வரன் ஐந்து லட்சம் ரூபாய் செக் ஒன்றைக் கொடுத்துக் கணக்கை ஆரம்பித்து வைக்கும் காட்சியையும், பாங்கியின் சென்னைக் கிளை மானேஜர் ஸ்ரீ என். ஆர். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வந்தனோபசாரம் கூறுவதையும் படத்தில் காணலாம்.

சம்மதிப்பாளா! அதிலும், கைக் குழந்தைக்காரி தான் ஒண்டியாக அலையும் பொழுது! வீட்டு வேலைகளை ரங்கமே செய்ய வேண்டியிருந்தது.

வேணுவும் ரங்கமும், இனம் தெரியாத இளம் வயதிலேயே அன்பால் கட்டுண்டு விட்டனர். பங்கஜத்திடம் ரங்கம் கஷ்டப்படுகிறாளே என்று வேணு வருந்துவான்; வேணு கஷ்டப்படுகிறானே என்று ரங்கம் கண்ணீர் வடிப்பாள். ஒருவருக் கொருவர் ஆறுதல் சொல்லிக் கொள்வார்கள்.

* * *

கோபால் நாயுடு அரிசி வியாபாரத்தை விட்டுவிட்டுச் சைக்கிள் கடை ஒன்று வைத்தார். வாடகைக்குச் சைக்கிள் கொடுப்பதுடன் ரிப்பேர் வேலைகளும் செய்வார். அவருக்குக் கூப்பிட்ட குரலுக்கு ஏனென்று கேட்கவும், எடுபிடி வேலைகள் செய்யவும், தானில்லாத நேரத்தில் கடையைப் பார்த்துக் கொள்ளவும் ஒரு ஆள் வேண்டியிருந்தது. அதற்கு வேணுவைவிட நம்பகமான ஆள் எங்கிருந்து கிடைப்பான்! 'வெட்டிச் சோறு' வேணு வீட்டிலிருக்கும் போது சம்பளம் கொடுத்து ஆள் வைக்கப் பங்கஜம் சம்மதிக்கவும் இல்லை.

வேணு கடையில் அமர்ந்தான். அவனுக்குக் கடையில் அதிகமான வேலை இல்லை. எப்பொழுது பார்த்தாலும் சைக்கிள் சாமான்களை வைத்துக் கொண்டு நிரசமன் செய்து கொண்டிருப்பான், அல்லது பாட புஸ்தகங்களை வைத்துப் படித்துக் கொண்டிருப்பான். கோபால் நாயுடுவும் வேணுவைக் கடிந்து கொள்ளமாட்டார். அனாதையான வேணுவின் மீதும், தாயில்லாக் குழந்தையான ரங்கத்தின் மீதும் அளவற்ற பிரியம் உண்டு. அதை வெளியில் காட்டிக் கொண்டால் பங்கஜம் இன்னும் கோபமடைந்து குழந்தைகளைத் துன் புறுத்துவாளே என்று அவர் பாராமுகமாக இருப்பது போல் காட்டிக் கொண்டார். வேணுவுக்கு அவ்வப்பொழுது அரை, கால் என்று கொடுக்கத் தவறமாட்டார். அந்தப் பணத்தில்தான் வேணு புஸ்தகம் வாங்கிக் கொள்வதும், ரங்கத்துக்குப் பலகாரம் வாங்கித் தருவதும்.

கால வேகத்தில், சிறுவர்கள் யுவர்களாயினர். நடுத்தர வயதினர் வயோதிகராயினர். கோபால் நாயுடுவுக்குத் தள்ளாமை வந்து விட்டது. சனி ஞாயிறிலாவது கடையில் உட்காரும்படி சீனிவாசனைச் சொல்லுவார். ஆனால் பங்கஜம், "இந்தத் தகரக்கடை வேலை உங்கள் தலை முறையோடு போகட்டும். சீனிவாசனுக்கு இந்தச் சனியன் பிடித்த தொழிலொன்றும் வேண்டாம். அவனை பி. ஏ. படிக்க வைத்து உசத்தியான வேலைக்குத் தான் அனுப்புவேன்" என்று சீனிவாசனைக் கடைப் பக்கமே போக விடமாட்டாள். வேணு



தான் தனியாகக் கடையைப் பார்த்துக் கொண்டிருந்தான். பக்கத்து ஊர்களில் எல்லாம் 'சைக்கிள் கடை வேணு'வின் பெயர் பிரபலமாக இருந்தது.

ரங்கம் யுவதியாகி விட்டாள். வேணுவுக்கு மத்தியான சாப்பாடு எடுத்துப் போகத் தடை வந்து விட்டதே என்று அவனுக்கு ஏக்கம்.

சீனிவாசன் பத்தாவது பாஸ் செய்து விட்டான். மேல் படிப்புப் படித்துக் கொண்டிருக்கும்போதே கோபால் நாயுடு திடீரென்று காலமானர். வேணு எவ்வளவோ தடுத்தும் கேளாமல், பிள்ளையின் படிப்புக்காக, சைக்கிள் கடையை ஒரு பட்டணத்தானுக்கு விற்றுவிட்டுப் பிள்ளையையும், பெண்ணையும் கூட்டிக்கொண்டு பங்கஜம் தான் பிறந்த ஊரான கோயமுத்தூருக்குப் போய் விட்டாள்.

ரங்கமும் வேணுவும் திக்குத் தெரியாது நின்றனர். வேணு அதிரவில்லை; பிழியப் பிழிய அழும் ரங்கத்திற்கும் சமாதானம் கூறினன்.

பட்டணத்துக் கடைக்காரனிடமே ஆளாக அமர்ந்தான் வேணு, முப்பது ரூபாய் சம்பளத்தில். ராகிக் கூழும் கம்பஞ் சோறும் சாப்பிட்டுக் கொண்டு செட்டும் கட்டுமாகக் குடித்தனம் நடத்தினுள் ரங்கம். வீட்டு வேலை செய்த பகரம் போக ஓய்வு இருக்கும் வேளையில் விடு இலைகளை வாங்கித் தைத்து விற்க ஆரம்பித்தாள். தமிழ் நாட்டில் சில வருஷங்கள் சரியாக மழையே இல்லாததால் வாழை இலைக்கு அடிதடியாக இருந்தது. ஏக விலையாக இருந்தது. பசியவாகவும், அழகாகத் தைக்கப் பட்டவையுமான ரங்கத்தின்

படத்துக்குப் பாராட்டு

சென்னை அண்ணாமலை மன்றத்தில் நவம்பர் பதினேழாம் தேதியன்று ஔவையார் படத்தை அற்புதமான முறையில் தயாரித்து வெளியிட்ட ஜெமினி ஸ்டுடியோ அதிபர் ஸ்ரீ எஸ்.எஸ். வாஸன் அவர்களுக்குப் பொது மக்கள் சார்பாக ஒரு பாராட்டு விழா நடைபெற்றது. மேயர் செங்கல்வராயன் அவர்களை முதன்மையாகக் கொண்டு பல சென்னைப் பிரமுகர்கள் கையெழுத்திட்டு அழைப்பு அனுப்பி, இவ் விழாவை நடத்தினார்கள். இந்த மகத்தான விழாவுக்கு ஸர் ஸி. பி. ராமசாமி அய்யர் தலைமை வகித்தார். ராஜாஜி அவர்கள் விஜயம் செய்து கடைசி வரையில் இருந்தது விழாவுக்கு மேலும் சிறப்பளித்தது. பல்வேறு ஸ்தாபனங்கள் ஸ்ரீ வாஸன் அவர்களுக்குப் பூ மாலைகளும், புகழ் மாலைகளும் அணிவித்துக் கௌரவித்தன. சென்னை கவர்னர் ஸ்ரீ பிரகாசா, நிதி மந்திரி ஸ்ரீ சி. சுப்பிரமணியம் முதலியவர்களிடமிருந் தெல்லாம் வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன. நகர மக்களின் சார்பாக, தங்கம் வெள்ளியினாலான ''ஷீல்டு'' ஒன்றை ஸர். ஸி. பி. ராமசாமி ஐயர் அவர்கள் ஸ்ரீ எஸ். எஸ். வாஸனுக்கு அளித்தார்.

மேயர் ஸ்ரீ டி. செங்கல்வராயன், ராஜா சர் முத்தையாச் செட்டியார், கைத்தொழில் மந்திரி டாக்டர் யு. கிருஷ்ண ராவ், ஸ்ரீ மா. பொ. சிவஞான கிராமணியார், ஆசிரியர் கல்கி, ஸ்ரீ டி. கே. ஷண்முகம் முதலியோர் ஸ்ரீ எஸ். எஸ். வாஸன் அவர்கள் '' ஔவையார் '' படத்தைத் தயாரித்து வெளியிட்டது தமிழ்நாட்டுக்கு ஒப்பற்ற ஒரு சேவை என்று பெரிதும் பாராட்டிப் பேசினார்கள். ஸ்ரீ வாஸன் தமக்கு அளித்த பாராட்டுதலுக்கு அவை அடக்கத்துடன் பதிலளித்துச் சபையோரின் பாராட்டுதலுக்குப் பாத்திரமானார்.

பேசும் படம் ஒன்று நல்ல முறையில் எடுத்து வெற்றி பெற்றதற்காகப் பொது ஜனப்பிரதிநிதிகளினாலும் ரசிகப் பிரமுகர்களினாலும் படத் தயாரிப்பாளர் ஒருவருக்கு இத்தகைய பாராட்டு விழா இந்தியா தேசத்தில் இதுவரை நடந்ததில்லை என்று கூறலாம்.



இலைகளுக்கு நல்ல மவுசு ஏற்பட்டது. ரங்கம் சோம்பலின்றி வேலை செய்தான். ஆயிரக்கணக்கில் இலைகள் விற்பனை ஆயின. ஒரு வருஷத்தில் அவன் கையில் நூறு ரூபாய்க்குப் பக்கமாகச் சேர்ந்தது.

''வேலையே போயிடும் போலிருக்கு. முதலாளிக்கு இந்த ஊர் பிடிக்கவில்லையாம். கடையைக் கலைச் கட்டுப் பட்டணம் போகப் போகிறாராம். இன்னும் ஒரு நூறு ரூபாய் இருந்தால் போதும். ஒரு பழைய சைக்கிளும், சில்லறை சாமான்களும் வாங்கிப் போட்டு நாமே ஒரு சின்னக் கடை வைக்கலாம்'' என்றான் ரங்கன் சாப்பிட்டுக் கொண்டே.

''ஐயையோ! வேலை போய்விட்டால் என்ன செய்வோம்! நம்மை நம்பி யார் கடன் கொடுப்பாங்க!'' என்று ரங்கம் கலவர மடைந்தாள்.

முதலாளி இரக்கமான சுபாவம் படைத்தவர். ஊரை விட்டுப் போகும்போது ஐம்பது ரூபாயும், ஒரு பெட்டி பழைய சாமான்களையும் வேணுவுக்கு இனாமாகக் கொடுத்து விட்டுப் போனார்.

ஒரு வருஷத்துக்குள் வேணுவின் கடையில் இரண்டு புது சைக்கிள்கள் நின்றன. பக்கத்தில் ஒரு குக் கிராமத்தை, சர்க்கார் சமுதாய நலத் திட்டத்தில் எடுத்துக் கொண்டு வேலை செய்து கொண்டிருந்தனர். அங்கு பல உத்தியோகஸ்தர்கள் வந்து போய்க் கொண்டிருந்தனர். அந்தக் கிராமத்துக்குப் பாதை என்பதே இல்லை. ஒற்றையடிப் பாதையில் நடந்து போக வேண்டும்; அல்லது சைக்கிளில்தான் போகலாம். மாட்டு வண்டி கூட அந்தப் பாதையில் போக முடியாது.

வேணுவுக்கு நல்ல காலம் ஆரம்பித்தது என்று தான் சொல்ல வேண்டும். கிராமத்துக்கு வரும் உத்தியோகஸ்தர்கள் அனைவரும் வேணுவின் கடைச் சைக்கிளைத்தான் நம்பிக் கொண்டிருந்தனர். வேணு புது சைக்கிள் வாங்கி விற்க ஆரம்பித்தான். எலெக்ட்ரிக் சாமான்களும், பல்புகளும் கூட அவன் கடையில் இருந்தன. வேணு கையில் மளமளவென்று பணம் சேர்ந்து கொண்டிருந்தது.

வேணு சொந்தத்தில் ஒரு சின்ன வீடு கட்டி விட்டான். ரங்கத்துக்குச் சில நகைகளும் செய்து போட்டிருந்தான். அவர்களுக்கு ஒரு வயதில் ஆண் குழந்தை இருந்தது.

ஒரு நாள் வேணு ஒரு சைக்கிளைப் பழுது பார்த்துக் கொண்டிருந்தான். "சைக்கிள் வாடகைக்குத் தருவதுண்டா! மணிக்கு எவ்வளவு கேட்பீர்கள்!" என்று கேட்டுக் கொண்டே கால் சட்டை தரித்த ஒரு வாலிபன் நுழைந்தான். அவன் முகம் கருத்து, ஒட்டி, உலர்ந்து கிடந்தது.

தலை நிமிர்ந்த வேணு, திகைத்துப் போனான். 'ஸ்பானரை' அப்படியே கீழே போட்டுவிட்டு, "யாரது! சீனுவாசனா! ரொம்ப இளைத்திருக்கிறாயே! குரல்தான் அடையாளம் காட்டுது. எங்கிருந்து வருகிறாய்! எங்கே இருக்கே! அலமேலு, அம்மா எல்லாரும் சுகமா!" என்று மூச்சு விடாமல் விசாரித்தான் வேணு.

வேணு கீழே உட்கார்ந்து வேலை செய்வதைப் பார்த்த சீனிவாசன் அனுதாபத்துடன், "வேணுவா! பாவம்! நீ இன்னும் இந்தக் கடையில்தான் ஆளாக இருக்கிறாயா வேணு! ரங்கம் இருக்காளா.........!" என்றான்.

"இல்லை தம்பி! நான்தான் கடை முதலாளி. உங்கள் அக்கா ரங்கமும் சௌக்கியமாக இருக்கிறாள். எங்களுக்குப் பையன் பிறந்திருக்கான். ஆண்டவன் தயவில் ஒரு குறையுமில்லை. அது போகட்டும். அலமேலுக்குக் கல்யாணம் கட்டிக் கொடுத்தாச்சா! மாப்பிள்ளை எந்த ஊர்! என்ன செய்கிறார்! உனக்குக் கல்யாணமாச்சா! எந்த ஊரில் இருக்கிறாய்! என்ன வேலை பார்க்கிறாய்! பி.ஏ. பாஸ் செய்து விட்டாயா! விவரமாச் சொல்லு தம்பி, உட்காரு! இந்தா பழம் சாப்பிடு!" என்று ஆவலுடன் விசாரித்தான்.

"உம் பாஸ் செய்வதேது! நாலு தடவை பரீட்சை எழுதினேன். பி. ஏ. பரீட்சைக்கும் நமக்கும் ஒத்து வராது என்று விட்டு விட்டேன். கைப் பணமும் செலவழிந்து கடனானது தான் மிச்சம். இப்பொழுது தாலூகாபீஸிலே அறுபது ரூபாய்க்குக் குமாஸ்தாவாக யிருக்கிறேன். அலமேலுக்குக் கல்யாணம் செய்யப் பணம் வேணுமே. நான் வாங்குகிற சம்பளம் சாப்பாட்டுக்கே போத மாட்டேங்குது. அம்மாவுக்கும் வயசாயிட்டது!... இந்தப் படிப்புப் படித்ததற்கு உன் மாதிரி அப்பா கடையிலேயே இருந்து தொழிலைக் கவனித்திருந்தாலும் ஊரோடும் வீட்டோடும் இருந்திருக்கலாம். என் பிழைப்பு சுத்த மோசம் போ, வேணு! பக்கத்துக் கிராமத்துக்கு யாரோ மேலதிகாரி வருகிறாராம். முன்னால் சில ஏற்பாடுகள் செய்ய ஆபீஸிலே என்னை அனுப்பி யிருக்கிறார்கள். நிம்மதி இல்லாத வேலை, அப்பா!" என்று ரொம்ப அலுத்துச் சலித்துக் கொண்டான்.

'நல்ல வேளையாக, பங்கஜம் கொடுமை செய்ததால்தானே தொழில் கற்க முடிந்தது! இன்று கஷ்டமில்லாமல்—ஒருத்தன் கீழ் கட்டுப் படாமல் வாழ முடிகிறது' என்று மனத்துக்குள் பங்கஜத்துக்கு ஒரு வணக்கம் செலுத்தினான் வேணு.

வேணுவின் குடும்பத்தில் நிலவும் செழிப்பையும் அன்பையும் கண்டு வியந்த சீனிவாசன் "வேணு நல்ல புத்திசாலி! என் மாதிரி வாழ்க்கைக்கு உதவாத வறட்டுக் கல்வியைக் கற்றுத் திண்டாடாமல் ஒரு தொழிலைக் கற்றுக் கொண்டு, உழைத்துச் சுகமாக இருக்கிறான். ரங்கம்தான் உண்மையான குடும்பப் பெண். இருவருமே பாக்கியசாலிகள்! நம்மைத்தான் துரதிருஷ்டம் பிடித்தாட்டுகிறது" என்று தன் தலைவிதியை நொந்து கொண்டான்.



ரூ. 1600 நோட்டுகளை கறையான்கள் தின்றன!

இரு ஏழை ஹரிஜன ஸ்திரீகள் பாடுபட்டு சேர்த்ததாம்


கோவில்பட்டி, ஜுலை 14—

சங்கரகோவில் தாலுக்காவிலுள்ள சுப்பிரமணியபுரம் என்ற கிராமத்தில் கறையான்கள் 9 நூறு ரூபாய் நோட்டுகளையும், 70 பத்து ரூபாய் நோட்டுகளையும் அரித்துத் தின்று தின்றுவிட்டன. இந்த கரன்ஸி நோட்டுகள் ஒரு மண் பானையில் போட்டு பூமிக்கு அடியில் புதைத்து வைக்கப்பட்டிருந்தன. ஆவு-
மாள் (தாய்) கே-
மாள் (பெண்)
ஸ்திரீகளாச்-


அது உங்களுடையதாக இருந்திருக்கலாம்!

கோத்ரெஜ் பேடன்ட் காபர்: பீரோவின் உட்பாகத்திலோ அல்லது கவுன்டரிலோ அல்லது மேஜையிலோ இணைக்கக்கூடியது. சுவரில் பொருத்த பிரத்தியேக ஏற்பாடுகள் அதிகப்படியான செலவில் **ரூ. 78.**

10" உயரம் × 14" அகலம் × 12" ஆழம்—வெளிப்பக்கம்



கோத்ரெஜ்



கோத்ரெஜ் பணம்-நகைப் பெட்டி: தனியாக எடுத்துப் போடக்கூடிய அடிபாகம் கவுன்டரிலோ அல்லது மேஜையிலோ அல்லது பீரோவின் உட்பக்கத்திலோ இணைப்பதைச் சாத்யமாக்குகிறது. தட்டுடன் **ரூ. 70** மட்டும்.

14" நீளம் × 10" அகலம் × 6" ஆழம்—வெளிப்பக்கம்

அவர்கள் ரூ. 70 மட்டும் செலவு செய்திருந்தால், அவர்களுடைய கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணம் காப்பாற்றப் பட்டிருக்கும்—அதெப்படியெனில் லகுவாக உபயோகிக்கக் கூடியதும், **பத்திரமானதும்,** தாங்கும் வன்மையுள்ளதுமான இந்த பெட்டிகளொன்றில் பணம் வைத்துப் பூட்டப்பட்டிருக்கும்.

வலுவான எஃகுத் தகட்டால் ஸேபைப்போல் தயாரிக்கப்பட்டதும், 19 மூலைகளில் வளைக்கப்பட்ட அமைப்புள்ளதும், பிரத்தியேக கவசத்தால் மூடப்பட்ட கோத்ரெஜ் **பிடுங்கமுடியாத** பூட்டையுடையதுமான கோத்ரெஜ் காபர்களும் பணப் பெட்டிகளும் (காஷ் பாக்ஸ்), ஒரு சிறிய ஸேபின் பாதுகாப்பை அளிக்கின்றன. கோத்ரெஜ் ஸ்தாபனம் **மட்டுமே** அவைகளை அவ்வளவு சிரேஷ்டமாகவும் அவ்வளவு குறைந்த விலைகளிலும் தயாரிக்கிறது—சிக்கன முறையில் ஏராளமான தயாரிப்பின் மூலம்.

கோத்ரெஜ் அண்டு பாய்ஸ் மானுபாக்சரிங் கம்பெனி லிமிட்., ஸ்தாபிதம் — 1897





சென்னை நகரத்திற்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்: ... 37, ... ரோடு, திருவல்லிக்கேணி, மதுரை, கோயமுத்தூர், பாலக்காடு, ... B. ... செட்டியார், (1933-ல் ஸ்தாபிக்கப்பட்டது), கோயமுத்தூர்.

தீரர் சதானந்த்

டி. வி. ராமாநுஜம் எம். ஏ.

நமது ஒப்புயர்வற்ற தலைவர் ராஜாஜி கூறினது முற்றிலும் உண்மை. "பத்திரிகாசிரியர்களுள் ஸ்ரீ சதானந்த் ஒரு நெப்போலியன் போன்றவர்தான்." அந்த அளவுக்கு அசாதாரணமான தைரியம் படைத்தவர் ஸ்ரீ சதானந்த். அவர் உடல் நலம் பெரிதும் குன்றிச் சென்னைக்குப் போவதற்கு முன்பு அவரிடம் சம்பாஷணை செய்து கொண்டிருந்த பொழுது அவர் கவலைப்பட்டது அவரது நோயைப் பற்றி யல்ல. அவருடைய குடும்பத்தினரைப் பற்றி யல்ல. அவர் உயிர் போல் நேசித்த "பிரீபிரஸ்" ஸ்தாபனங்களைப் பற்றிக் கூட அவர் அவ்வளவு கவலைப்படவில்லை. அந்தச் சமயத்தில் அந்த உயர்ந்த ஸ்தாபனங்களின் எதிர்கால நிர்வாகத்தைப் பற்றிக் கவலைக்கிடமான, சிக்கலான பல பிரச்னைகள் தோன்றியிருந்தன. ஆயினும் தேசபக்தர் சதானந்த் அவர்களுக்கு அப்பொழுது கவலை யளித்தது தமிழ் நாட்டில் அந்தச் சமயம் தோன்றி யிருந்த விஷமப் பிரசாரந்தான். "ஜனகரைப் போல் அரசியலிலும் சொந்த வாழ்விலும் ஒரு தலை சிறந்த யோகீஸ்வரர் மாதிரி, தவ வாழ்வு நடத்திவரும் ராஜாஜியை என்றென்றும் போற்றி, நன்றி செலுத்தாமல், அவரை எதிர்க்கக்கூடச் சிலர் முன் வந்தார்களே" என்று அவர் வருந்தினர்.

அஞ்சாத நெஞ்சம் படைத்த தீரர் சதானந்தின் வள்ளல் தன்மையைப் பலரும் அறிந்திருக்க மாட்டார்கள். கையில் பணமிருக்கும் போது கர்ணன், குமணன் போல் அள்ளி விடுவார். அற்பமான எண்ணங்கள் அவரைக் கண்டவுடன் காத தூரம் ஓடிவிடும். எவ்வளவு ஸ்தாபனங்களுக்கு, எவ்வளவு பாடகர்களுக்கு, எவ்வளவு பத்திரிகைத் தொழிலாளர்களுக்கு, எவ்வளவு மதப் பிரசாரகர்களுக்குப் பணத்தை வாரி வாரிக் கொடுத்திருப்பார் என்பதைப் பலரும் அறிந்திருக்க மாட்டார்கள். என் கண்களால் பார்த்திருக்கிறேன் இந்தச் சம்பவத்தை. தமிழ் நாட்டிலிருந்து நான்கு ஏழைப் பையன்கள் அவரை அண்டி, பிழைப்புக்கு வழி தேடினர்கள். உடனே அவர்கள் நால்வருக்கும் வெவ்வேறு பயிற்சி பெற ஏற்பாடு செய்தார். ஒருவனுக்கு "லினோடைப்" கற்க வசதியும், மற்றவர்களுக்கு வேறு தொழில்கள் கற்க வசதிகளும் செய்து தந்தார். இப்படி அனாதைகளாய் வந்த அவர்களை ஒழுக்க முடைய, சுய மரியாதை பெற்ற நல்ல மனிதர்களாய் மாற்றி விட்டார் சதானந்த்.



சிங்கத்தைப் போன்ற உறுதியுடையவர்தான். ஆயினும் பச்சைக் குழந்தை போல் விம்மி விம்மி அழக் கூடிய இளகிய மனம். அவருடைய அத்யந்த நண்பர்களில் ஒருவர் "காசி" என்று அழைக்கப்பட்ட ஸ்ரீ என். டி. வரதாச்சாரியார். அவர் நம் தேசத்தின் தலை சிறந்த தலைவராக விளங்கி, தேசபக்திக்கும், தீரத்துக்கும் உறைவிடமாகத் திகழ்ந்த சேலம் ஸ்ரீ சி. விஜயராகவாச்சாரியாருக்கு மிகவும் நெருங்கின பந்து. ஸ்ரீ எஸ். ஸ்ரீனிவாசய்யங்காரிடம் வக்கீல் தொழிலில் பயிற்சி பெற்றவர். ஸ்ரீ சதானந்திற்கும் ஸ்ரீ காசிக்கும் ஏற்பட்டிருந்த நட்பு தெய்வீகத் தன்மைபெற்றது. "காசி காலமாகி விட்டார்" என்ற தந்தி வந்தது. ஸ்ரீ சதானந்தும் நானும் அவருடைய அறையில் சிற்றுண்டி சாப்பிட்டுக் கொண்டிருந்த சமயம் அது. அப்படியே திக்பிரமையடைந்து சாய்ந்து விட்டார் சில நிமிஷங்கள். பிறகு விம்மி விம்மி அழுதார். ஸ்ரீ சதானந்தின் மனமும் இப்படிக் கரையுமோ என்று அவருடைய கோபக் கிளர்ச்சிகளை அறிந்தவர்கள் ஆச்சரியப்பட்டனர்.

அவருக்கு எவ்வளவு தெய்வ பக்தி தெரியுமா!

அவருடைய இஷ்ட தேவதைகளைப் பிரார்த்திக்காமல் ஒரு காரியமும் செய்ய மாட்டார். அவர் வேலை செய்யும் அறையில் அவருக்கு முன்பாக எப்போதும் பகவானுடைய படங்கள் மாட்டியிருக்கும். பகவானுக்கு அர்ப்பணம் செய்யாமல் போஜனம் செய்ததே யில்லை. அதிசயமான சிற்ப வேலைப் பாடுகள் அமைந்த கோயில் கட்டியிருக்கிறார். தெய்வ காரியங்களுக்கு வேண்டிய அளவு திரவிய சகாயம் செய்தார்.

தேசபக்தி, காந்தி பக்தி, கதர் அபிமானம், ராஜாஜியின் மேதை, தியாகம் இவற்றினிடம் பிரேமை, ஏழைகளிடம் உண்மையான அனுதாபம்—இம்மாதிரி பல நற்குணங்கள் படைத்த தீர சிரோமணியாக விளங்கினர். எவ்வளவு தடவைகள் அரசாங்கத்தை எதிர்த்துப் போராடினர்! அன்னிய அரசாங்கத்தினர் "பிரீபிரஸ் ஜர்னல்"லிடம் அடிக்கடி ஜாமீன் கேட்பார்கள். திடீர் திடீரென்று ஜாமீன் தொகையைப் பறிமுதல் செய்வார்கள். ஸ்ரீ சதானந்த் அவர்களிடம் அச்சமயம் பணமேயிருக்காது. ஆயினும் ஒன்றையும் அவர் லக்ஷ்யம் செய்ய மாட்டார். "பிரிட்டிஷ்காரர்கள் எதை வேண்டுமானாலும் பிடுங்கிக் கொள்ளட்டும். நம் பத்திரிகை கட்டாயம் வெளிவந்து கொண்டுதான் இருக்கும்" என்று அறைகூவுவார். அதை நடத்தியும் காண்பித்தார்.

உழைப்பென்றால் சாமான்ய உழைப்பா! இரவு முழுதும் உறங்காமல் மாதக் கணக்கில் உழைத்திருக்கிறார். அச்சுக் கோப்பது முதல் தலையங்கம் எழுதுவது வரையில் பத்திரிகைத் தொழிலின் சகல நுட்பங்களையும் பூரணமாக அறிந்தவர்.

அன்னிய ஆட்சியைத்தான் எதிர்ப்பது, நம் மக்களிடையில், நமது தலைவர்களிடை

யில் அபிப்பிராய பேத மேற்பட்டால், மனத்தி லுள்ளதைத் தெரிவிக்கப் பயப்படுவது என்ற குணம் ஸ்ரீ சதானந்திடம் கிடையாது. இந்த அம்சத்தில் அவர் நமது ஒப்பற்ற தலைவர் ராஜாஜியைப் பின்பற்றி யிருக்கிறார். ஸ்ரீ சதானந்த் மகாத்மா காந்தியின் கருத்துக்களுக்கு முரணாகப் பேசியதும் எழுதியது முண்டு. ஸர்தார் வல்லபாய் பட்டேலுடன் அபிப்பிராய பேத மேற்பட்டதுண்டு. அந்தக் காலத்தில் இத்தகைய தலைவர்களின் கருத்துக்களுக்கு முரணாக எழுதுவதற்கு எவ்வளவு தன்னம்பிக்கை வேண்டும்! அந்தத் தலைவர்களிடம் அவருக்கிருந்த பக்திக்கும் ஈடு கிடையாது.

அவர் வாழ்நாள் முழுவதும் போராட்டமே.

அனேகமாக அவர் போர் தொடுத்தது அடிமை மனப்பான்மைக்கு எதிராகத்தான். பல வருஷங்கள் கொடிய நோயுடன் போராடினார். தேகத்தில் சக்தி கிடையாது. ஆனால் மனத்தில் சிறிதும் தளர்ச்சி கிடையாது. தேக முழுவதும் வலி. ஆனால் முகத்தில் சிரிப்பு.

வீரர் சதானந்த் காலமாகி விட்டார். ஆனால் அவருடைய குணாதிசயங்களை இந்தியப் பெரு மக்கள், முக்கியமாகப் பொது வாழ்வில் ஈடுபட்டவர்கள், குறிப்பாக அவரது அன்பர்கள் மறக்கவே முடியாது. தமிழ் மொழியிலும், தமிழ் மக்களிடமும் அவருக்கிருந்த பற்று அபாரம். "விவேக சிந்தாமணி" ஆசிரியரின் புதல்வ ரல்லவா!

படித்துப்பாருங்கள்!

சித்தாந்தம்

திரு. வி. க. நினைவு மலர் (மாத வெளியீடு)

தமிழுக்கு மாண்பையும், தமிழர்களுக்குத் தனிப் பண்பையும் அளித்து இணையற்ற தொண்டு செய்து இறைவனடி அடைந்த திரு. வி. கலியாண சுந்தரனார் அவர்களைப் பற்றிய வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் நினைவுக் குறிப்புகளையும் தாங்கி வெளியாகி இருக்கிறது இம்மலர்.

தமிழரின் தவப்பயனாகத் தோன்றிய அவ்வறிஞர் பெருமானோடு பழகிய பல அன்பர்கள் இந் நினைவு மலரில் திரு. வி. க. வைப் பற்றியும் அவர் எழுதிய இலக்கியங்களைப் பற்றியும் அழகாக எழுதியிருக்கின்றனர். தமிழிடத்தும் தமிழ்த் தந்தையாகிய திரு. வி. க. விடத்தும் அன்புள்ள ஒவ்வொருவரும் இம் மலரைத் தருவித்துப் படித்து பயன் பெறலாகும்.

கிடைக்குமிடம்: சைவ சித்தாந்த மகாசமாஜம்' 192, லாய்ட்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-14

ரஸிக ரஞ்சனி சபா - தசரா மலர்

மேற்படி சபையின் இசை, நாடகம், நடனம், காலக்ஷேபம் முதலியவற்றின் நிகழ்ச்சி நிரல்கள் அடங்கிய தசரா மலர் சிறப்பாக வெளிவந்திருக்கிறது. தியாகராஜர் இயற்றிய கீர்த்தனைகள் சிலவும் ஸ்வரங்களுடன் வெளியிடப் பட்டிருக்கின்றன.

கிடைக்கும் இடம்:—ரஸிகரஞ்சனி சபை, மயிலாப்பூர், சென்னை - 4

Commonwealth Cricketers' Tour – 1953-54

கிரிக்கெட் பந்தய விளையாட்டு என்றால் கிரிக்கெட் ரசிகர்களுக்குப் பெரிய திருவிழாவைப் போல் ஒரே கொண்டாட்டம்தான்! இந்தியாவில் உள்ள கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டின் வெள்ளி விழா இந்த வருஷத்தில் வருகிறது. அதை ஒட்டி காமன்வெல்த் கிரிக்கெட் நிபுணர் கோஷ்டியை இந்தியாவுக்கு அழைத்திருக்கிறார்கள். அவர்களுக்கும் இந்திய கிரிக்கெட் நிபுணர்களுக்கும் நாளது நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் சென்னை உள்பட இந்தியாவில் உள்ள பல முக்கிய நகரங்களில் பந்தய விளையாட்டுகள் (Test Matches) நடைபெறும். மேற்படி விளையாட்டுகள் நடைபெறும் இடம், தேதி முதலிய விவரங்கள், முந்திய வருஷங்களில் நடந்த கிரிக்கெட் பந்தய விளையாட்டுகளில் ஏற்பட்ட வெற்றி தோல்விகள், இவ்வருஷம் இந்தியாவுக்கு வரும் நிபுணர்களின் படங்கள், வாழ்க்கை வரலாறுகள், இந்திய கிரிக்கெட் நிபுணர்களின் படங்கள் முதலியன Commonwealth Cricketers' Tour – 1953 - 54 என்ற நூலில் வெளியிடப் பட்டிருக்கின்றன. சென்னை Sport & Pastime பத்திரிகாலயத்தின் பிரசுரம். விலை ரூபாய் ஒன்று.

மாரியும் உண்டு

ஈகையில் சிறந்த நாடு தமிழ்நாடு. அதிலும் சங்க காலத்திலிருந்த பாரி என்னும் பறம்பு நாட்டு மன்னனின் கொடைத் திறம் யாரையும் வியக்கச் செய்யும் தன்மையது. ஒரு முல்லைக் கொடி படர, தன் தேரையே ஈந்தான் என்றால் அவன் வள்ளன்மையை என்னென்பது! பாரியைப் பற்றி அவனுடைய உற்ற நண்பரான கபிலரும் மற்றும் பல புலவர்களும் பல தமிழ்ப் பாடல்கள் செய்திருக்கிறார்கள். அவை புறநானூறு முதலிய சங்க இலக்கியங்களில் காணக் கிடக்கின்றன. அவற்றைக் கொண்டு, பாரியைப் பற்றிய சரித்திரக் கதை போல இந்த நூலாசிரியர் மிகவும் சுவாரஸ்யமாக எழுதியிருக்கிறார்.

ஆசிரியர்: வி. மரிய அந்தோனி, எம். ஏ., பிரசுரம்: தமிழ் இலக்கியக் கழகம், தூத்துக்குடி; விலை: ரூ. 2.


வளர்மதி

குழந்தையின் மனப் பாங்கைப் பெற்றவர்கள் பாக்கியசாலிகள். அப்படிப் பெற முடியாவிட்டால், குழந்தையின் உள்ள உணர்ச்சிகளையும் கற்பனைகளையும் அனுதாபத்துடன் பார்த்து அனுபவிக்கக் கூடியவர்களை அடுத்தபடியாகச் சொல்லவேண்டும். இந்த இரண்டாவது கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் கவிஞர்கள். அவர்களுள்ளும் ரவீந்திரநாதரைப் போல் குழந்தை உள்ளத்தை அனுபவித்தவர்கள் யாருமில்லை. அதற்குச் சான்று இந்த வளர்மதி. இதைப் படிப்பவர்களும், தாங்கள் குழந்தைப் பருவ நினைவுகளில் மூழ்க, தாங்களும் குழந்தையாகிவிட்ட பிரமை கொள்வார்கள்.

நல்ல முறையில் ஸ்ரீமதி லலிதா இந் நூலை மொழிபெயர்த்திருக்கிறார்.

பிரசுரம்: ஸ்டார் பிரசுரம்; 5, புதுச் சந்தைத் தெரு, காரைக்குடி; விலை: ரூ 2.

காலத்தின் இறுதிவரை...



ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு நபருக்கு முக்கியமானதாக இருக்கும். வேலைக்குப் போக... சந்திக்க... அல்லது பிரயாணம் போக... பிரசித்தி பெற்ற ஜாஸ் அலாரம் கடிகாரம் வாங்கினால் நீங்களும் நேரம் தவறாமல் அலுவல்களை கவனிக்க முடியும்.

JAZ

வலிமை: இதில் அதிசயம் ஏதுமில்லை. ஜாஸ் தயாரிப்பு நிலை பூராவிலும் மின் அணு ரசாயன லாபரேட்டரிகளின் உதவி இருப்பதனால் இது சாத்தியம்.

JAZ

நேரநுட்பம்: எஸ்கேப்மெண்டு அங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் விகிதாசாரங்கள், பாலன்ஸ் சக்கரத்தின் அளவு, வீச்சு முதலியவை கவனமாக நிர்ணயிக்கப் படுவதும், யந்திரத்தின் எளிமையுமே ஜாஸ் அலாரம் நேர நுட்பத்தில் சிறப்புறக் காரணம் பேவர் லூபா கம்பெனியால் விற்கப்படுவது உங்களுக்கு சிறந்த உத்ரவாதம்.

JAZ

பூர்த்தியழகு: 185 பாகங்கள் தனித் தனியாக சோதிக்கப் பட்ட பிறகு நிபுணர்களால் உயர்ந்த கருவிகளைக் கொண்டு நிரம்பட பொருத்தப் படுகின்றன.

JAZ

சிக்கனம்: ஜாஸ் அலாரம் நீடித்துழைக்கும். அவ்வப் பொழுது சிறிது கவனம் செலுத்தி வந்தால் அநேக ஆண்டுகள் உழைக்கும்.

நெ. 8445 நிக்கல் பூசிய கேஸ் சாதா 3'' டயல் ரூ. 33
நெ. 8456 வர்ண எனாமல் பூசிய கேஸ் (சாம்பல் பச்சை, கிரீம், வெப்பு நிறம்) சாதா 3'' டயல் ரூ. 28

FAVRE-LEUBA

இருளிலும் ஜொலிப்பான டயல் வேண்டுமானால் ரூ. 1-8-0 அதிகம்


JAZ

ஒரு பிரபல ஜாஸ் அலாரம்

FAVRE-LEUBA & CO. LTD.

பேவர்-லூபா & கம்பெனி லிமிடெட், பம்பாய் - கல்கத்தா

மற்றும் இந்தியா முழுவதிலும் பதிவு பெற்ற வியாபாரிகளிடம் கிடைக்கும்



பிரபல திருமணம்

தென்னாற்காடு ஜில்லா போர்டு மாஜி தலைவர் P. R. சீனுவாசப் படையாட்சி குமாரத்தி சௌ ஜெகதாவுக்கும், பாலூர் ஜெயராம்மூர்த்தி படையாட்சி குமாரனும் கடலூர் தாலூகா காங்கிரஸ் கமிட்டி தலைவர் J. தேவநாதன் அவர்களின் சகோதரனுமான சிரஞ்சீவி ஆதிமூலத்திற்கும் பூண்டியாங்குப்பம் மணமகன் இல்லத்தில் சென்ற 8-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை விவாகம் சிறப்பாக நடந்தேறியது. அன்று மாலை ஸ்ரீ எம். கே. தியாகராஜபாகவதர் அவர்களின் இன்னிசை நடந்தது. மணமக்களுக்கு பல வாழ்த்துச் செய்திகள் வந்தன.

வாழ்க ஜெகதா — ஆதிமூலம்

மோகன் பெரியவன்

விஜயம்



மோகன் எப்போதும் தன் தங்கையோடு சண்டை போடுவான்; மோகனுக்கு ஏழு வயது; பாலாவுக்கு ஐந்து வயது.

அப்பா மிட்டாய் வாங்கி வந்தாலும் சரி, ஏதாவது விளையாட்டுச் சாமான்கள், பொம்மைகள் வாங்கி வந்தாலும் சரி பாலாவுக்குத் தான் அதிகமாகக் கொடுப்பார். அதனால் மோகனுக்கு எப்போதும் பாலாவிடம் கோபம் கோபமாக வரும்.

அப்பா அதிகமாக மிட்டாய் கொடுத்தால், பாலா மோகனிடம் ஓடி வந்து, "அப்பா, எனக்கு உன்னை விட அதிகமாக மிட்டாய் கொடுத்தாரே!" என்று சொல்லிக் கொண்டே குதிப்பாள். அப்பொழுது மோகனுக்குக் கோபம் வராமல் இருக்குமா?

அன்று அப்பா அழகான பெரிய பொம்மை ஒன்று வாங்கிக் கொண்டு வந்தார். அது 'ஸெலுலாயிட்' பொம்மை; நிஜம் குழந்தை மாதிரியே இருந்தது.

அப்பா வீட்டுக்கு வந்ததும் வராததுமாக, பாலாவை அழைத்தார்.

"பாலா, பாப்பா பார்த்தாயா? இந்தா!" என்று சொல்லிக் கொண்டே அவள் கையில் அந்தப் பொம்மையைக் கொடுத்தார். பாலாவின் முகம் ஆனந்தத்தால் மலர்ந்தது! பொம்மைக் குழந்தையை எடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டு வீடு முழுதும் சுற்றி வந்தாள். பிறகு மோகனிடம் போனாள். "மோகன், இதோ பார்த்தாயா, பாப்பா!" என்று சொல்லி விட்டுக் குதித்தாள்.

பொம்மைப் பாப்பாவைப் பார்த்ததும் மோகனின் கண்கள் விரிந்தன.

"பாலா, உனக்கு ஏது இந்தப் பொம்மை?" என்று அதிசயத்துடன் கேட்டான் அவன்.

"அப்பா வாங்கிக் கொண்டு வந்தார்!" என்றாள் பாலா பெருமிதத்துடன்.

மோகனின் முகம் சிவந்தது. "அப்பா உனக்கு மாத்திரம் இந்தப் பொம்மையை வாங்கி வரவில்லை. எனக்கும் சேர்த்துத்தான் வாங்கி வந்திருக்கிறார்!" என்று கூறிப் பொம்மையை 'வெடுக்'கென்று பிடுங்கிக் கொண்டான்.

அம்மா, சமையலறையிலிருந்து வெளியே வந்து, மோகனை அழைத்தாள்.

"மோகன், பாலா குழந்தையா, நீ குழந்தையா? உனக்கு அவளோடு சண்டை போட வெட்கமாயில்லை? பாப்பாவை அவளிடம் சமர்த்தாய்க் கொடுத்து விடு. நீ அவளைவிடப் பெரியவன். சண்டை போடக் கூடாது. சமர்த்தாய் இருக்கணும். தெரியுமா?" என்று கூறி அவனைக் கடிந்து கொண்டாள்.

மோகனுக்கு வெட்கமாய்ப் போய் விட்டது. அவன் முகம் நாணத்தால் சிவந்தது. அவன் வாய் திறவாமல் உடனே பொம்மையைப் பாலாவிடம் கொடுத்து விட்டான்.

சற்று நேரத்துக்கெல்லாம் வெளியே போயிருந்த அப்பா வந்தார்.

பாலா கையில் பொம்மையுடன் விளையாடிக் கொண்டிருந்தாள். மோகன் சிரத்தையோடு படித்துக் கொண்டிருந்தான்.

"மோகன் சமர்த்தாகி விட்டானே! பொம்மைக்காக இரண்டு பேரும் அடித்துக் கொள்ளுவார்கள் என்றல்லவா நினைத்தேன்!" என்று அப்பா அம்மாவிடம் சொல்லி ஆச்சரியப்பட்டார்.

"மோகன் சமர்த்து. நீங்கள்தான் அவனுக்கு மூன்று சக்கரச் சைக்கிள் வாங்கித் தந்திருக்கிறீர்களே!" என்று சொல்லிக் கொண்டே அம்மா அவனை இறுகத் தழுவிக் கொண்டு முத்தம் கொடுக்கப் போனாள்.

"போ, அம்மா! என்னை விட்டு விடு!" என்று வெட்கத்தோடு சொல்லிக் கொண்டே அம்மாவின் பிடியிலிருந்து நழுவி ஓடி விட்டான் மோகன்.

அன்றைய தினத்திலிருந்து மோகன் பாலாவுடன் சண்டைக்குப் போகவேயில்லை. தினமும் அவள் அடம் பிடித்து அழுவாள்; பாலா எது செய்தாலும் அதைத் தானும் செய்ய வேண்டும் என்று அடம் பிடிப்பாள்; இலேசில் சமாதானம் ஆகமாட்டாள். அப்பா அவனுக்கு மூன்று சக்கரச் சைக்கிள் வாங்கித் தந்தார். அதை வைத்துக் கொண்டு விளையாடுவதைவிட மோகனுக்குப் பாலாவை என்னத்துக்காகவாவது அழ விட்டு வேடிக்கை பார்ப்பதில்தான் ஆனந்தம்.

பாலா விவரம் தெரியாத குழந்தையாதலால் அவளை ஒன்றும் சொல்ல முடியாது. அப்பா மோகனைத்தான் கண்டிப்பார். அப்பாவுக்குக் கோபம் அதிகம்.

"குழந்தைக்குச் சரியாக நீயும் பிடிவாதம் பிடிக்கிறாயே, முட்டாள்! பிரம்பை எடுத்துக் கொண்டு வந்து வெளுத்து விடுவேன்!" என்று நாடக மேடையில் வரும் இரணியன் மாதிரி கர்ஜனை செய்வார்; கோப மிகுதியில் சில சமயம் மோகனை அடித்து மிருக்கிறார்.

அந்த அடிகளுக்கும் மிரட்டல்களுக்கும் அஞ்சாமல் இருந்த மோகன், இப்பொழுது சமர்த்தாகி விட்டது அப்பாவுக்கு ஒரே ஆச்சரியமா யிருந்தது.

மோகன் வர வர, பெரியவர்கள் மாதிரி நடந்து கொள்ள ஆரம்பித்தான்.

"பாலா, நீ சமர்த்துப் பாப்பாவோ இல்லையோ! அழலாமோ! அப்பா ஆபீசுக்குப் போகணும்; அம்மா சமைக்கணும்; அப்புறம் நீயும் நானும் சாப்பிடணும். நீ அழுதால் இதெல்லாம் எப்படி நடக்கும், சொல்லு? அப்பா ஆபீஸுக்குப் போகிற சமயத்தில் நீ அவரிடம் போய் ஒன்றும் கேட்காதே! உனக்கு எது வேண்டுமானாலும் என்னிடம் சொல்லு. நான் வாங்கித் தருகிறேன். நான் பெரியவனாகி விட்டேன், தெரியுமோ உனக்கு?" என்று ஆதரவோடு சொல்லிப் பாலாவைச் சமாதானம் செய்யலானான் மோகன்.

வீடு ரொம்ப அமைதியாய் இருந்தது. இப்பொழுதெல்லாம் அப்பாவுக்குக் கோபம் வருவதே யில்லை. பிரம்புக்கும் வேலையில்லை. ஆனால் அப்பாவுக்கு மோகனிடம் ஏற்பட்டிருந்த திடீர் அமைதிக்குக் காரணம் மட்டும் விளங்கவில்லை.

அன்று இரவு அந்தத் தெருவில் முருகப் பெருமான் வீதி வலம் வந்தார். மேள வாத்தியங்கள் முழங்கின.

அப்பா, அம்மா, மோகன், பாலா எல்லோரும் வாசலுக்கு வந்து சுவாமியைத் தரிசனம் செய்தார்கள். பாலாவை அப்பா வாசற் புறத்துக் கைப்பிடிச் சுவரில் உட்கார வைத்தார். மோகனுக்கும் சுவரில் உட்கார்ந்து சுவாமி பார்க்க ஆசையா யிருந்தது. ஆனால் அவனுக்குத் தன்னைத் தூக்கிச் சுவரில் உட்கார வைக்கும்படி அப்பாவைக் கேட்க விருப்பமில்லை.

மோகன் உள்ளே போய் மிகவும் சிரமத்துடன் முக்காலியை இழுத்துக் கொண்டு வந்தான்.

"மோகன் எங்கே காணோம்? உள்ளே போய்த் தூங்கி விட்டானா?" என்று அவனைத் தேடினார் அப்பா.

அப்போது வாசல் ரேழியில் மோகன் கஷ்டப்பட்டு முக்காலியைத் தள்ளிக் கொண்டு வருவது அப்பாவின் கண்களில் பட்டது.

உடனே அவர் ஓடி, "மோகன், என்னத்துக்கு முக்காலியைக் கஷ்டப் பட்டுத் தூக்கிக் கொண்டு வருகிறாய்? என்னைக் கேட்டால் நான் உன்னைச் சுவரின் மேல் உட்கார வைக்க மாட்டேனா? வா, வா! முக்காலி வேண்டாம்" என்றார்.

மோகன் அப்பா சொன்னதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. முக்காலியை வாசலுக்குக் கொண்டு வந்து விட்டான். அப்பா அவனைத் தூக்கிச் சுவரில் உட்கார வைக்கப் போனார்.

"வேண்டாம், அப்பா! நான் இதில் ஏறி நின்று பார்க்கிறேன். நீங்கள் குழந்தை பாலாவைக் கவனித்துக் கொள்ளுங்கள்!" என்று கூறிக் கொண்டே மோகன் அவர் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு முக்காலியில் ஏறி நின்று சுவாமியைப் பார்த்தான்.

அப்பா கொஞ்ச நாட்களாகவே வேறு வீடு பார்த்துக் கொண்டிருந்தார். கடைசியாக ஒரு நல்ல வீடு கிடைத்தது. பீரோ, நாற்காலி, மேஜை, சமையல் பாத்திரங்கள் முதலியவைகளை யெல்லாம் 'லாரி'யில் போட்டு, அப்பா புது வீட்டுக்கு அனுப்பி வைத்தார்.



அந்தச் சமயம் மோகன் மிகவும் பரபரப்புடன் தன்னுடைய விளையாட்டுச் சாமான்களையும் புத்தகங்களையும் தனியாக எடுத்து ஒரு பெட்டியில் போட்டு லாரி டிரைவரிடம் கொண்டு வந்து கொடுத்தான். மூன்று சக்கரச் சைக்கிளையும் ஞாபகமாகக் கொடுத்தான்.

எல்லாச் சாமான்களும் புது வீட்டுக்கு வந்து சேர்ந்தன. அப்பாவும் அவர் ஆபீஸ் ஆள்களும் எல்லாச் சாமான்களையும் ஒழுங்காக வைத்தார்கள்.

"மோகனுடைய மூன்று சக்கரச் சைக்கிள், விளையாட்டுச் சாமான்கள், புத்தகங்கள் எல்லாம் எங்கே? நான் ஒன்றையுமே எடுத்து வைக்கவில்லை! நீங்கள் எடுத்து வைத்தீர்களா?" என்றாள் அம்மா பரபரப்போடு.

"நான் அதையெல்லாம் எடுத்துவைக்கவில்லையே! பழைய வீட்டிலேயே தங்கி விட்டனவோ?" என்றார் அப்பா.

"இல்லை, அப்பா! எல்லாம் நான் எடுத்து வந்து விட்டேன்!" என்றான் மோகன் உற்சாகத்துடன்.

லாரி டிரைவர் அவன் மூன்று சக்கரச் சைக்கிளையும் விளையாட்டுச் சாமான்களையும் எடுத்து வந்தான். அப்பாவும் அம்மாவும் ஆவலோடு வாங்கி வைத்தார்கள். மோகன் ஓடிவந்து அவற்றையெல்லாம் வாங்கிக் கொண்டான்.

அப்பா அதிசயத்துடன், "மோகன், எப்படியடா இவ்வளவு சமர்த்தாகி விட்டாய்? இப்போது நீ பிடிவாதமே பிடிப்பதில்லையே! ஏன்?" என்றார்.

"நான் பெரியவனாகி விட்டேன், அப்பா! அம்மா சொல்லிவிட்டாள். நான் இனிமேல் பிடிவாதம் பிடிக்க மாட்டேன். என் வேலைகளை நானே செய்து கொள்வேன்!"

"இது என்ன, இவன் இப்படிச் சொல்லுகிறான்?" என்று அப்பா அம்மாவைப் பார்த்து ஆச்சரியத்துடன் கேட்டார்.

அம்மா சிரித்துக் கொண்டே, "ஒன்றுமில்லை. அன்றைக்கு நீங்கள் பாலாவுக்குப் பொம்மை வாங்கிக் கொண்டு வந்தீர்களல்லவா? அதற்காக மோகன் பாலாவோடு சண்டை பிடிக்க ஆரம்பித்து விட்டான். 'நீ பாலாவை விடப் பெரியவன் இல்லையாடா, மோகன்!' என்றேன். அதைப் பிடித்துக் கொண்டு விட்டான்" என்றாள்.


"குழந்தைகள் மனசில் ஒரு விஷயம் பதிந்து விட்டால் அதை அவர்கள் மறப்பதே இல்லை" என்று கூறிக் கொண்டே அப்பா, மோகனை அணைத்துக் கொண்டு முத்தமிடப் போனார்.

"போ அப்பா! நான் இனிமேல் பெரியவன்!" என்று கூறிக் கொண்டே மோகன் அவர் பிடியிலிருந்து நழுவி ஓடினான்.

பயர்ஸ்டோனைத் தேர்ந்தெடுங்கள்

Firestone

அது டயர்களில் சிறந்தது



மலைச்சரிவில் ஏறுவதில் 23 வருஷங்கள் தொடர்ச்சியாக வெற்றி பெறலாம்.



மலைச்சரிவில் கார் சவாரி செய்வது உலகத்திலேயே பெரிய பந்தயம். மலைப்பாதையில் பாய்ந்து செல்வதற்குச் சாமர்த்தியம் தேவை. "யந்திரங்களுக்கும் டயர்களுக்குங்கூடச் சிரம சாத்தியம்." சாம்பியன்களுக்குக்கூட அது ஒரு சோதனை. வருஷந்தோறும், துணிச்சலுள்ள டிரைவர்கள் தங்களுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பத்தைப் பயர்ஸ்டோன் டயர்களை நம்பிப் பணயம் வைக்கிறார்கள். ஏனென்றால் அவர்களுக்குப் பயங்கரமான ரஸ்தாத் திருப்பங்களிலும் செங்குத்துக்களிலும் தங்களுடைய உயிர் டயர்களில்தான் இருக்கிறது என்பது நன்றாய்த் தெரிந்திருக்கிறது. கடுமையான ஓட்டத்துக்குப் பயர்ஸ்டோன் டயர்கள் ஈடுகொடுக்கின்றன. நீங்களும் கூட ரஸ்தாவில் சலிக்காத பாதுகாப்பை அனுபவிக்கலாம். ரஸ்தாக்களில் வேகமாகச் செல்லுவதற்குப் பாதுகாப்புள்ள டயர் பயர்ஸ்டோன் டயர்கள்தான். வருஷமுழுதும் செல்லக்கூடியதும் பத்திரம் உள்ளதுமான பயர்ஸ்டோன் டயர்களையே உபயோகியுங்கள்.

பயர்ஸ்டோனின் முக்கிய குறிக்கோள் உங்களது பரிபூர்ண பாதுகாப்புதான்



புது வாழ்க்கை

— பி.வி.ஆர் —

"இந்தமாதம் எனக்கு வேறு செலவு இருக்கிறது" என்று கண்ணன் ஆரம்பித்தான்.

"என்ன செலவு?" என்று அவன் தகப்பனார் கேட்டார்.

"இரண்டு சில்க் புஷ் கோட்டும், ரிஸ்டு வாட்சும் வாங்கலாமென்றிருக்கேன் ...... அது போனால் கையில் இருபது ரூபாய் என்னுடைய நித்தியச் செலவுக்குத்தான் காணும்."

"அதற்கெல்லாம் இப்போ ஒன்றும் அவசரமில்லை. அப்புறம் பார்த்துக்கொள்ளலாம்." அப்பாவின் வார்த்தைகளின் அழுத்தத்தைக் கண்ணனால் பொறுக்க முடியவில்லை.

"இல்லை, என் இஷ்டம். எனக்கு வேணும்."

"சரி, என்னமோ செய். என்னிடம் ஏன் சொல்லிக் கொண்டு வருகிறாய்? நீ சம்பாதிக்கிறாய். நீ உனக்குத்தானே செலவு செய்து கொள்ள வேண்டும். போ, போ..." என்று கோபத்துடன் அவன் தகப்பனார் சொல்லிவிட்டு வாசற் பக்கம் சென்றார்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த தாயாரின் முகத்தைக் கண்ணன் பார்த்தான்.

"நீ என்ன அம்மா சொல்லுகிறாய்?"

ஆனால் தாயார் நடுநிலைமை வகித்து விட்டாள். "எனக்குத் தெரியாது......நீயாச்சு, உன் அப்பாவாச்சு......வீட்டிலே ஆயிரம் செலவு......" என்றாள்.

அடிக்கடி, திமர் திமர் என்று குமுறும்பைக் கக்கும் எரிமலையைப் போல் கண்ணன் வீடு அதிரக் கத்தி விட்டான். "இந்த வீட்டில் என்றைக்குத்தான் செலவு இல்லை...? எல்லாம் என் பணத்தில்தான் ஆகணுமோ? நான் படிக்கிறபோது என்ன பண்ணினீர்களாம்?"

அவனுடைய குரலைக் கேட்டுக் கொண்டே மீண்டும் தகப்பனார் உள்ளே வந்தார்.

"என்னடா, கையாலாகாதவன் மாதிரி பெண்களிடம் போய் இரைந்து கொண்டிருக்கிறாய்? உன் பணம் இல்லாவிட்டால் இங்கே குடி முழுகிப் போய்விடாது. என்னவோ, நேற்று நாலு காசு சம்பாதிக்க ஆரம்பித்து விட்டானாம், வீடு அதிரக் கத்துகிறான்" என்றார் கோபத்துடன்.

கண்ணனுக்கு இருந்த கோப வெறியில், வேறு யாராவதாக இருந்தால், கையில் கிடைத்ததைத் தூக்கி முகத்தில் எறிந்திருப்பான். பேசினது அப்பாவாயிற்றே என்று குமுறலோடு அவன் வெளியே சென்றான் ஒரு வார்த்தையும் பேசாமல்.

பிற்பகல் மூன்று மணிக்கு என்ன சந்தோஷத்தோடு சம்பளம் வாங்கினானோ அந்தச் சந்தோஷம் இப்போது இல்லாமல் மனம் அலைமோதிக் கொண்டிருந்தது. தன்னுடைய நிலையை நினைக்க நினைக்க அவனுக்குத் தன் மீதே எரிச்சல் உண்டாக ஆரம்பித்தது.

'நான் சம்பாதிக்காமலே இருந்திருக்கலாம், இந்தமாதிரி என் பணம் என்னுடையதாகவே இல்லாமலிருப்பதற்கு!' என்று அவன் மனத்துக்குள் கருவினான்.

ஐந்து வருஷமாக அவனும் சம்பாதிக்கிறான். பாங்கியில் அவன் பெயரில் காலணா இல்லை. தகப்பனாருடன் இருந்த நிலையில் எல்லாம் அவரிடம் போய்ச் சேருகிறது. அவனுக்கு ஏதாவது தேவையாக இருந்தாலும் ஒவ்வொரு தேவையையும் அவர் அலசிப் பார்த்து விடுகிறார். இன்னும் சில சமயங்களில் 'அவனுக்கே, குடும்பத்தில் இவ்வளவு செலவுகள் இருக்கையில் "இதிலெல்லாம் நாம், நாட்டம்கொள்ளக்கூடாது" என்று தோன்றி விடுகிறது. எல்லாவற்றையும் நினைக்க நினைக்க அவனுக்கு ஆத்திரம்தான் வந்தது.

"பெற்றோருக்குப் பிள்ளை செய்யவேண்டிய கடமை இருக்கத்தான் இருக்கிறது. ஆனால் அதிலும் ஒரு நிலை இல்லையா? பெற்றோர்கள் பிள்ளையின் சக்தியைச் சோதிப்பது மாதிரி இருந்து விட்டால் என்ன செய்கிறது?" என்ற கேள்வி அவனுள் துளைத்துக் கொண்டிருந்தது.

அவனுக்குத் தன்னுடைய சம்பாத்தியத்தில் மாதம் நாற்றுத் தொண்ணூறு ரூபாயில் எப்படி எப்படியெல்லாமோ இருக்க ஆசை. மாதம் வீட்டுக்கு நூறு ரூபாய் கொடுத்து விட்டால் பாக்கி தொண்ணூறு ரூபாய். நல்ல வேளையாக பஸ் சார்ஜ் என்று ஒன்றும் இல்லை. வேணுமானால் மத்தியான டிபனுக்கு வீட்டுக்குக் கூட வந்துவிடலாம். இருக்கிற பணத்தில் நல்ல துணிமணிகள், கைக்கு ஒரு கடிகாரம், இரண்டு ஜோடி பூட்ஸுகள் எல்லாம் வாங்கிக் கொள்ளலாம்.

பூட்ஸைப் பற்றி நினைத்தபோது, கால் பூட்ஸைப் பார்த்துக்கொண்டான். நிறம் தெரியாமல் மங்கிக் கிடந்தது. முன்னாலும் பின்னாலும் தையல், ஒரே ஒட்டுத் தையல்தான்.

"என்னடா, கண்ணா, இவ்வளவு சம்பாதிக்கிறாய்......நல்லதாக ஒரு ஜோடி வாங்கிக்

கொள்ளேன் !'' என்று நண்பர்கள் சொல்லு கையில் அவனுக்கு நாக்கைப் பிடுங்கிக் கொள்ளத் தோன்றும்.

ஒரு சமயம், அவனுடைய நண்பன் ஒருவன் இருபத்திரண்டு ரூபாய்க்குக் கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருக்க ஒரு பச்சைக் கண்ணாடி வாங்கினான். அதைப் போட்டுப் பார்த்த போது, கண்ணனுடைய கண்களில் ஏற்பட்ட குளிர்ச்சி உள்ளத்தின் எரிச்சலில் கரிந்தது.

"நீயும் வாங்கிக் கொள்ளேன்......இரண்டாக வாங்கினால் இன்னும் குறைத்துத் தருவான்'' என்று நண்பன் சொன்னான். எந்தக் காரணத்தைக்கொண்டு அவன் சொன்னானோ?

"இல்லை......இப்போ வேண்டாம்...''

"என்னடா, இன்னிக்குத்தானே சம்பளம் வாங்கினாய் ?''

"அதெல்லாம் சரித்தாண்டா...இன்னிக்கு வேண்டாம்......!''

ஒரு மாதம் எட்டாம் தேதி ஒரு நண்பனிடம் இரண்டு ரூபாய் கடன் கேட்டான். அதைக் கொடுக்கையில் அவன், "ஆமாம், முதல் தேதிதானே சம்பளம் வாங்கினாய்? அதற்குள்ளேயா கை வற்றிவிட்டது?'' என்றான். தன்னுடைய அவல நிலையைக் குத்திக் காட்டுவது போலப் பேசின நண்பனின் முகத்தில் இரண்டு ரூபாயை விட்டெறியக் கண்ணனுக்கு மனம் துடித்தது. தன்னை விடக் குறைவாகச் சம்பளம் வாங்குபவனிடம் கடன் வாங்கும் நிலையில் அவன் தலை கொதித்தது.

கண்ணனுக்கு வாழ்க்கை ரசிக்கவில்லை. தேவைப் பொருள்களே அவனுடைய கைக்கு அவன் இஷ்டப்படி கிடைக்காத போது, புது மோஸ்தர் வாழ்க்கையை அவன் எப்படி அனுபவிக்க முடியும் ?

எல்லாவற்றையும் ஒவ்வொன்றாகத் துருவித் துருவிப் பார்த்தபோது கடைசியில் தகப்பனார் மீதுதான் கோபம் வந்து நின்றது.

'என் வயதில் அவர் இப்படித்தான் இருந்தாரோ, சம்பாதித்ததை யெல்லாம் தம் தகப்பனாரிடம் கொட்டிக் கொண்டு?' என்று அவன் பொருமினான்.

ஆனால் அவன் மனத்திற்குள்ளேயே, 'அப்பா அப்படி ஒன்றும் என்னிடம், இவ்வளவு தா, அவ்வளவு தா, என்று வாங்கிக் கொள்ளுவதில்லையே, நானாகத்தானே கொடுக்கிறேன் !' என்ற நினைவும் உண்டாயிற்று.

தனக்குத் தன் இஷ்டம்போல் செலவு செய்ய—குடும்பம் என்ற கோலத்தில் அலங்கோலமாக இருக்க, துணிவு உண்டாகவில்லை என்றுதான் அவன் கருதினான். எல்லாரும், கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கையில் தான் மட்டும், சம்பாதிக்கிறவன் என்ற காரணத்தில், ஜம்பமாகத் திரியலாமா என்ற கேள்வியும் அவன் மனத்தில் எழுந்தது......

நடந்து நடந்து அவன் கடற்கரைக்கு வந்தாகிவிட்டது. உட்காருகையில் ஒரு பெண் போய்க் கொண்டிருந்தாள். மனச் சஞ்சலத்திற் கிடையிலும், அவனுடைய கண்கள் அவளுடைய அழகைக் காண விரும்பின.

'எனக்குக் கல்யாணமாகி யிருந்தால் ஒரு வேளை இப்படி மனம் கசக்காதோ ?' என்று தனக்குள்ளேயே கேட்டுக் கொண்டான்.

'ஆனால் அப்பாதான் அதற்கும் விட வில்லையே ? வருகிறவர் கிட்டே யெல்லாம் ஐயாயிரத்தைக் கொண்டா, ஆறாயிரத்தைக் கொண்டா என்றால் யார் பெண்ணைக் கொண்டு வருவார்கள் ? பையனுக்கு வயது ஆக ஆக விலை குறைகிறது என்று ஏன் தெரிய மாட்டேன் என்கிறது ?'

அம்மா மூன்று வருஷம் முன்னால் சொன்னது நினைவுக்கு வந்தது. "உன் வயதிலே உன் அப்பாவுக்கு நீ பிறந்தாச்சு !''

அதை நினைத்த போது அவனுக்கு இப்போது சிரிப்புக்கூட வந்தது. அம்மாவின் மனசில் இருக்கிறது அப்பாவுக்குக் கொஞ்சமும் இல்லை. இல்லாவிட்டால், ஒரு இடத்தில் ஒரு பெண்ணைப் பார்த்து விட்டு, பிடித்திருக்கிறது என்று சொன்ன பிறகும் அந்த இடத்தை நிராகரிப்பானேன் ? நல்ல, அழகான பெண். வேண்டிய அளவு படித்தவள். நல்ல குடும்பம். அம்மாவுக்கும் அவளைப் பிடித்திருக்கிறது. எல்லாம் சுபமாக முடியும் என்ற தருணத்தில் அப்பா முட்டுக் கட்டை போட்டாரே ! ஐந்நூறு ரூபாய் குறைந்தால் என்ன குடி முழுகி விடுமோ ?

கண்ணனுக்கு அதை இப்போது நினைக்கையில்கூடப் பொறுக்க முடியவில்லை. தன்னுடைய வாழ்க்கை மணத்தையே தகப்பனார் குலைத்து விட்டதாகத் தோன்றியது அவனுக்கு. "நீங்கள் ஐந்நூறு ரூபாய்க்கு அழாதீர்கள். எனக்கு இந்தப் பெண்தான் வேண்டும். நீங்கள் இருந்து நடத்தி வைக்காவிட்டால், நான் தனியாக இருந்து பண்ணிக் கொள்ளுகிறேன் !'' என்று சொல்ல அவன் துடித்தான். சக்தியும் தைரியமும் தொண்டையில் வந்து முடிகின்றதே !

'ஒரு நாள் ஒரு அவலட்சணமான பெண்ணை, பணம் கிடைக்கிறது என்று என் தலையில் கட்டினால் நான் என்ன செய்வேன் ? எதிர்த்துப் பேச என்னால் முடியுமா? எனக்கு ஏன் துணிவு உண்டாக மாட்டேன் என்கிறது ?' என்று தன்னையே அவன் வெறுத்துக் கொண்டான்.

ஆனால் எல்லாவற்றையும் ஆற அமர யோசித்தபோது, 'நான் கலியாணம் செய்து கொண்டாலும் ஒன்றுதான். இல்லாவிட்டாலும் ஒன்றுதான். அப்பா என்ன மாறி விடவா போகிறார் ? அப்போதும் இதே மாதிரிதான் படி அளக்க வேண்டும். 'அவளுக்கு' முன்னாலும் என் தரித்திரம் தாண்டவமாடும் !'' என்று அவன் நினைத்தான்.

* * *

வீட்டுக்குத் திரும்பி வரும்போது, தற்செயலாக அவன் தகப்பனாரின் நண்பர் ஒருவர் எதிர்ப்பட்டார். "என்னடா, கண்ணா ! சௌக்கியமா ?'' என்று கேட்டார்.

"ஏதோ இருக்கிறேன், மாமா !''

"என்னடா, உடம்பு இப்படி இளைச்சுக் கிடக்கு? இருபத்தைந்து வயது மனிதனுத் தோணலே! மூப்பது வயது மூப்பு அல்லவா முகத்திலே காணறது?"

"உடம்பு இரண்டு மாதமாய்ச் சரியில்லே."

"நல்ல டானிக் வாங்கிச் சாப்பிடு."

"ஆகட்டும்!"

"உம்; அப்பா ஊருக்குப் போனுரா!"

"அடுத்த அறுவடைக்குத்தான் இனிமே!"

"அவருக்குப் பரவாயில்லேடா, ஊரிலே வீடும் நிலமும்! பிள்ளை பட்டணத்திலே நன்ருகச் சம்பாதிக்கிருன். இரண்டு பெண்ணை யும் கல்யாணம் செய்து கொடுத்தாச்சு. இனிமே என்ன கவலை?"

"அவருடைய நிம்மதியில்தானே என் கவலை!" என்று கண்ணனுக்குப் பதில் சொல்லத் துடித்தது.

"அப்போ நான் வரேன்!" என்று அவரிடம் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினுன்.

உண்மையில் தன் தகப்பனுர் ஊரில் இருக்கிற நிலத்தைப் பார்த்துக் கொண்டு சொந்த வீட்டில் அம்மாவுடன் இருக்கலாமே என்று நினைத்தான். கொல்லையில் காய் கறிகளுக்குப் பஞ்சமில்லை. வயலிலிருந்து நெல் வருகிறது. அவனும் ஏதோ அவருக்கு மாதம் அனுப்பி விடுவான். ஏன் இங்கே வந்து அவனைக் கஷ்டப்படுத்த வேண்டும்? நெல்லிலிருந்து கிடைக்கிற பணத்தை என்ன செய்கிருர் என்றுகூட அவனுக்குத் தெரியாது. அவன் கொடுக்கிற பணத்தில் தங்கைகளுக்குத் தீபாவளிக்கு என்றும், கார்த்திகைக்கு என்றும், பொங்கலுக்கு என்றும் பங்கு போகிறது. ஆனுல் அவனுக்கு ஒரு பண்டிகையும் விசேஷமும் கிடையாது. அப்பாவும் அம்மாவும் சொல்லாமலேயே தங்கைகளுக்கு அனுப்ப அவனுக்கு ஆசையுண்டு. புதைந்து கிடக்கும் ஆசையைப் புதைத்து விட்டு அவனிடமிருந்து வாங்கிக் கொள்ளும் பணத்திலிருந்து தம் பெயரால் அப்பா அனுப்புவதைத்தான் கண்ணனுல் சிறிதும் சகித்துக் கொள்ள முடியவில்லை.

• • •

வீட்டை அடைந்தபோது எங்கிருந்தோ திடீரென்று வயிற்றுவலி தாக்கியது. அப்பாவின் அறையில் அவர் முன்னுல் இருந்த முக்காலியில் நூற்றி எழுபது ரூபாயை வைத்து விட்டுத் தன்னுடைய அறைக்குள் நுழைகையில் – "இந்த வயிற்று வலி மட்டும் நான்கு வருஷங்களுக்கு முன் வராமலிருந்தால் இப்போ நான் கஷ்டப்பட வேண்டியிருக்குமா?" என்ற கேள்வி உதித்தது. உடனேயே பழைய சம்பவங்களும் அவன் கண்முன் ஒவ்வொன்ருகத் தோன்றின.

சம்பாதிக்க ஆரம்பித்து ஆறு மாதங்கள்தாம் ஆகியிருந்தன. பட்டணத்தில் அறை எடுத்துக் கொண்டு, ஓட்டலில் சாப்பிட்டு வந்தான். செக்கு மாடுகள் மாதிரி ஓட்டலில் தினமும் ஒரேமாதிரி கறி, கூட்டு, சாம்பார் ரசம்தான். நாள் ஆக ஆக, சாப்பாடு அவனுடைய தேகத்துக்கு ஒத்துக் கொள்ளவில்லை. ஜீரண சக்தி குறைந்தது. அடிக்கடி வயிற்றில் வலி கண்டது. ஒருதரம் அது அதிகமாகி அவன் படுக்கையில் ஏழு நாட்கள் கிடந்து விட்டு, ஊருக்குப் பெற்ருரைப் பார்க்கச் சென்ருன்.

"என்னடா, கண்ணு! உன் உடம்பு இப்படி இளைத்துத் துரும்பாகி விட்டதே!" என்று தாயார் இடிந்து விட்டாள்.

"ஏண்டா, எத்தனை நாளாக இப்படியிருக்கு?" என்று அதிகாரத் தொனியில் தகப்பனுர் கேட்டார். கண்ணனுக்குத் தகப்பனுருடைய அன்பு என்னமோ புலப்படவில்லை. அம்மா இடிந்து போய் உட்கார்ந்ததும், வெளிப்பட்ட அன்புதான் உண்மையானது, மற்றதெல்லாம் அன்பே யல்ல என்பதுதான் அவனுடைய கருத்து. தகப்பனுர் தாயைப் போல இளநெஞ்சத்தைக் காட்டிக் கொள்ள மாட்டார் என்பது ஏனே அவனுக்கு அந்த வயதில் புரியவில்லை.

"மூன்று மாதமாக!"

"மூன்று மாதமாகத் தூங்கிக் கொண்டிருந்தாயோ? உடனே வைத்தியம் பார்த்துக் கொள்ளுகிறது தானே?" என்று அவர் கடிந்து கொண்டார். பிறகு, கண்ணனுடைய தாயாரிடம், "இனிமேல் உன் பிள்ளை பட்டணத்தில் ஓட்டலிலே சாப்பிடக்



கூடாது. நீயும் நானும் இங்கே நடத்துகிற குடித்தனத்தை அங்கே நடத்துவோம்!'' என்றார் அவர்.

தன் தகப்பனார் அன்று செய்த முடிவின் விபரீதத்தைக் கண்ணன் நினைக்கையில் அவனுக்கு மனம் எரிந்தது. தன்னைச் சபித்துக் கொண்டே படுக்கையை விரித்தான்.

"என்னடா, சாப்பிட வரவில்லையா?'' என்று கேட்டுக் கொண்டே தாயார் வந்தாள்.

அவள் முகத்தைப் பார்த்தான். கண்களின் தாய்மைக் கனிவு அவனுடைய நெஞ்சை அள்ளியது. தும்பைப் பூவாக இருந்த அவள் தலையும், நெற்றிக் குங்குமமும், மாசற்ற முகமும் ஒரு கணம் அவனை மௌனமாக்கின.

"கண்ணா, சாப்பிட வரவில்லையா?''

"வேண்டாம் அம்மா; ஒரு தம்ளரில் 'மோர்' மாத்திரம் கொடு. கொஞ்சம் புளித்த மோராக இருக்கணும்!''

"ஒண்ணும் தேதின்னு ஓட்டலிலே கண்ட படி தின்கணும்னு சொல்லியிருக்கா என்ன?'' என்று முணுமுணுத்துக் கொண்டே அவள் உள்ளே சென்றாள்.

* * *

அவன் மோரைப் பருகுகையில், "இன்னிக்குச் சாயங்காலம் முக்கியமான சமாசாரத்தைச் சொல்ல வருவதற்குள் அப்பாவுடன் உன் தர்க்கம் ஆரம்பித்து விட்டது'' என்று தாயார் சொன்னாள்.

"என்ன?'' என்று கேட்டான்.

"இன்னிக்கு அப்பாவின் பழைய சிநேகிதர் ஒருவர் காலையிலே வந்தார். இரண்டு பேரும் ஒன்றாகப் படித்தவர்களாம். கல்கத்தாவிலே ஆபீஸராக இருந்து ரிடயராகி......''

"விஷயத்தைச் சொல்லேன், அம்மா?'' என்று கண்ணன் இடை மறித்தான். அவனுக்கு எதிலுமே பொறுமை கிடையாது.

"உன் ஜாதகம் அவருக்குக் கிடைத்திருக்கு. தம் பெண் ஜாதகமும் அதுவும் நன்றாகப் பொருந்தி யிருக்காம்......''

"ஓகோ!''

"நாளைக்கு நீயும் நானுமாகப் பெண்ணைப் பார்க்கப் போகணும்......''

"எனக்கு இப்போ அவசரமில்லை!''

"அதெல்லாம் இருக்கட்டும். நாளைக்குப் போகணும்.''

"இல்லை, அம்மா, இப்போ கல்யாணத்துக்கு என்ன அவசரம்?''

எல்லாப் பிள்ளைகளும் சொல்லுவது போலத்தான் கண்ணனும் சொன்னான்.

பார்த்த இடத்தில் அவனுக்குப் பெண் பிடித்து விட்டது. பண விஷயத்தில் அப்பாவுக்கும் பிடித்தது. சீர் செனத்திகள் விஷயத்தில் அம்மாவுக்குப் பிடித்தது.

* * *

கலியாணத்துக்குப் பிறகு ஒரு மாதம் சென்றது. அது தான் கிரகஸ்தனான பிறகு வாங்கும் முதல் சம்பளம்.

"அப்பா...'' என்று கூப்பிட்டுக் கொண்டு கண்ணன் போனான்.

"என்னடா...?''

"இந்தாருங்கள்....!''

அவன் கையைப் பார்த்ததும், "பணமா! அதைக் கல்யாணியினிடம் கொடு. இனிமேல் அவள்தான் பொறுப்பாகக் குடும்பத்தை நடத்தணும்......'' என்றார்.

கண்ணன் அசந்து போனான்.

பதினைந்து நாட்களில் பெற்றோர் ஊருக்குப் புறப்பட்டுப் போவதைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்கள். கண்ணனுக்கு என்ன சொல்லுவது, நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்று தெரியவில்லை. ஆனால் தகப்பனாரே அந்தப் பிரச்னையைத் தீர்த்து விட்டார்.

"இந்தத் தடவை அறுவடைக்கு, இன்னிக்கு எட்டாம் நாள் புதன்கிழமை ஊருக்கு நானும் அம்மாவும் போகப் போகிறோம்!''

"அம்மா எதற்கு?''

அவன் கேட்டுக் கொண்டிருக்கையிலேயே அம்மா அங்கே வந்தாள்.

"என்ன, உங்க மாட்டுப் பெண்ணுக்கு நன்னா சமைக்கத் தெரிகிறது. ஏதாவது சொன்னால் உடனே புரிந்து கொள்கிறாள். இனிமேல் நமக்குக் கவலை இல்லை...''

கண்ணன் மீண்டும் கேட்டான்: "அம்மாவும் கூட வரணுமா? நீங்கள் மாத்திரம் வழக்கம்போலப் போய் வாருங்களேன்...''

தகப்பனார் சிரித்தார். பிறகு "நீ தந்த பணத்தில் பாதியை அப்படியே வைத்திருக்கிறேன். பாங்கியில் போட்டு வை!'' என்றார்.

கண்ணனுடைய முகத்திலேற்பட்ட மாறுதலைக் கண்டு மீண்டும் தகப்பனார், அவன் தாயாரைப் பார்த்துச் சிரித்தார்.


அருணோதயம் முதல்
நட்சத்திரம் உதிக்கும்
வரையில் - நாள்முழுவதும்
இனிய வாசனையோடிருப்பீராக.
டால்கம் பவுடர்
பள பளவென்று
ஜொலிக்கும் புதுமைக்கு காஷ்மீர் புக்கே டால்கம் பவுடரை உங்கள் மேல் தாராளமாகத் தூவுங்கள். அது அதிகக்கசிவை உறிஞ்சுகிறது . . . எரிச்சலையும் அரிப்பையும் அடங்கச் செய்கிறது . . . உங்களைக் குளிமையுடனும் இனிய வாசனையுடனும், நாள்முழுவதும் புதுமையுடனும் இருக்கச் செய்கிறது.
காஷ்மீர் புக்கே
மாணிடர்கள் விரும்பும் பரிமளத்துடன்
1806லிருந்து கோல்கேட் உயர்ந்த ரகத்திற்குப் பெயர்போனது.



நானா சாஹேப்

எஸ். கோபாலன்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

கனம் மந்திரியார் தாம் எழுதியிருந்த சரித்திர புஸ்தகத்தில் இன்னொரு விஷயமும் குறிப்பிட்டிருந்தார். அதாவது நானாசாஹேபுடன் சிப்பாய்க் கலகத்தில் ஒத்துழைத்த தாந்தையாடோபே என்பவர் இன்னும் ஜீவித்திருக்கிறார் என்றும் அன்னாரை ஆங்கிலேயர் தூக்கிலிட்டதாகக் கூறுவது பொய்யென்றும் கண்டித்துத் தகுந்த மூகாந்திரங்களைக் காட்டிக் கோவையாக எழுதியிருந்தார்.

இதை நோக்குங்கால் டில்லி டைரக்டர் ஜெனரல் நானாசாஹேப் என்று சொல்லாமல் நானாபட்னவிஸ் என்று தவறாகச் சொன்னது ஒரு விதத்தில் நல்லதாகத் தோன்றியது. அப்பொழுதும் தென்னாட்டில் த—நகரத்தில் நானாபட்னவிஸின் உருவச் சிலை எப்படிக் கிடைத்ததென்று ஒரிது மயங்கினார். ஆனால் இதற்குப் பதிலையும் அவரே வெகு எளிதில் கண்டு பிடித்தார். எங்கள் நகரம் பல்லாண்டுகளாக மகாராஷ்டிரர்களின் கற்கோட்டையாக விளங்கி வந்தது. ஒரு வேளை ஆங்கிலேயர்களின் கண்ணிற் படாமல் நானா பட்னவிஸின் சிலையை எங்கள் நகர மக்கள் காப்பாற்றி வந்திருக்கக் கூடும் என்ற முடிவுக்கு வந்தார்.

கனம் மந்திரி அவர்களுக்கு டில்லி மியூஸியத்திற்குப் போகும் சந்தர்ப்பம் வெகு சீக்கிரத்தில் கிட்டியது. அமெரிக்காவிலிருந்தும் புதிதாக ஓர் பிரதிநிதி வந்திருந்தார். அவருக்கு நம் நாட்டுக் கலைப் பொக்கிஷங்களைப் பார்ப்பதில் பெரும் பைத்தியம். கனம் மந்திரி அவர்கள் அவரை மியூஸியத்திற்கு அழைத்துச் சென்றாரென்று சொல்லவும் வேண்டுமா! புதை பொருள் இலாகா டைரெக்டர் ஜெனரலும் மந்திரியுடன் சென்றார். மியூஸியத்திற்குப் போனதும் கனம் மந்திரி அவர்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கும் விசேஷ சாமான்களைப் பற்றி விசாரித்தார்.

"பம்பாயிலிருந்து வெண்கலத்தாலான நடராஜா விக்ரஹம் ஒன்று வந்திருக்கிறது" என்றார் மியூஸிய அதிகாரி.

"நடராஜாக்களை இத்தேசத்தின் தென் கோடியில் தான் காணலாம் எனக் கேள்விப்பட்டிருக்கிறேன்" என்று அந்த அமெரிக்கர் சொன்னதும் நமது மந்திரி ஆச்சரியத்துடன், "நீங்கள் உரைப்பது மூன்றிலும் உண்மையே. எங்களுடைய நாட்டைப் பற்றி நீங்கள் இவ்வளவு தூரம் தெரிந்து கொண்டிருப்பது மிகவும் ஆச்சரியம். ஆனால் எங்கள் கலைப் பொருள்களைச் சேகரிக்கும் இடம் பம்பாய்" என்று கூறினார்.

பிறகு மியூஸியம் அதிகாரியைப் பார்த்து கனம் மந்திரி அவர்கள், "நான் நடராஜாவைப் பற்றிக் கேட்கவில்லை. சமீபத்தில் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட விஷயங்களைப் பற்றி யல்லவா கேட்டேன். நானா பட்னவிஸின் உருவச் சிலை எங்கே!" என்று கேட்டார்.

மியூஸியம் அதிகாரி "உருவச் சிலையா!" என்று வியப்புடன் கூறியதைக் கேட்ட மந்திரி அவர்கள் புருவத்தை நெரித்து "இங்கு உருவச் சிலை ஒன்றும் வரவில்லையா!" என்று கேட்டார்.

இடையே டைரக்டர் ஜெனரல் "கனம் மந்திரி அவர்கள் நானா சாஹேப் அவர்களின் உருவச் சிலையைப்பற்றி யல்லவா கேட்கிறார்!" என்றார். இப்பொழுதுதான் அவருக்கு நானா பட்னவிஸிக்கும் நானா சாஹேபுக்கும் வித்தியாசம் புலப்பட்டது. மேலும் அவர் மியூஸியம் அதிகாரியைப் பார்த்து "தென்னிந்தியாவில் த— நகரத்திலிருந்து வந்த உருவச் சிலையை மறந்து விட்டீர்களா!" என்று கேட்டார்.

"அங்கிருந்து வந்தது சிலையல்லவே! நானா சாஹேப் அவர்களே நேரில் வந்திருக்கிறார்" என்று சொன்னார் மியூஸியம் அதிகாரி.



இதைக் கேட்டவுடன் அங்கே கூடி யிருந்த யாவரும் ஒருவருக் கொருவர் விஷயம் புரியாது பார்த்துக் கொண்டார்கள்.

"சரி! சிலையை விட மனிதனே நேரில் வந்திருப்பது மேல் அல்லவா!" என்று அமெரிக்கப் பிரதிநிதி கூறினார்.

எல்லோரும் மியூஸியத்திற்குள் சென்றனர். உள்ளே நுழைந்ததும் நானா அவர்களை வரவேற்று அழைத்துச் சென்றார். அச்சமயத்தில் இவர்தான் நானா சாஹேப் என்று வந்தவர்களிடம் நானாவை அறிமுகம் செய்து வைக்க மியூஸியம் அதிகாரி மறந்து விட்டார். நானா சாஹேப், அவர்களை எங்கும் சுற்றிக் காண்பித்து அங்குள்ள பொருள்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் வெகு திறமையாக எடுத்துக் கூறி, குறைந்தது ஒரு நூற்றாண்டாவது அவர் அங்கு தங்கியிருந்து பழகியிருக்க வேண்டும் என்று பிறர் நினைக்கும்படி தம்மைக் காட்டிக் கொண்டார்.

"இங்கு எவ்வளவு நாட்களாக நீங்கள் வழி காட்டியாக இருந்து வருகிறீர்கள்" என்று அமெரிக்கப் பிரதிநிதி கேட்டதும் நானா சாஹேப் "யார்! நானா 'கைட்'! நான் 'கைட்'ல்ல. நான் நானா சாஹேப்! வெள்ளையர்களால் சிப்பாய்க் கலகம் என்று சொல்லப்படும் எமது நாட்டு முதல் விடுதலைப் போரில் தலைவனாக இருந்த நானாசாஹேப் நான்" என்றார்.

"இவர்தான் தென்னிந்தியாவில் ந—கரத்தில் இருந்து வந்தவர். நானாசாஹேப்" என்று அவசர அவசரமாக மியூஸியம் அதிகாரி கூறினார். கனம் மந்திரி அவர்கள் நானாசாஹேபை ஏற இறங்க அங்குலம் அங்குலமாக அளப்பது போல் உற்றுக் கவனித்தார்.

பிறகு கனம் மந்திரி அவர்கள் "இது முழுவதும் ஒரு கதையாகத்தான் இருக்கிறது. முதலில் இங்கு வந்தது ஒரு சிலையென்றும் அது நானா பட்னவிஸின் சிலையென்றும் கூறினீர்கள். அடுத்தபடியாக அது நானா சாஹேபின் சிலை என்றீர்கள்.



இப்பொழுது நானாசாஹேப் அவர்களே நேரில் வந்து விட்டதாகச் சொல்லுகிறீர்கள். உங்களால் இப்பொழுது எனக்கு ஏற்பட்டிருக்கும் தொந்தரவை நீங்கள் எளிதில் அறிய மாட்டீர்கள். சமீபத்தில் வெளிவந்துள்ள என்னுடைய புத்தகத்தில் அசைக்க முடியாத சான்றுகளுடன் நானா சாஹேப் அவர்கள் இறந்து விட்டதாக நான் கூறி யிருக்கிறேன். உங்களுடைய இம்மொழிகளால் நீங்கள் அதை மறுப்பதாகத் தெரிகிறது" என்று சொன்னார்.

டைரக்டர் ஜெனரல் மியூஸியம் அதிகாரியைப் பார்த்து "இது உம்முடைய பிழை" என்றார். மியூஸியம் அதிகாரி படபடவென்று சில வார்த்தைகளைக் கூறி, "ந—கரத்திலுள்ள புதை பொருள் அதிகாரியின் பிழையே தவிர என்னுடைய பிழையல்ல" என்றார்.

உடனே மந்திரி கோபத்தோடு "ஆம். அவரைக் கேட்டால் அவர் உங்கள் தலையில் பிழையைச் சுமத்துவார்" என்றார்.

இதைக் கேட்ட நானாசாஹேப் "இதில் யார் மீதும் குற்றம் சொல்லத் தேவை இல்லை. மந்திரியவர்களும் வருந்த வேண்டியதில்லை. உங்கள் புத்தகத்தில் ஆதாரமாகக் கொடுக்கப்பட்டுள்ள மூலாதாரங்கள் ஆங்கிலேயர்களால் சிருஷ்டி செய்யப்பட்ட கட்டுக் கதைகள். நம் நாட்டுச் சரித்திரத்தை நாமே எழுத வேண்டும். என்ன ஐயா! நான், நானாசாஹேப், உயிருட னிருக்கிறேனா அல்லது இறந்து விட்டேனா என்று எனக்குத் தெரியாதா! இதை வேறு யாரிடமாவது கேட்க வேண்டுமா!" என்று புன்சிரிப்புடன் கூறினார்.

நானாசாஹேபின் வார்த்தைகளைக் கேட்ட கனம் மந்திரி அவர்கள் கம்பீரமாக "ஆனால் நண்பரே! நீங்கள் வெகு காலத்திற்கு முன்னரே இறந்து விட்டீர்கள் என்று அறிய வேண்டும். நீங்கள் உயிருடனிருக்கிறீர்கள் என்ற முடிவுக்கு வர என்னால் இயலாது. நீங்கள் 'நான் தான் தாந்தையா டோபே' என்று சொன்னால் அதை ஒரு சமயம் நம்பலாம். தாந்தையாடோபே உயிருடனிருக்கிறார் என்பதற்குத் தகுந்த சாட்சி இருக்கிறது" என்றார்.

"இத் தகையதோர் முக்கியமான விஷயத்தை இவ்வளவு எளிதில் முடிவு செய்வது நியாயமல்ல. நான் இறந்ததாகக் கூறும் காலத்தில் நீங்கள் இருந்திருக்க முடியாது. ஆகையால் நேரில் கண்டிருக்கவும் முடியாது. தாந்தையா டோபேயின் கதி என்னவாயிற்று என்று எனக்குத் தெரியாதா! அதற்கு என்னுடைய வாக்குமூலம் தான் உங்களுக்கு முக்கியமான ஆதாரமாகும். தாந்தையா டோபேயைக் காட்டில் ஒரு கொடிய புலி விழுங்கியபோது திகைத்துப் போய்ச் செய்வகை யறியாது பக்கத்தில் நின்ற பாவி நான். எனது சேனாபதியாகிய அவனை ஆங்கிலேயர் தூக்கிலிட்டனர் என்று கூறுவது சுத்தப் பொய் வதந்தி" என்றார் நானா சாஹேப்.

இங்கு நானாவின் குரல் சிறிது நடுக்க முற்றது. கண்களிலிருந்து ஓர் சிறு நீர்த்துளி விழுந்தது. தமது பிருதுவான 'துனர்' வெண்மையான தாடியின் நுனியால் தனது கண்களை ஒத்திக் கொண்டார். கனம் மந்திரி அவர்களும் சிறிதளவு கலங்காமலில்லை. ஏனெனில் தாந்தையாடோபேயின் வலது கை போலிருந்த ஒருவரின் வழித்தோன்றியவர் நமது மந்திரி.

கனம் மந்திரி பெருமூச்சு விட்டு, "இனி ஒன்றும் செய்து கொள்வதற்கில்லை.நான் உங்களைச் சென்ற ஆண்டில் சந்தித்திருந்தால் இது விஷயமாக என்ன



முடிவு செய்திருப்பேன் என்று தீர்மானமாகச் சொல்லுவதற்கு என்னால் இப்பொழுது இயலாது. என்ன செய்வது! ஏற்கெனவே நீங்கள் இறந்து விட்டதாகவும் தாந்தையா டோபே இன்னும் உயிருடன் இருந்து வருவதாகவும் நான் சொல்லி முடிந்து போய் விட்டது" என்று கூறினார்.

"உங்கள் புத்தகத்துக்குத் தீ வைத்து விட்டால் எல்லாம் சரியாகிவிடும்" என்று சொல்லுவதற்கு நாணா சாஹேப் தயாராக இருந்தார். அவர் மூர்க்கத்தனமாக ஏதாவது சொல்லக் கூடும் என்று பயந்த மியூஸியம் அதிகாரி மந்திரியை அப்புறம் அழைத்துப் போக யத்தனித்தார். அச்சமயத்தில் நல்லகாலமாக வேறு எதையோ கவனித்துக் கொண்டிருந்த அமெரிக்க நாட்டுப் பிரதிநிதியும் டைரக்டர் ஜெனரலும் வந்து விட்டார்கள். வேறு எங்கோ அவசர காரியமாகப் போக வேண்டுமென்று கூறி மந்திரியுடன் எல்லோரும் அங்கிருந்து சென்று விட்டனர்.

அவர்கள் வெளியே சென்றதும் மியூஸியம் அதிகாரி நாணாவைப் பார்த்து, "இனி உமக்கு இங்கு வேலை இல்லை" என்றார். "நான் இந்த இடத்தைத் தேடி வரவில்லையே" என்று நாணாசாஹேப் அவர்கள் மிகவும் பெருமை ததும்பும் குரலில் பதிலுரைத்தார். மேலும் "அப்போதைக்கப்போது ஆங்காங்கு தென்படும் உங்கள் தேசத்து வீரர்களைக் கண்டு கொள்ளும் திறமை உங்களுக்கில்லையென்றால் அந்த நஷ்டம் உங்கள் தேசத்தைச் சார்ந்ததே" என்று பரிதபித்துக் கூறினார் நாணா சாஹேப். ஆனால் மியூஸியம் அதிகாரி சிறிதும் தயங்காமல் "மேலிருந்து வரும் உத்தரவுகளை நிறைவேற்ற வேண்டியவன் நான்" என்று சொல்லி நாணாசாஹேபை வெளியே அனுப்பி மியூஸியத்தின் கதவுகளைத் தாளிட்டார்.

நாணாசாஹேப் அவர்களை மியூஸியத்திலிருந்து அப்புறப்படுத்தி விட்டார்கள் என்ற செய்தி டில்லியில் காட்டுத் தீயைப்போல் எங்கும் பரவியது. அவரை மீண்டும் மியூஸியத்தில் அமர்த்த வேண்டுமென்று ஒரு கிளர்ச்சி பலமாக உதித்தது. "மகாநந்து சபையின்" அங்கத்தினர்கள் பல கோஷங்களைச் செய்து ஊர்வலங்களை நடத்தினர். இன்னும் சிலர் பலாத்கார முறைகளைக் கையாண்டு மந்திரிகளின் வீட்டு வாயில்களில் சத்யாக்ரஹம் செய்தனர். ஓரிடத்தில் இந்தக் கிளர்ச்சிக்காரர்களை விரட்டியடிக்கக் கண்ணீர்ப் புகை பிரயோகிக்க வேண்டியிருந்தது. நாணா சாஹேப் அவர்களே ஒரு மாபெரும் ஊர்வலத்தைத் தலைமை தாங்கி நடத்திச் சென்றபொழுது போலீஸாருடன் ஏற்பட்ட மோதலில், அவருக்குச் சில சிறிய காயங்கள் ஏற்பட்டன. அதனால் அவர் சிலநாட்கள் ஆஸ்பத்திரியில் தங்கும்படி நேர்ந்தது.



இவ்விஷயங்கள் முழுவதும் பத்திரிகைகளில் விவரமாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தன. கனம் மந்திரி அவர்களுக்கும் நாணா சாஹேப் அவர்களுக்கும் நடந்த சம்பாஷணை சிறிது மிகைப்படுத்திக் கூறப்பட்டிருந்தது. அப்பொழுதிருந்த அசெம்பளியில் சில மெம்பர்கள் கனம் மந்திரி அவர்களைச் சில கேள்விகள் கேட்டுத் தாக்கினார்கள். கனம் மந்திரி அவர்கள் பாரபட்சம் காட்டுவதாகவும் தாந்தையா டோபேயிடம் சலுகையுடையவரென்றும் உயிருடனிருப்பவரை இறந்தாரென்று துணிவுடன் கூறுகிறார் என்றும் இது கொலை செய்வதைவிடக் கொடியது என்றும் பலவாறு தாக்கிப் பேசினர். ஆனால் கனம் மந்திரி அவர்கள் அத் தாக்குதல்களுக்கெல்லாம் சிறிதும் இடங் கொடாது மாணவர்களுக்கு மனத்தில் ஊன்றும்படி பாடங் கற்பித்தபிறகு மாற்றிக் கூறுவது அழகல்லவென்று சொல்லி விட்டார்.

ஆகையால் எனது நண்பர் தோல்வியுடன் திரும்பிவர நேர்ந்தது. தமக்கு வேலை கொடுக்க மாட்டேன் என்று பலமுறை சொன்ன அரசாங்கத்தாரிடம் எப்படியாவது வேலை பெற்றுப் பிழைக்க வேண்டும் என்று பகீரதப் பிரயத்தனம் செய்த எனது நண்பரின் கதி இப்படியாயிற்றே என்று நான் வருந்தினேன். ஆனால் என் நண்பர் சிறிதும் வருந்தவில்லை என்பது பிறகு எனக்குத் தெரிந்தது.

ஆம், பத்திரிகைகளில் நாணாவைப் பற்றிய செய்தி வந்தபோது வருத்தப்பட்டது என்னவோ உண்மை. நான் பல விடங்களுக்குச் செல்பவன், பல நோயாளிகளைக் கவனிக்கும் கடமையிலுள்ளவன். அதனால் நாணாவை மறந்தே போய்விட்டேன். கொஞ்ச நாட்களாக என்ன ஆனார் என்றே தெரியாமலிருந்தேன். ஒருநாள் நான் வழக்கம்போல் நோயாளிகளைப் போய்ப் பார்க்க என் காரில் ஏறினேன். எங்கிருந்தோ நாணா திடீரென்று வந்து சேர்ந்தார். இப்பொழுது அவர் தம்முடைய தாடியை எடுத்து விட்டார்.

"எல்லாக் கதையும் உனக்குத் தெரிந்திருக்குமே!" என்று கூறிக்கொண்டே நாணா காருக்கு வெளியிலிருந்து என் முதுகில் தட்டினார். "ஆனால் எனக்குச் சிறிதும் வருத்தமில்லை. இதற்கெல்லாம் பயந்தவன் நாணா என்ன! ஆனால் அந்த மந்திரியைப்பற்றி மட்டும் ஒரு வார்த்தை கூற வேண்டும். தாந்தையா டோபேக்காக சரித்திரத்தை எப்படி வேண்டுமானாலும் புரட்டி எழுதும்படி அவரைச் செய்யலாம்" என்றார்.

"அது சரி! இனி நீ என்ன செய்யப் போகிறாய்!" என்று கேட்டேன்.

அதற்கு நாணா, "என் அன்பார்ந்த நண்பா! திப்பு சுல்தான் உயிருடனிருப்பதாக நீ கேள்விப்படவில்லையா! விரைவில் திப்பு சுல்தானைப் பற்றி நீ கேள்வி யுறுவாய்" என்றார்.

க்ளோரோபில் சேர்ந்த கோலினாஸ்—
2* இருவழிகளில் வேலைசெய்கிறது!



*** ஆக்டிவ் க்ளோரோபில்—**

வாய் துர்நாற்றத்தை நீக்கி, சாதாரண ஈறு கோளாறு களைத் தடுத்து, பல் சொத்தையை ஒழிக்கிறது!

*** ஊடுருவும் நுரை—**

வாய்க்கு புதுமணம் தந்து, சமனுருணமுள்ள க்ளோரோபிலை உங்கள் பிரஷ் நுழையாத இடங்களுக்கும் எடுத்துச் செல்லுகிறது!

க்ளோரோபில் சேர்ந்த கோலினாஸ் அரை அங்குல அளவு எடுத்து பிரஷினால் பற்களைத் துலக்குங்கள். க்ஷணத்தில் அதன் நுரை வேலைசெய்வதை உணருவீர்கள் . . . சுத்தம் செய்கிறது, புதுமணம் ஊட்டுகிறது. இயற்கைப் பச்சை க்ளோரோபிலை வாயினுள் ஒவ்வொரு மூலைக்கும்-பிரஷ் நுழையமுடியாத இடங்களுக்கும்கூட—எடுத்துச்செல்லுகிறது.


ஆக்டிவ் க்ளோரோபில் மற்றும் ஊடுருவும் நுரை—இரண்டின் நற்பயனையும் அடையுங்கள்! இன்றே க்ளோரோபில் சேர்ந்த கோலினாஸ் ஒரு டியூப் வாங்குங்கள்—இருவகை செயல் திறனுள்ள பற்பசை அது. ஒருமுறை உபயோகித்தால், எப்பொழுதும் அதைத்தான உபயோகிக்கத் தோன்றும்!

இரண்டு வழிகளில் சிக்கனம்கூட!



1 சிறிதளவே போதும், பெரிதும் பயன்படும்!

சாதாரண முறையில் பல் துலக்குவதில், க்ளோரோபில் சேர்ந்த கோலினாஸ் அரையங்குல அளவு அதைப்போல் 400 மடங்கு பெருகி, வாயின் ஒவ்வொரு மூலைக்கும் ஊடுருவிச் செல்கிறது. ஆம், அரையங்குலமே தாராளமாகப் போதும். ஆகவே ஒரு டியூப் நெடுநாள் வரும்!



தவிர—

2 உங்கள் பணத்திற்கு ஏற்ற மிகப்பெரிய டியூப் அது!

இந்தியாவில் தயாரிப்பவர்கள்: ஜியாப்ரே மானர்ஸ் & கோ., லிட்.,
மாகனட் ஹவுஸ், பலார்ட் எஸ்டேட், பம்பாய் 1

டிரேட் மார்க் உடைமையாளர்கள்: வைட்ஹால் பார்மசல் கம்பெனி, நியூ யார்க், N. Y. யு. எஸ். ஏ.

GK. 8267



ரமண்லால் வஸந்தலால் தேசாய் :: மொழி பெயர்ப்பு : ரா வீ.

25. பேசாமடந்தை

லக்ஷ்மியைப் போன்ற அநுபவம் முதிர்ந்த பெண்ணுக்கு, தான் சொல்லும் எந்த விஷயத்திலும் மனோரமா சுவாரஸ்யம் இருப்பதாகக் காட்டிக் கொள்ளாமல் விட்டேற்றியாக இருப்பதைக் காணக் காண வியப்பாக இருந்தது. ஒருவேளை மனோரமா வேறு யாரிடமாவது தன் மனத்தைப் பறிகொடுத்திருப்பாளோ என்ற எண்ணம் லக்ஷ்மியின் மனத்திலே சந்தேகமாக உருத் தரித்தது. எனவே, அவள் ஒருநாள், "உங்களுக்கு ஏன் இங்கே உள்ள ஒன்றுமே பிடிக்கவில்லை?" என்று மனம் விட்டு வெளிப்படையாகவே கேட்டு விட்டாள்.

மனோரமா அந்தக் கேள்விக்கு ஒரு பதிலும் சொல்லவில்லை. வீட்டில் அவள் வெகு குறைவாகவே தான் பேசி வந்தாள். அப்படி யாரிடமாவது பேசிப் பழகி வந்தாள் என்றால் குழந்தைகளிடம்தான் பேசிப் பழகி வந்தாள். மற்றவர்களுடன் 'மௌனம் சர்வார்த்த சாதனம்' என்ற கொள்கையைத்தான் கடைப்பிடித்து வந்தாள். அப்படியே ஏதாவது பேசும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டால் கூட, 'உண்டு, இல்லை' என்ற இரண்டு சொற்களை விட்டு மூன்றாவது சொல்லை அவள் உபயோகிப்பதே இல்லை.

'தனக்கு இன்ன பொருள் வேண்டும்' என்று கேட்கும் பிரமேயமே அவளுக்கு ஏற்பட்டதில்லை. எவ்வளவுக் கெவ்வளவு முடியுமோ, அவ்வளவுக் கவ்வளவு அவள் தன் தேவைகளைக் குறைத்துக் கொண்டு விட்டாள். தேவைகளை அதிகரித்துக் கொள்ளக் கொள்ளத் தானே பிறரிடம் பேசவேண்டிய தேவை ஏற்படும்? தேவைகளையே குறைத்துக் கொண்டு விட்டால்...? அப்படி ஏதாவது அத்தியாவசியமான தேவை அவளுக்கு ஏற்பட்டு விட்டால்கூடத் தனக்குத் தானே சென்று அதைப் பூர்த்தி செய்து கொள்ளத்தான் பார்ப்பாள். 'தன் கையே தனக்கு உதவி' என்னும் பழமொழியைக் குழந்தைப் பருவத்திலிருந்தே செயல் முறையில் கடைப்பிடிக்கும் பழக்கத்தைப் பெற்றிருந்தவள் அல்லவா அவள்?

தாயார் வரச்சொல்லி அனுப்பினால் பிறந்தகத்துக்குப் போய் வருவாள். ஆனால் அங்கேயும் அதிகமாகப் பேச மாட்டாள். பெண்ணிடத்தில் இத்தகைய மாறுதல் எப்படி ஏற்பட்டது, ஏன் ஏற்பட்டது என்று பெற்றோர்க்கு ஆச்சரியமாயிருந்தது. ஆனால் அந்த மாறுதலுக்கு என்ன காரணமாயிருக்கலாம் என்று யாராலும் உட்புகுந்து புரிந்து கொள்ள முடியவில்லை.

ஆனால் லக்ஷ்மி உலகாநுபவம் நிறைந்த சாமர்த்தியசாலியான பெண் அல்லவா? அவளால் எப்படிப் பேசாமல் இருக்க முடியும்? காரணம் என்னவாயிருக்கலாம் என்று ஆராய்ந்து தெரிந்து கொண்ட பின்தான் மறு காரியம் என்று முடிவு கட்டிக்கொண்டு செயலிலும் இறங்கி விட்டாள். அவள் மனோரமாவின் ஒவ்வொரு செய்கையையும் கண் குத்திப் பாம்பாகக் கவனித்து வரலானாள். மனோரமா சும்மா உட்கார்ந்திருந்தாலும் சரி, தூங்கிக் கொண்டிருந்தாலும் சரி, பிள்ளைகளுடன் பேசி விளையாடிக் கொண்டிருந்தாலும் சரி, படித்துக் கொண்டிருந்தாலும் சரி, லக்ஷ்மி அவள் மீது ஒரு கண் வைத்த வண்ணமே இருந்தாள்.


இம்மாதிரி காரியத்தினால் அவளுக்கு எவ்விதமான பிரதிப் பிரயோஜனமும் கிடையாதுதான். 'ஒரு சல்லிக்கு உபயோகமில்லாத, உப்புப் புளிக்குக்கூட ஆகாத வேலை தனக்கு எதற்கு?' என்று அவள் விட்டிருக்கலாம். ஆனால் அவள் குணம் அத்தகையதல்லவே! என்ன செய்வாள், பாவம்!

மாதவப் பிரஸாத் இனி நம் கைக்கு வர மாட்டார். அவரை நாம் நம் கைக்குள் போட்டுக்கொள்ள முடியாது என்பதை அவள் நன்கு உணர்ந்து கொண்டு விட்டாள். மனோரமா வந்த பின் கொஞ்ச நஞ்சம் இருந்த

நம்பிக்கையும் அவனுக்கு அடியோடு அற்று விட்டது. ஆயினும் அவள் தன்னை அந்த வீட்டுக்கு வெகு வெகு அத்தியாவசியமானவளாக ஆக்கிக் கொள்ள விரும்பினாள். அப்பொழுதுதானே அவள் அந்த வீட்டு வேலைக்காரியாகவே தன் வாழ் நாள் முழுதும் ஓட்ட முடியும்? அதற்காக வேண்டி அவள், 'தான் ஒருத்தி இல்லையென்றால் அந்தக் குடும்பத்தின் எத்தனையோ காரியங்கள் கெட்டுக் குட்டிச் சுவராகி விடும் என்ற எண்ணம் அந்தக் குடும்பத்தாருக்கு ஏற்பட வேண்டும். அதன் மூலம் தனக்கு மதிப்பும் மரியாதையும் கிட்ட வேண்டும். அத்தகைய செயல், தான் ஒன்று செய்தே தீர வேண்டும்' என்று மனத்துள் திட்ட மிட்டுக் கொண்டாள். எனவே, தன் கருத்தைக் காரியமாக்க அவள் மனோரமாவின் மனப் போக்கு, குணம், இயல்பு, பிடித்தம் ஆகியவற்றைப் பற்றி வெகு நுணுக்கமாக ஆராயலானாள்.

மனோரமாவின் போக்கும் நடத்தையும் மாதவப் பிரஸாதுக்குக் கூட பலத்த வியப்பை அளித்தன. மனோரமா அவருடன் முகங் கொடுத்துச் சரிவரப் பேசுவது இல்லை. பெரும்பாலான புது மணம் புரிந்து கொண்ட பெண்கள் வெட்கம், சங்கோசம் ஆகியவற்றின் காரணமாகத் தங்கள் தங்கள் கணவன்மார்களுடன் கொஞ்ச காலம் பேசாமல் இருப்பது வழக்கம்தான். ஆனால் மாதவப் பிரஸாதுக்கு மனோரமா புதியவள் அல்லவே! நன்றாக அறிமுகம் ஆனவள் தானே? எத்தனையோ தடவைகள் அவருடன் அவள் தான் பேசிப் பழகி யிருக்கிறாளே! அவ்வளவு நாட்களும் இல்லாத வெட்கம் அவளுக்கு எங்கிருந்து அப்படித் திடீரென்று வந்தது? அவளுடைய அந்த மௌனம் அவருக்கு அளவற்ற வியப்பை அளித்தது. அவருடைய பணங் காசையும் படாடோபத்தையும் பார்த்து மனோரமா ஒருவேளை மோகித்து விக்கித்துப் போய்ப் பேசாமடந்தையாக ஆகியிருப்பாளோ என்றால், அந்தப் பயமோ பீதியோ எழுவதற்கு எந்த விதத்திலும் நியாயம் இல்லை. ஏனெனில் அவளும் ஒரு காலத்தில் உயர்ந்த நிலையில் இருந்த குடும்பத்தில் பிறந்த பெண்தான். என்னதான் தன் நிலை தாழ்ந்து விட்டாலும் அதற்காகப் பிறர் சொத்தின் பெருமையைப் பார்த்துப் பூரித்துப் போகும் அளவுக்கோ, பொருமைப் படும் அளவுக்கோ பரம்பரையான பெரிய குடும்பத்தில் பிறந்த பிள்ளைகள் தாழ்ந்துவிட மாட்டார்கள். ஆகவே தான் மாதவப் பிரஸாதின் மனத்தில் அத்தகைய சந்தேகம் எழுவதற்குப் பதிலாக வியப்பு விரிந்தது.

அழகிலும் அலங்காரத்திலும் பெண்களுக்கு மட்டும் தான் ஈடுபாடு அதிகம், ஆண்களுக்கு அவ்வளவு கிடையாது என்று எண்ணுவது தவறானது. பெண்களைக் காட்டி



லும் பன் மடங்கு அதிகமாகச் சிங்காரித்துக் கொள்ளும் ஆண்களும் எத்தனையோ பேர் இந்த உலகத்தில் இருக்கத்தான் இருக்கிறார்கள். அவர்கள் சலவைக்குப் போய் வந்த மடிப்புக் கலையாத உடைகள் உடுத்திக் கொள்வார்கள். கடுகளவு சுருக்கம் ஏற்பட்டாற் கூடக் களைந்து எறிந்து விட்டுப் புது உடைகள் உடுத்துவார்கள். தலைமயிர் மீது கவனம் செலுத்தித் துளிக் கூடக் கலையாமல் அடிக்கொரு தரம் வாரிவிட்டுக் கொள்வார்கள். அவர்களுடைய சட்டைப் பையில் சீப்பும் கண்ணாடியும் சதா சர்வ காலமும் இருக்கும். முகம், கண், உதடு ஆகியவற்றில் பெண்களைக் காட்டிலும் அதிகமாக விசேஷ கவனம் செலுத்துவார்கள். காலையில் கண் விழித்து எழுந்ததும் எழுந்திருக்காததுமாகக் கையில் கத்தியும் முகத்தில் ஸோப்புமாகக் காட்சியளிப்பார்கள். அத்தகையவர்களிடம் பெண்கள் கூடப் பிச்சை வாங்க வேண்டும், அவ்வளவு விதவிதமான எண்ணற்ற அழகுச் சாதனங்கள் குவிந்து கிடக்கும்.

அப்படிப் பட்டவர்கள் நாற்பது வயதுள்ளவர்களாகி, மறு மணமும் செய்து கொள்ளக் கூடிய நிலையை அடைந்து விட்டால், அவர்களிடம் காணப்படும் அலங்கார ஆசை எத்தனை அத்துமீறி அதிகரித்துப் போயிருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? அதோடு மாதவப் பிரஸாத் பெரும் பணம் படைத்தவர் வேறு. ஆடை அலங்காரம் செய்து கொள்வதற்கு, வேண்டிய அவகாசம் அவருக்கு இருந்தது. நான்கு குழந்தைகளுக்குத் தகப்பனாராகி விட்ட பின்னருங்கூட அவர் தம் உடல் அழகைக் கவனித்துக் கொள்ளத் தவறுவதில்லை. தமது அந்தஸ்துக் கேற்ற மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டாமா? அப்படிக் காப்பாற்றிக் கொள்ளா விட்டால் அவரை அப்புறம் யார் லட்சியம் செய்வார்கள்? பணக்காரர் என்று சொல்லுவார்கள்? எனவே, தம்மை அழகு படுத்தி அலங்கரித்துக் கொள்ளும் விஷயத்தில் எவ்விதக் குறைபாட்டுக்கும் அவர் இடம் வைத்ததில்லை.

மனோரமாவை மணந்து கொண்ட பின் அவருக்கு அது இன்னும் அதிக அவசியமாகி விட்டது. தமது அழகையும் ஆடம்பரத்தையும் கொண்டுதானே அவர் மனோரமாவின் மனத்தைக் கொள்ளை கொள்ள வேண்டும்? எனவே, அம் முயற்சியில் அவர் தீவிரமாக இறங்கினார். நேர்முகமாகவும் மறைமுகமாகவும் அவர் எடுத்துக் கொண்ட பிரயாசைகள் ஒரு கணக்கில் அடங்காதவை.

ஆனால் 'இது அழகு, இது அழகில்லை' என்று அழகுக்கு ஒரு இலக்கணம் கூறிவிட முடியாதல்லவா? ஒருவருக்கு அழகாகத் தோன்றுவது இன்னொருவருக்கு அவலட்சணமாகத் தோன்றலாம். ஒருவன் கண்ணுக்கு ரதியாக, ரம்பையாகத் தோன்றுபவள் இன்னொருவன் கண்ணுக்கு எப்படித் தோன்றுவாள் என்று சொல்ல முடியாதல்லவா? அழகையும் அவலட்சணத்தையும் நிர்த்தாரணம் செய்வதில் ஆண்களின் மனம் எப்படி வேறுபாடு அடைகிறதோ, அப்படியே தான் பெண்களின் மனமும் வேறுபாடு அடைகிறது. ஆணாகட்டும், பெண்ணாகட்டும், மனத்தின் இயல்பு ஒன்று தானே?

சுகசாலி, சுந்தர புருஷன், நவ நாகரிகமான உடை உடுத்துவதில் கைதேர்ந்தவன் என்று எண்ணும் எத்தனையோ புருஷர்களைப்



பெண்கள் ஏறிட்டும் பார்ப்பதில்லை. பார்ப்பதற்கு எத்தனைதான் பகட்டாக ஒருவன் உடை அணிந்து கொள்ளட்டுமே! மூக்கைத் துளைக்கும் வாசனைத் திரவியங்களை உபயோகித்து உள்ளத்தைக் கவர அரும்பாடு பட்டு முயற்சிக்கட்டுமே! பெண்கள் அவனை லட்சியம் செய்து மதிக்காமலே கூட இருந்து விடுகிறார்கள். ஆனால் அதே சமயத்தில் அட்டக் கரி என்று சொல்லக்கூடிய கறுப்பு, அஷ்டா வக்ரனைக் காட்டிலும் கோணல் என்று சொல்லக்கூடிய அவலட்சணம் ஆகியவை நிறைந்த ஆணிடத்தில் ஒரு பெண் தன் மனத்தைப் பறி கொடுத்து விட்டாள் என்றும் சொல்லக் கேட்கிறோம். இந்த அவலட்சணத்தினிடம் இவளுக்கு எப்படிப் பிரேமை ஏற்பட்டது என்று கூட வியக்கிறோம். இதிலிருந்து என்ன தெரிகிறது? 'விசித்ரா ரூபா கலு சித்த விருத்தய:' அதாவது மனிதனின் மனப்போக்கு மிகமிக விசித்திரமானது என்னும் உலக வழக்கு உண்மையானதுதான் என்பது ஊர்ஜிதமாகிறதல்லவா?

அது எப்படிப் போனாலும் சரி, கல்யாணம் என்று ஒன்று ஆகிவிட்டால் பெண்ணாய்ப் பிறந்தவள் தன்னுடைய மன உணர்ச்சியை மாற்றிக் கொண்டேதான் ஆகவேண்டும். அழகு, குணம், சுபாவம் ஆகிய விஷயங்களில் மாதவப் பிரஸாதைக் காட்டிலும் மேலான கணவன் மனோரமாவுக்கு வேறு யார் கிடைத்திருக்க முடியும்? மாதவப் பிரஸாதுக்குப் பணத்தில் குறைவா? பண்பில் குறைவா? எதில் என்ன குறைச்சல்? ஏன் அவள் அவருடன் பேச முயற்சிக்கவில்லை? ஏன் அவருடைய நயனங்களுடன் தன் நயனங்களை அவள் உறவாட விடவில்லை?

புதுமணம் புரிந்து கொண்ட பெண்கள் புருஷன் பேச்சைத் தவிர வேறு எவருடைய பேச்சையுமே எடுக்க விரும்ப மாட்டார்கள் என்பது யாவரும் அறிந்த விஷயம். ஆனால் மனோரமா மறைமுகமாகக் கூட மாதவப் பிரஸாதின் பேச்சை எடுக்கவில்லை. தோழிகள் எத்தனையோ தூண்டியும்கூட அவள் மழுப்பியேதான் வந்தாள்.

கல்யாணம் ஆன புதிதில் இயல்பாகச் சங்கோசமும் நாணமும் எழ இடம் உண்டு. புது வீட்டின் புதுச் சூழ்நிலை பிடிபடாமல் இருப்பது உண்டு. புது வாழ்க்கையில் மனம் நாட்டம் கொள்ளாமல் வெறிச்சிட்டு விடுவது உண்டு. இந்தக் கற்பனைக் காரணங்கள் கல்யாணம் ஆன புதிதில் வேண்டுமானால் ஒவ்வலாம். அதனால் மனோரமா மௌனம் சாதிக்கிறாள் என்று சொல்லலாம். ஆனால் கல்யாணம் ஆகி இவ்வளவு நாட்கள் ஆன பின்பும் இதே ரீதி என்றால்......?

மாதவப் பிரஸாதின் மனத்தைக் கவலை பிடித்துக் கொண்டது. அவர் மனோரமாவை உயிருக்கு உயிராக உள்ளன்போடு நேசித்து வந்தார். ஆனால் மனோரமா அதையெல்லாம் பொருட்படுத்தியவளாகவே தோன்றவில்லை. ஏன் என்ற காரணமும் விளங்கவில்லை.

ஒரு நாள் மனோரமா கட்டிலில் படுத்தவாறு ஏதோ படித்துக் கொண்டிருந்தாள். லக்ஷ்மி அவள் அருகிலேயே உட்கார்ந்திருந்தாள். வேறு வேலை ஒன்றும் அந்த நேரத்தில் அவளுக்கு இல்லாததால், மனோரமாவின் கால்களைப் பிடித்து விட்டுக் கொண்டிருந்தாள். மனோரமாவுக்கு அவளுடைய அந்தச் செய்கை சிறிதும் பிடிக்கவில்லை. "நீ ஒன்றும் காலைப் பிடிக்க வேண்டாம்" என்று சொன்னாள். ஆனால் லக்ஷ்மி அதையெல்லாம் கேட்கவில்லை. தான் உண்மையான வேலைக்காரி என்பதைக் காட்டிக் கொள்வதற்காகப் பிடிவாதமாக அவளுடைய கால்களைப் பிடித்து விட்டுக் கொண்டுதான் இருந்தாள்.

அந்த நேரத்தில் மனோரமா தனியாக இருப்பாள் என்ற எண்ணத்துடன் மாதவப் பிரஸாத் மெதுவாக அறைக்குள் நுழைந்தார். அவரைக் கண்டதும் லக்ஷ்மி எழுந்து வெளியே போகத் தொடங்கினாள். மனோரமா புஸ்தகத்திலிருந்து கண்களை அகற்றிப் பார்த்தாள். எதிரே அவளுடைய கணவர் மாதவப் பிரஸாத் நின்று கொண்டிருந்தார்.

"லக்ஷ்மி! எங்கே போகிறாய்? இரு, நானும் வருகிறேன்!" என்று கூறி மனோரமா லக்ஷ்மியை நிறுத்தப் பார்த்தாள். ஆனால் லக்ஷ்மியா நிற்பவள்? வட துருவமும் தென் துருவமுமாக இருக்கும் எத்தனையோ கணவன் மனைவிமார்களை அவள் சேர்த்து வைத்தவள் ஆயிற்றே! அந்தச் சமயம் அங்கேயிருப்பது சரியல்ல என்பது அவளுக்குத் தெரியாத விஷயமா? ஆகவே, "இதோ வருகிறேன்!" என்று சொல்லி விட்டு வெகு வேகமாக அங்கிருந்து போய் விட்டாள்.

கல்யாணம் ஆனபின்னர் மனோரமா இன்னொருவர் துணையில்லாமல் தனித்திருந்ததே வெகு அபூர்வம். தன்னுடன் இருக்க வேறு யாரும் அகப்படவில்லை என்றால் சாந்தாவையாவது உட்கார வைத்துக் கொண்டிருப்பாள். இன்று என்னடாவென்றால் மாதவப் பிரஸாதைத் தவிர வேறு யாருமே இல்லாத சந்தர்ப்பமாகப் போய் விட்டது. மனோரமா மிகுந்த தர்மசங்கடத்தில் மாட்டிக் கொண்டு விட்டாள். அவளுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. சட்டென்று கட்டிலிலிருந்து குதித்துக் கீழே இறங்கி நின்று கொண்டாள். மாதவப் பிரஸாத் அவள் கையை அன்புடன் பற்றிக் கட்டிலில் உட்கார வைத்தார்: பிறகு தாமும் அவள் அருகில் உட்கார்ந்து கொண்டார்.

மாதவப் பிரஸாதின் கை ஸ்பரிசம் பட்டதும் மனோரமாவின் முகபாவம் ஒரேயடியாக மாறிவிட்டது. தொடக்கூடாத பொருளைத் தொட்டு விட்டது போன்ற அருவருப்பும் அருசியும் அவளுக்கு உண்டாயிற்று. அவளுடைய அந்த பாவம் மாதவப் பிரஸாதுக்குப் பிடிக்கவில்லை. அவள் தம்மை அலட்சியம் செய்வது போலவும் அவமானப் படுத்துவது போலவும் தோன்றியது. இருந்தாலும்

தம் மனத்தில் உண்டான உணர்ச்சியை மனத்துள்ளேயே அடக்கிக் கொண்டு அவளுடைய தோள்மீது கைவைத்து, "மனோரமா!" என்று பரிவுடன் அழைத்தார்.

தோள்மீது மாதவப் பிரஸாத் கை வைத்தது மனோரமாவுக்குப் பிடிக்கவில்லை. எனவே, தன் தோள் பட்டையைக் கோணிக் குறுக்கிக் கொண்டாள். அதோடு அவள் நிற்கவில்லை. அவருடைய கையின் அந்தச் சுமையைத் தாங்க முடியாதவள் போல மெதுவாக அகற்றியும் விட்டாள்.

மனோரமா அவ்வாறு அகற்றி விடவே, மாதவப் பிரஸாதுக்குக் கடுங்கோபம் வந்து விட்டது. அவள் அப்படிச் செய்வாள் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. எத்தனை ஆசை பொங்க அவர் அவளைத் தேடி வந்திருந்தார்? அவருக்கல்லவா தெரியும், உள்ளத்தின் அந்தத் துடிப்பு? மனோரமா தம்மை அலட்சியப்படுத்தி அவமதிப்பதாகவே அவருக்குப் பட்டது. எந்தக் கணவன்தான் மனைவியிடம் அத்தகைய செயலை எதிர்பார்த்திருப்பான்? 'நம்மை மதிக்காத இந்த மனோரமாவை இப்பொழுதே பிறந்த வீட்டுக்கு அனுப்பி விட்டு மறுகாரியம் பார்த்தால் என்ன?' என்றுகூட அவர் ஒரு கணம் எண்ணினார்.

அவளுடைய அந்த செயலைப்பற்றி யோசிக்க யோசிக்க அவருக்கு ஆத்திரம்தான் அதிகரித்தது. "பிறந்த வீட்டுக்கு அனுப்புவதா? எதற்கு அந்த வேலையில்லாத வேலை? நம் கையை அகற்றி இவள் அவமதிப்பது, நாம் பேசாமல் பொறுத்துக் கொண்டிருப்பதா? ஓங்கிக் கன்னத்தில் ஒரு அறை வைத்து, 'என்ன இருந்தாலும் நீ பெண். கை பிடித்த கணவனுக்கு அடங்கி நடக்க வேண்டியவள். அவனுக்கு நீ ஜன்ம ஜன்மாந்திரத்துக்கும் அடிமை!' என்பதை வற்புறுத்தினால் என்ன?" என்று தோன்றிற்று. அந்த சமயம் அவருடைய மனம் 'அடியாத மாடு படியாது!' என்ற பழமொழியையும் நினைவுறுத்தி அந்த எண்ணத்துக்கு ஆக்கமும் கொடுத்தது. அவருடைய கை அடித்து விடவேண்டும் என்று துடிதுடித்தது; இருதயம் படபடத்தது.

ஆனால் விவேகம் அவரை அப்படிச் செய்ய விடவில்லை. கொதித்துக் கொண்டிருந்த கோபத்தைத் தடுத்து நிறுத்தியது. 'என்ன இருந்தாலும் அவள் பெண். பெண்மீது கை வைப்பதா? நீயும் ஒரு ஆண்பிள்ளை மாதிரி!' என்று எதிர்க்கட்சி ஆடி அவரை அடக்கி விட்டுத்தான் மறுகாரியம் பார்த்தது. எனவே, அவர் தம் முகத்தில் மகிழ்ச்சியையும் சிரிப்பையும் வரவழைத்துக் கொண்டு அவள் தோள் மீது மறுபடியும் கையை வைத்தார்.

மனோரமா அறியாத, தெரியாத பெண் அல்லவே! சட்டதிட்டப்படி பார்க்கப் போனாலும் சரி, சமூகத்தின் சம்பிரதாயங்களை ஒட்டிப் பார்க்கப் போனாலும் சரி, நீதிநெறி முறைகள், உலகத்தின் வழக்கில் இருந்து வரும் வழக்க பழக்கங்கள் ஆகியவற்றின்படி

ராஜாஜி எதிர்ப்பு

காங்கிரஸ் வாதிகளுக்கு மற்றொரு பயங்கர சோதனை ஏற்பட்டுள்ளது. பல வருட காலம் வறண்டு கிடந்த தமிழ் நாட்டில் மழை பெய்து நிம்மதி தரும் வேளையில் நிலையான அரசாங்கம் ஏற்பட்டுப் பல திட்டங்கள் உருவாகிவரும் சரியான சந்தர்ப்பத்தில், மக்களின் முன் தலைகுனிய வேண்டிய சந்தர்ப்பம் வந்திருக்கிறது. ராஜாஜி சென்னை அரசியலிலிருந்து விலகி விடுவாரோ என்ற பயமும் அவருக்குப் பின்னால் "யார்?" என்ற பெரிய கேள்விக்குறியும் தான் இன்றையப் பிரச்னை. உலகில் எந்தக் கட்சியும் காங்கிரஸ் போல் தியாகம் செய்ததில்லை. கட்டும் துணியிலும் கட்டுப்பாடு ஏற்படுத்தினார் காந்திஜி. அவைகளை முக மலர்ச்சியுடன் ஏற்றோம். அதனால் தான் காங்கிரஸ் மாசற்ற ஸ்தாபனமாகத் திகழ்ந்தது. இன்றைய ராஜாஜி அரசாங்க அதிபர் தான். ஆனால் அவர் தியாகம் அவர் வாழ்வில் பிணைந்திருக்கிறது. புனிதமான காங்கிரஸ் ஸ்தாபனம் துரதிஷ்டவசமாக, ஒரு சில தமிழ்த் தலைவர்களால் சூழ்ச்சிக் கோட்டையாகவும் பணக்காரர்கள் பதுங்கு மிடமாகவும் மாறிவிட்டது. அவர்களின் சொல்லைக் கேட்டு 1947-ல் ராஜாஜியைத் தமிழ் நாட்டிலிருந்தே விரட்டினோம். அதன் பயன் சரியாக அனுபவித்தோம். நேற்றுத் தோன்றிய கட்சிகளெல்லாம் காங்கிரஸை விரட்டியடித்தன. கடைசியில் அரசாங்கமே அமைக்க முடியாத நிலை ஏற்பட்ட போதுதான் 'விரட்டப் பட்ட' ராஜாஜியை வேண்டி அழைத்துக் கொண்டு வந்தோம். அவருக்குப் பூரணமான அதிகாரத்தைக் கொடுத்து 'காங்கத்தைப் போக்குங்கள்' என்றோம். அவரும் அரசாங்கத்தையும், கட்சியையும் பலப்படுத்தி வரும்போது அர்த்தமற்ற வாதங்கள் கூறி அவர் காலை வாரி விடுவதில் சில நண்பர்கள் தீவிரமாக ஈடுபட்டிருப்பது ஒரு வெட்கக்கேடு. ராஜாஜிக்கு இதனால் யாதொரு நிலைமையுமில்லை. காங்கிரஸ் ஸ்தாபனம் தான் படு குழியில் போகும். 'ஆறு கெஜம் தோண்டி ஆழப் புதைத்து விட்டோம்' என்று அன்று ஜஸ்டிஸ் கட்சியைப் பத்தி முரசிட்டார் அமரர் சத்யமூர்த்தி. "பத்து கஜம் தோண்டிப் பாதாளத்தில் புதைத்து விட்டேன் காங்கிரஸை" என்று பறை சாற்றுவர் திரு ஈ. வே. ரா.வும் அவர் கோஷ்டிகளும். இந்த நிலைக்குக் காங்கிரஸ் காரர்கள் தயாரா? அவர்கள் தயாராயிருக்கலாம். ஆனால் அவர்களை நம்பி ஏமாற மக்கள் தயாரில்லை. கடைசி மூச்சுள்ளவரை ராஜாஜி தமிழ் நாட்டுத் தலைவர்தான். கோஷ்டித் தலைவர்கள் மக்களுக்காக மனமிரங்கி இன்னும் கொஞ்ச காலம் பொறுக்கட்டும். ஆடிக் கொண்டிருக்கும் அரசாங்கம் நிலை பெறட்டும்.

சென்னை
17-11-53

ஆர். ஸ்ரீநிவாசன்

பார்க்கப் போனாலும் சரி, மாதவப் பிரஸாத் அவளுடைய உடலுக்கு அதிபர், உரிமையாளர் என்பதை அவள் நன்கு உணர்ந்திருந்தாள். அவருடன் ஒத்து வாழ வேண்டும் என்னும் விஷயமும் அவளுக்குத் தெரியாததல்ல. ஆனால் அவளுடைய மனமும் இருதயமும் சமூகத்தின் சட்ட திட்டங்கள், சம்பிரதாயங்கள், உலகத்தின் இயல்புகள், நீதிநெறி முறைகள் ஆகிய எதையும் ஏற்றுக் கொள்ள

மறுத்து விட்டன. 'அதை யெல்லாம் ஒருபுறம் மூட்டை கட்டி வை!' என்ற உபதேசத்தைத் தான் அவை அவளுக்கு உபதேசித்தன.

அவள் உள்ளத்தின் நினைவுத் திரையில் அதே பழைய சுதாகர், அழகே உருவான சுதாகர், நவநாகரிக வாலிபனான சுதாகர் நின்று புன்முறுவல் புரிந்து கொண்டிருந்தான். ஒரு கணம்கூட அவன் அவளுடைய நினைவுத் திரையை விட்டு அகலவில்லை. எவ்வளவோ முயன்றும் அவள் நெஞ்சம் அவன் நினைவை மறக்க மறுத்தது.

சுதாகரிடமிருந்து கட்டாயம் கடிதம் வரும், கடிதம் வரும் என்று அவள் எவ்வளவு நாட்கள் எதிர்பார்த்திருந்தாள்? அவள் நம்பிக்கை அவநம்பிக்கையாக உருத்தரித்து அவலமாகியதே ஒழிய, ஏதாவது பலன் அளித்ததா? சுதாகரைப் பற்றிக் கேளத்தகாத, கேளச் சகியாத அவதூறான சொற்களை அவள் தன் தோழி சம்பாவின் வாய்மொழியாகக் கேட்டாளே, அப்பொழுதாவது அவள் மனம் மாறியதா? தனக்கும் அவனுக்கும் மணம் என்று ஒன்று ஆகாத வரையில் சுதாகரைச் சீர்ப்படுத்தி நல்வழிக்குக் கொண்டு வரத் தனக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்பதை அறிந்த பின்னராவது அவளுடைய மனம் மாறியிருக்க வேண்டாமா? வேண்டாம் என்று வெறுத்துச் சுதாகரை உதறித் தள்ளி யிருக்க வேண்டாமா? சுதாகரைத் தன் வாழ்க்கைத் துணைவனாக ஆக்கிக் கொள்வது என்னும் வெறும் நப்பாசை ஆகிவிட்ட ஆசையை அடி வேரோடு அகற்றி எறிந்திருக்க வேண்டாமா?

கடந்த கால வாழ்க்கையில் நினைவை ஓட்டிய மனோரமாவின் மனம் சற்றுத் தடுமாற்றமான நிலையை அடைந்தது: என்ன செய்வது என்ற புரியாத நிலையில் அவளை ஆழ்த்தியது. அப்பொழுதுதான், அதாவது மனம் அத்தகைய பலவீனமான நிலையை அடைந்தபொழுதுதான், அவள் தன் உள்ளத்து உணர்ச்சிகளுக்கும் ஆசைகளுக்கும் முற்றிலும் எதிரிடையாக முடிவு செய்யும்படியான நிலை ஏற்பட்டது; தாய் தந்தையரின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்துதான் ஆக வேண்டும் என்ற நிர்ப்பந்தமான நிலை ஏற்பட்டது. அதன் காரணமாகவே தான் அவள் வாய் திறந்து மாதவப் பிரஸாதை மணந்து கொள்வதில் தனக்குச் சம்மதமில்லை என்று தைரியமாக அழுத்திச் சொல்லவோ, சரியென்று சம்மதம் தெரிவிக்கவோ இல்லை. வாய் மூடி மௌனியாகித் தன்னையும் தன் விருப்பத்தையும் தாய் தந்தையரின் கையில் அவர்கள் இஷ்டத்துக்கு விட்டு விட்டாள்.

ஆனால் கல்யாணம் முடிந்த பிறகுதான், அவளுக்குத் தான் செய்தது பெருந் தவறு என்பது புலனாகியது. 'சுதாகர் தன்னை விரும்புகிறானா, இல்லையா?' என்பதை அறிந்து கொள்ள வேண்டியது அவளுக்கு அனாவசியம். அவளைப் பொறுத்த வரைதான் அவள் சுதாகரை விரும்பி நேசித்தாளே!

உள்ளத்தைப் போலவே, அவளுடைய உடலும் சுதாகரை நினைந்து தவித்துத் துடித்து உருகி யிருக்குமானால், அவள் மாதவப் பிரஸாதை மணந்து கொள்ள ஒருநாளும் முன் வந்திருக்க மாட்டாள். ஆனால் அவருடன் கல்யாணம் நடப்பதற்கு இடம் கொடுத்த பின்னர், திருமண வாழ்க்கையின் கடமைகளைச் சரிவர அநுஷ்டிக்க வேண்டியதுதானே அவளுடைய கடமையும் தர்மமும் ஆகும்?

மாதவப் பிரஸாத் அவளை எதற்காக மணம் புரிந்து கொண்டார்? இல்வாழ்க்கையின் இன்பங்களை நுகர்ந்து அநுபவிக்கத்தானே? தம்மைக் கண்டால் ஓடி ஒளியவா அவளைக் கல்யாணம் செய்து கொண்டார்? வாயைத் திறந்து பேசாமல் ஊமையாக, பேசாமடந்தையாக இருக்கவா மணம் புரிந்து கொண்டார்? அன்பு என்பதையே இன்னதென்று அறியாத உயிருள்ள மரப்பாச்சிப் பொம்மையாகத் தம் வீட்டில் கொலு வீற்றிருக்கவா அவர் அவளுடைய கரம் பற்றினார்? அவர் அவளைத் தம் மனைவியாக ஏற்றுக் கொண்டதே இக லோக வாழ்க்கையின் இன்பங்களை இஷ்டப்படி அநுபவிக்கத்தானே? அவள் அதற்கு இடம் கொடாமல் இப்படி ஒதுங்கி ஒதுங்கிப் போவது நியாயமா? தர்மந்தானா?

கணவனைக் களிப்புறச் செய்ய இரண்டே இரண்டு வழிகள்தான் இருக்கின்றன என்பதை மனோரமா அறியாமல் இல்லை. அவை இரண்டுமேதான் ஒரு பெண் தன் கரம் பற்றிய கணவனுக்குச் செய்ய வேண்டிய முக்கியமான கடமைகள் என்று சொன்னாலும் தவறில்லை. முதலாவதாக ஒரு பெண் தன் கணவனுக்கு உள்ளத்தை ஒப்படைக்க வேண்டும். இரண்டாவதாக உடலை ஒப்படைக்க வேண்டும். இதைக் காட்டிலும் பெரிய கடமைகள் ஒரு பெண்ணுக்கு இந்த உலகத்தில் வேறு ஏது?


அவள் தன் உள்ளத்தை ஒருவனுக்கு எப்பொழுதோ ஒப்படைத்து விட்டாள். உள்ளத்தின் உணர்ச்சியின்றி, தூண்டுதல் இன்றி உடலின் ஒரு மயிர்க்கால்கூட எழும்பாது. உடல் உள்ளத்துக்கு அடிமையானது. இது சொல்லித் தெரிய வேண்டிய விஷயமல்லவே!

மாதவப் பிரஸாத் ஊர் அறிய, உலகம் அறிய அவள் கரம் பற்றிய கணவர்தான். கணவரின் இச்சைக்கு இணங்க வேண்டியவள் மனைவி. இந்த எண்ணத்துடன் அவள் மாதவப் பிரஸாதின் இஷ்டத்துக்கு ஈடு கொடுப்பது என்று தீர்மானித்து உள்ளத்தை ஒருநிலைப் படுத்த முற்படுவாள். அவள் அப்படி முற்படுவது என்று எண்ணுவதற்கு முன்பாகவே, சுதாகர் அவள் உள்ளத்தில் இடம் பொத்திக் கொண்டு, அவளை முன்பின் யோசிக்க முடியாதபடி திரை அடித்து விடுவான். உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்ட அவனை அவளால் வெளியேற்ற முடிவதே இல்லை. அதன் பலனாக அவள் மாதவப் பிரஸாதிடம் கொண்டுள்ள வெறுப்புணர்ச்சியும் அருசியும்தான் வளர்ந்தன. (தொடரும்)

ஒரியா பெண்மணி

இவள் பிறந்த நாடு பண்டைப் பெருமை பெற்ற நாடாகும். பரம்பரையான சிற்பக்கலையில் பெயர் பெற்ற நாடு; இங்குள்ள சிற்பத் தொழில் தனிச் சிறப்பு வாய்ந்தது. பெரும் கற்பாறைகளையே குடைந்து செதுக்கிக் கோயில்களாக உருவாக்கியுள்ள ஒரிஸ்ஸாவின் பெருமையும் புகழும் உலகமெங்கும் பரவியிருக்கிறது. இந்த ராஜ்யத்திலுள்ள ஒவ்வொரு வகுப்பினருக்கும் தனிப்பட்ட புராதனக் கோயில்களுண்டு. இவற்றுள் மிக உன்னதமானது பூரி ஜகந்நாதர் கோயில் என்பதில் சந்தேகமில்லை. இதற்கு வடக்கே இருபது மைல் தூரத்தில் கோணாரக்கின் கருங்கோபுரம் இருக்கிறது. இக்கோபுரத்தில் பிரம்மாண்டமான அளவில் சிங்கங்கள், யானைகள், சிம்மாசனங்கள், யுத்தக்காட்சிகள், வேட்டை முதலிய காட்சிகள் செதுக்கப்பட்டுள்ளன. ஒரிஸ்ஸா நாட்டுமக்கள் ராஜ்ய நிர்வாகப் பொறுப்புகளை அறிந்தவர்கள் தான். மழையின்மையும், பஞ்சமும் அங்கு சகஜம். எனினும் அவர்கள் மத சம்பிரதாயங்களையும் எளிய வாழ்க்கை முறைகளையும் உறுதியாகக் கைக்கொண்டு ஆடம்பரமற்ற நிதானமான வாழ்வு வாழ்கின்றனர்.

நாங்கள் இந்தியாவின் மூலை முடுக்குகளிலுள்ள அநேகம் சமூகங்களோடு உறவாடிக் கொண்டிருக்கிறோம். அவர்கள் எங்களை நம்பி இருக்கிறார்கள். நாங்களும் அவர்களுக்கு பணி செய்வதில் பெருமை அடைகிறோம்.



பர்மா-ஷெல்...
பாரத நாட்டின் வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறது



உறுதியான
எதிர்ப்பு சக்தி
நீங்களும்
பெறுக
வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்
WATERBURY'S
COMPOUND
வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

NAS 72 53



சாப்பாடு ஆகிச் சமையலறைக் காரியங்களை யெல்லாம் ஒருவிதமாக முடித்துக்கொண்டு வெற்றிலையும் கையுமாய் ஜெயா கூடத்தில் வந்து உட்காருவதற்கும் கடிகாரம் பன்னிரண்டு முறை ஒலித்து நிற்பதற்கும் சரியாக இருந்தது. வெளியில் பங்குனி மாதத்து வெய்யில் அனலாய்க் காய்ந்தது. சிவராமன் பரீட்சைத் தாள்களைத் திருத்துவதில் முனைந்திருந்தான். அவன் மனமும் கரங்களும் அதிலேயே ஒன்றி இருந்தன. வெற்றிலைக்குச் சுண்ணாம்பு தடவியவாறே, "அப்பப்பா! இந்த வருஷம் ஆரம்பத்திலேயே கோடை இப்படிச் சுட்டுப் பொசுக்குகிறதே!" என்றாள் ஜெயா அலுத்த வண்ணம். அவளை ஒரு கணம் ஏறிட்டு நோக்கிய சிவராமன் மறுபடியும் தன் வேலையில் முனைந்து விட்டான்.

இச் சமயத்தில் வாசலிலிருந்து வந்த 'தபால்' என்ற குரல் இருவரையுமே விழிப்புறச் செய்தது. ஜெயா விரைந்து சென்று கடிதத்தை வாங்கி வந்தாள். "கோபு அண்ணா எழுதி யிருக்கிறார்!" என்று கடிதத்தைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தாள். சிவராமன் நிமிர்ந்து உட்கார்ந்து இடது கை விரல்களால் நெற்றியைத் தேய்த்த வண்ணம், "என்ன எழுதி யிருக்கிறார், உன் அண்ணா?" என்று ஆதரவுடன் கேட்டான்.

"சுகுணாவை அழைத்து வந்து இரண்டு நாட்களாயிற்றாம். அடுத்த வாரம் வளைகாப்பு நடத்த நாள் குறித்து எல்லா ஏற்பாடுகளும் செய்தாகி விட்டதாம். உடனே நம் இருவரையும் புறப்பட்டு வரும்படி எழுதி யிருக்கிறார்!" என்றாள் ஜெயா உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்க.

"உன் பாடு குஷிதான்! உம். என்றைக்குக் கிளம்புவதாக உத்தேசம்?" என்று கேட்டான் சிவராமன் புன்னகையுடன்.

"ஏன், நீங்கள் வரப் போவதில்லையா? இப்பொழுது லீவுதானே?" என்ற சந்தேகத்துடன் அவனை ஏறிட்டு நோக்கினாள் ஜெயா.

"இவை எல்லாம் பெண்கள் காரியம்; நான் வராவிட்டால் என்ன, ஜெயா! நீ போனால் சரி!" என்றவாறே பென்சிலைக் கூர்மைப்படுத்தினான் சிவராமன். இதற்குள் குழந்தை கண்ணன் விழித்துக் கொள்ளவே ஜெயா அவனைத் தூக்கி இடுப்பில் வைத்தவண்ணம் சிவராமன் அருகில் வந்தாள்.

"ஆமாம். இன்னும் மாப்பிள்ளை என்கிற 'பிகு' உங்களை விட்டுப் போகவில்லையாக்கும்! நீங்கள் வராவிட்டால் நானும் அங்கே போகப் போவதில்லை" என்றாள்.

"இதென்ன, ஜெயா! நான் விளையாட்டுக் கல்லவா வரப் போவதில்லை என்று சொன்னேன்! நான் இல்லாமல் உன் அண்ணா சுகுணாவுக்கு வளைகாப்பை நடத்தி விடுவாரா, என்ன! தவிரவும் சுகுணா நம் வீட்டுப் பெண். அதை உத்தேசித்தாவது நான் வரத்தானே வேண்டும்! இல்லாவிட்டால் ரகு கோபித்துக் கொள்வானே! இப்பொழுதே கிளம்ப வேண்டுமென்றாலும் நான் தயார்!" என்றான் சிவராமன்.

• • •

மாப்பிள்ளை 'பிகு' என்ற குற்றச்சாட்டை விளையாட்டாகத் தன் கணவன் மீது சுமத்தினாளே தவிர, தனிமையில் விடப்பட்டபொழுது ஜெயாவின் உள்ளம் சிவராமனது உயர்ந்த பண்பையும் வெள்ளை உள்ளத்தையும் பாராட்டத்தான் செய்தது. அவளாவது தன் பிறந்தகத்தைக் குறை கூறி எத்தனையோ முறைகள் வெறுத்திருக்கிறாள். ஆனால் சிவராமனோ...! மாப்பிள்ளை என்ற கௌரவத்தை என்றைக்குமே எப்பொழுதுமே பாராட்டினதில்லை.

ஜெயா பிறந்த வேளை அவளுடைய தகப்பனாருடைய உயிரைக் குடித்து விட்டது. குடும்பத்தில் கோபுதான் மூத்தவன். 'இண்டர் மீடியட்' படித்து முடித்திருந்த அவன் தான் தன் தகப்பனாருக்குப் பிறகு அவருடைய வேலையில் இருந்து தன் தாயார், தங்கை ஜெயா இவர்களைக் கொண்ட குடும்ப பாரத்தை ஏற்று நடத்த வேண்டி இருந்தது. நல்ல வேளையாக அவன் தகப்பனார் கோபுவுக்கு அவனது மற்றொரு தங்கையான லக்ஷ்மியைக் குறித்த கவலையை விட்டு வைத்திருக்கவில்லை. தான் உயிருடன் இருந்த போதே லக்ஷ்மியை நல்ல பசையுள்ள இடத்தில் கொடுத்து அவளது விவாகத்தைச் செய்து முடித்திருந்தார்.

மேலே என்ன செய்வது என்று வகை தெரியாமல் குழம்பிக் கொண்டிருந்த கோபுவின் மீது அதிர்ஷ்ட தேவதை தன் கடைக்கண் பார்வையைச் செலுத்தினாள். பிறகு கேட்க வேண்டுமா! தம் பெண் ஜானகியைக் கொடுத்து அவனுக்கு ரயில்வேயில் ஒரு உத்தியோகத்தையும் சம்பாதித்துக் கொடுத்தார் கோபுவுக்கு மாமனாராக வாய்த்தவர். அதனால் கோபுவின் குடும்பம் ஒரு விதமாக ஓடியது. காலகடைவில் அதிர்ஷ்டமும் தன் முயற்சியும் கோபுவின் வாழ்வுப் பாதையில் ஒன்றுக் கொன்று போட்டி இடவே அவனது நிலை உயர ஆரம்பித்து நிரந்தரமான ஒரு கட்டத்தை அடைந்தது.

எது எப்படி இருப்பினும் கோபு மட்டும் என்றைக்குமே தன் கடமையை மறந்தவனல்ல. ஜெயாவின் மீது உயிர் அவனுக்கு. அவனுக்கு மனைவியாக வாய்த்தவளும் அவன் மனம் கோணாமல் நடக்கவே, ஜெயா தகப்பனார் இல்லாத குறை சிறிதும் தெரியாமல் வளர்ந்தாள். நாட்கள் ஓடின. ஜெயா வளர்ந்து கல்யாண வயதை நெருங்கவே கோபுவின் மனத்தில் அவளுடைய எதிர்கால வாழ்க்கையைப் பற்றிய சிந்தனை எழுந்தது.

“அம்மா, நம் லக்ஷ்மிக்கு அமைந்ததைக் காட்டிலும் ஜெயாவுக்குப் பார்க்கும் இடம் ஒரு படி உயர்ந்ததாகவே இருக்க வேண்டும். பெரிய மாப்பிள்ளைக்கு எந்த வகையிலும் தாழ்ந்தவராக இருக்கக் கூடாது நம் வீட்டுக்குச் சின்ன மாப்பிள்ளையாக வரக்கூடியவர்!” என்று கூறி அதற்கான முயற்சியிலும் இறங்கினான் கோபு.


இந்த நிலையில்தான் ஒரு நாள் எதிர்பாராத விதமாகச் சிவராமன் பி. ஏ., பி. டி. யைச் சந்திக்கும் வாய்ப்பு கோபுவுக்குக் கிட்டியது. தன் உறவினர் வீட்டுக் கல்யாணம் ஒன்றுக்கு வந்திருந்தான் சிவராமன். அக் கல்யாணத்துக்குக் கோபு வீட்டாரும் சென்றிருந்தனர். சிவராமனை அங்கு அறிமுகம் செய்துகொண்ட கோபுவுக்கு அவனுக்கு இன்னும் விவாகம் ஆகவில்லை என்பதை அறிந்தவுடன் ஜெயாவுக்கு அவனைப் பார்த்தால் என்ன என்ற சபலம் தட்டியது அந்த எண்ணத்தில் சிவராமனைத் தன் வீட்டுக்கு அழைத்து வந்து ஜெயாவைப் பார்க்கும்படியும் செய்தான்.

பெண்ணுக்குப் பையனைப் பிடித்து விட்டது; பையனுக்கும் பெண் பிடித்து விட்டது.

ஆனால் கோபு முதலில் ஏதோ எண்ணத்தில் சிவராமனை அழைத்து வந்து ஜெயாவைப் பார்க்கச் செய்தானே தவிர ஜெயாவுக்கு இன்னும் பெரிய இடமாகப் பார்க்க வேண்டும் என்றுதான் எண்ணினான். என்ன இருந்தாலும் சிவராமன் ஒரு பள்ளி ஆசிரியன்தானே! அவனுடன் சேர்த்துப் பிணைக்கப்படும் ஜெயாவினது இல்வாழ்வு எவ்விதம் நிறைவு பெறும் என்ற எண்ணம் எழவே அவன் வேறு இடத்தில் வரன் பார்க்க முனைந்தான். அதையறிந்த ஜெயா அதிர்ச்சி யுற்றாள். அதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல் தைரியமாகத் தன் உள்ளக் கருத்தையும் வெளியிட்டாள்.


அதைக் கேட்ட கோபு, “இதென்ன பிடிவாதம், ஜெயா! உன் நன்மைக்காகத்தானே சொல்லுகிறேன்! சிவராமனைப் பற்றிக் குறை ஒன்றும் சொல்லுவதற்கில்லை. நல்ல பையன்தான். ஆனால் அவனது சம்பாத்தியம்! நாளைக்கு வறுமை உன்னைக் கண் கசக்கச் செய்து விடுமே! அதை யோசித்தாயா! தெரிந்தே உன் வாழ்வை நான் வறுமைக்குப் பலியாக்க விரும்பவில்லை. சிவராமனைக் காட்டிலும் பன்மடங்கு உயர்ந்தவனுக்கு உன்னை முடித்து வைக்கிறேன்” என்றான்.

அவன் தாயாரும், “ஆமாண்டி, ஜெயா! கோபுவின் வார்த்தையைக் கேள். மனத்தில் எதையாவது நினைத்துக் கொண்டு ‘தத்துப்பித்’ தென்று உளறி அவனுக்குக் கோபமூட்டாதே. உனக்குப் பார்க்குமிடம் எப்படி இருக்கவேண்டும், உன் கல்யாணத்தை எப்படி நடத்த வேண்டும் என்பவையெல்லாம் எங்களுக்குத் தெரியாதா, என்ன! நீ மாத்திரம் அலட்டிக் கொள்ளாமல் இரு. எல்லாம் சரியாகவே நடக்கும்!” என்று அவளைக் கடிந்துகொண்டாள் மிகவும் செல்லமாக.





உயர்ந்த
ரக
ரேயான்
நூல்கள்
TRAYONS
இந்தியாவின் முதன் முதல் ரேயான் தொழிற்சாலையால் தயாரிக்கப்பட்டது.
120 மேலும் 150 டினியர் களில் கிடைக்கும். பிரகாசமான, பளபளப்பான, நீடித்துழைக்கக்கூடிய அமைப்புள்ளவை.
வியாபார விவரங்களுக்கு:
தி திருவாங்கூர் ரேயான்ஸ் லிமிடெட், ரேயான்புரம் போஸ்ட், வடக்கு திருவாங்கூர்.
மேனேஜிங் ஏஜண்ட்கள்: எம்சிடி. க்ளன்ன் (திருவாங்கூர்) லிட்.



வெட்டுக்காயம், நெருப்புப்புண், கஞ்சிக்கொப்பளம், காயங்கள் ஆகியவை விரைவில் குணமாகும்
உடனே ஜாம்-பெக் மூலிகை களிம்பைத் தேய்க்கவும். ஜாம்-பெக்கிலுள்ள விஷத்தன்மையைப் போக்கும் சிறந்த மருந்துக் கலப்புள்ள தைலங்கள் உடனே உங்களுக்குப் பாதுகாப்பளிக்கும். துரிதமாக ஊடுருவிச் செல்லும் இத்தைலங்கள் விஷக்கிருமிகளை அழித்து இதம் அளித்து நோய்வாய்ப்பட்டுள்ள பாதங்களைக் குணப்படுத்தும். வீக்கத்தையும் எரிச்சலையும் போக்கடிக்கும். ஜாம்-பெக் இல்லாமல் இருக்கவே வேண்டாம். இன்றே ஒன்று வாங்குங்கள். சருமம், மண்டை நோய்களுக்கும், வெட்டுக்காயம், நெருப்புப்புண், ரணங்கள், சேற்றுப்புண், பூச்சிக்கடி மூலம் ஆகிய வற்றிற்கும் ஜாம்-பெக் உலகப்பிரசித்தி பெற்ற நிவாரணியாகும்.
மிருகக் கொழுப்பற்றது என்பதற்கு உத்திரவாதம்.
Zam-Buk
ஜாம்-பெக் உலகத்தின் தலைசிறந்த சரும ஆயின்ட்மென்ட்
மதராஸிற்கு ஸோல் ஏஜெண்டுகள்: தாதா & கம்பெனி, பார்க் டவுன்


"ஆமாம், ஜெயா! உன் அண்ணா எதையும் யோசியாமல் சொல்ல மாட்டார். உன் வாழ்க்கை சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதுதானே எங்கள் எல்லோருடைய விருப்பமும்!" என்று கோபுவின் மனைவி ஜானகியும் கூறினாள்.

"என்ன மன்னி, நீயுமா இப்படிச் சொல்லுகிறாய்! குடும்பத்தில் அமைதியும் சந்தோஷமும் வெறும் பணத்தினால் மட்டும் வருவதல்ல என்பது உனக்குத் தெரியாததா!" என்றாள் ஜெயா.

"ஜெயா, நீ சொல்லுவதெல்லாம் கதைகளிலும் கற்பனையிலும் நடக்கக் கூடியவை. வீணாகப் பிடிவாதம் பிடித்து அம்மா, அண்ணா இவர்கள் விரோதத்தைச் சம்பாதித்துக் கொள்ளாதே! ஆமாம், இப்பொழுதே சொல்லி விட்டேன்!" என்று அவளுக்குப் புத்தி புகட்டும் முறையில் பேச ஆரம்பித்து விட்டாள் அவளது மன்னி.

ஜானகியாவது தன் கட்சியில் இருந்து தனக்காகப் பரிந்து பேசுவாள் என்று எதிர்பார்த்த ஜெயாவுக்கு அவளது பேச்சு ஏமாற்றத்தையும் வருத்தத்தையும்தான் அளித்தது. இவ்வளவுக்குப் பிறகும்கூட ஜெயாவினால் தன் மனத்தை மாற்றிக் கொள்ள முடியவில்லை. அவளது உறுதியை அறிந்தபோது கோபு மிகவும் சீறி விழுந்தான்.

மோட்டார் சைக்கிளின் முன்னேற்றம்!



"காதல் கல்யாணம் செய்து கொள்ளுகிறாளாமா! காதலையும் கல்யாணத்தையும் இவள்தான் ரொம்பக் கண்டு விட்டாள். அதற்கு அன்றைக்கே அந்தச் சிவராமனுடன் ஓடிப்போயிருக்கலாமே; இன்னும் கல்யாணம் ஒன்றுதான் குறைச்சலாக இருக்கிறதாக்கும்! சரி, சரி. எனக்கும் தொல்லை விட்டது. அவனையே மணந்து கொள்ளட்டும். நாளைக்குச் சோற்றுக்குத் திண்டாடும் பொழுது தெரியும், காதல் கல்யாணத்தின் மகத்துவம்! அப்பொழுது மட்டும் அம்மா, அண்ணா இவர்களது நினைவு வராமல் இருந்தால் சரி!" என்று இரைந்தான்.

இதை யெல்லாம் கேட்ட ஜெயாவினது உள்ளம் சிறிது கலங்கத்தான் செய்தது. கோபு கோபத்தில் அவ்விதம் படபடப்பாகப் பேசினானே தவிர ஜெயாவினிடத்தில் அவனுக்கிருந்த அன்பு சிறிதும் குறையவில்லை. எனவே ஜெயாவின் கல்யாணத்தை அவள் இஷ்டப்படியே நடத்துவது என்று திட்டமிட்டான். ஜெயா கடைசியில் தன்னுடைய விருப்பம் நிறைவேறுவதைக் கண்டு ஒரே இன்பக் கடலில் திளைத்தாள்.

சிவராமனுடன் ஜெயா தொடங்கிய வாழ்க்கை இனிக்கத்தான் செய்தது. அவள் எதிர் பார்த்ததற்கு மேலாகவே சிவராமன் அவளைத் தன் அன்பு வெள்ளத்தில் மூழ்கச் செய்தான். அதிலேயே திளைத்துக் கொண்டிருந்த ஜெயாவின் உள்ளத்தில் சிற்சில சமயங்களில் தன் பிறந்தகத்தைப் பற்றிய எண்ணம் எழும். அப்பொழுதெல்லாம் சிவராமனது நிலையைத் தாழ்த்திப் பேசின கோபுவின் சொற்கள்தான் அவள் நினைவுக்கு வரும். உடனே அவள் மனம் கல்லாகி விடும். கோபு எத்தனையோ முறைகள் அவளை அழைத்திருந்தும் இதுவே அவளைப் பிறந்தகத்துக்குப் போகாதவாறு தடை செய்து வந்தது.

இருந்தும் சிவராமனது வற்புறுத்தலின் பேரில் அவள் இரண்டொரு தடவைகள் பண்டிகை என்பதைச் சாக்கிட்டு அவனுடன் பிறந்தகத்துக்குப் போகத்தான் வேண்டியிருந்தது. அச்சமயங்களில் எல்லாம் லக்ஷ்மியும் அவளது கணவன் ஜெகந்நாதனும் அங்கு வந்திருந்தனர். ஜெயாவைப் பொறுத்த மட்டில் எல்லோரும் அவளையும் லக்ஷ்மியையும் ஒரே விதமாகத்தான் நடத்தினர். ஆனால் மாப்பிள்ளைகள் உபசரிப்பில் ஏற்றத்தாழ்வு இருப்பதை ஜெயா உணர்ந்தாள். சமையல் முதற்கொண்டு வீட்டில் நடக்கும் ஒவ்வொரு காரியமும் ஜெகந்நாதனது விருப்பத்தை ஒட்டியே நடந்து வந்தன.

கோபுவும் அவரிடத்தில்தான் இழைந்து இழைந்து பேசுவானே தவிர, சிவராமன் என்றால் ஒருவிதமாகத்தான் நடந்து கொண்டான். வீட்டு வேலைக்காரர்களுக்குக் கூடப் பெரிய மாப்பிள்ளைதான் பெரிதாகக் கண்ணில் பட்டார். ஆரம்பத்திலிருந்தே அம்மாதிரியான ஒரு சூழ்நிலை வீட்டில் ஏற்படுத்தப் பட்டிருக்கையில் பாவம், அவர்கள் என்ன செய்வார்கள்! ஜெகந்நாதன் ஊருக்குப் போகிறாரென்றால் ஸ்டேஷனுக்கு 'டாக்ஸி'. சிவராமனுக்கென்றால் குதிரை வண்டி. இந்தமாதிரி ஒவ்வொரு விஷயத்திலும் பாரபட்சம் காட்டி எல்லோராலும் தன் கணவன் துச்சமாக மதிக்கப் படுவதைக் கண்ட ஜெயாவின் உள்ளம் பொருமியது. இதற்கெல்லாம் காரணம் என்ன என்பதை ஜெயா அறியாமலில்லை.

டில்லி 'செகரட்டேரியட்'டில் மாதம் ரூ. 800 சம்பாதிக்கும் ஜெகந்நாதன் எங்கே! மாதம் நூறு ரூபாய் வாங்கிக் கொண்டு உழலும் சிவராமன் எங்கே! இவ்வளவுக்கும் சிவராமன் ஜெகந்நாதனைக் காட்டிலும் பி. டி. என்ற ஒரு பட்டம் அதிகமாகவே வாங்கி இருந்தான். இருந்தும் என்ன! அதை யெல்லாம் யார் கவனிக்கிறார்கள்! ரூபாயல்லவோ எல்லோருடைய கண்ணையும் மறைக்கிறது! இந்த விஷயத்தில் மாத்திரம் படித்தவர்கள், படிக்காதவர்கள் எல்லாம் ஒன்றாகத்தான் இருக்கிறார்கள்! இவற்றை யெல்லாம் பார்க்கப் பார்க்க ஜெயாவுக்குப் பிறந்தகம் என்றாலே வேம்பாகக் கசந்தது.

* * *

நாளாவட்டத்தில் ஜெயா பிறந்தகம் போவதையே அடியோடு நிறுத்தி விட்டாள். அவ்வப்பொழுது கோபுவிடமிருந்து வரும் கடிதத்துக்கு மாத்திரம் சுருக்கமாகப் பதில் போடுவாள். இந்நிலையில் ஜெயா தாய்மைப் பேற்றை அடையவே அதை யொட்டி நடக்க வேண்டி இருந்த வளைகாப்பு சீமந்தம், பிரசவம் என்ற பிரச்னைகள் எல்லாம் எழுந்தன. இவற்றிற்கெல்லாம் பிறந்தகம் போவதை ஜெயா கிஞ்சித்தும் விரும்பவில்லை. ஆனாலும் உலக வழக்கத்தை ஒட்டிக் கோபு வந்து அழைத்தபோது அவளால் போகாமல் இருக்க முடியவில்லை.

உரிய காலத்தில் ஜெயா கண்ணனை ஈன்றெடுத்தாள். குழந்தைக்கு இரண்டு மாதம் ஆனதுமே ஜெயா கணவன் வீட்டுக்குப் புறப்பட வேண்டுமென்றாள். ஆனால் அவளை அவ்வளவு சீக்கிரம் அனுப்ப இசையவில்லை. ஆகையால் ஜெயாமேலும் சிலநாட்கள் பிறந்தகத்தில் தங்கவேண்டியிருந்தது.

அச் சமயத்தில்தான் ஒரு நாள் கோபுவுக்கு அந்தக் கடிதம் வந்தது. கடிதத்தைப் படித்த கோபுவின் முகத்தில் சொல்லொணாத ஏமாற்றமும் வருத்தமும் நிரம்பி இருந்தன. அதைக் கண்ணுற்ற ஜெயா, "என்ன அண்ணா, கடிதம் எங்கிருந்து வந்திருக்கிறது! ஒரே சிந்தனையில் ஆழ்ந்து விட்டீர்களே!" என்று கேட்டாள். கோபு பதில் பேசாமல் கடிதத்தை அவள் கையில் கொடுத்தான். சுருக்கமாக எழுதப்பட்டிருந்த அக்கடிதத்தைப் படிப்பதற்கு ஜெயாவுக்கு வெகு நேரம் ஆகவில்லை. அதில் இருந்தவை இவைதான்.

அன்புள்ள கோபுவுக்கு,

உன் கடிதம் கிடைத்தது. கருணாவின் விவாகத்தை விரைவில் நடத்த வேண்டியதுதான். ஆனால் நீ நினைத்தமாதிரி அவளுக்கு ஏற்ற வரன் இந்தப் பக்கத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. மேலும் அவருக்கு இருக்கும் வேலைத் தொந்தரவில் இதற்கெல்லாம் அவருக்கு நேரமே கிடைப்பதில்லை. ஆகையால் அந்தப் பக்கத்திலேயே ஒரு நல்ல வரனாக முடிப்பது நல்லது.

நீ உன் கடிதத்தில் கேட்டு எழுதிய மாதிரி கல்யாணத்துக்கு நாங்கள் பண உதவி செய்ய முடியாத நிலையில் இருக்கிறோம் என்பதைக் குறித்து வருந்துகிறேன். நாங்கள் புதிதாகக் கட்டிக் கொண்டிருக்கும் வீட்டுக்கான செலவுகளுக்கு எங்களுக்கே கொஞ்சம் பணம் தேவையாக இருக்கிறது. ஆகையால் நீ அவரை நம்பி இருப்பதில் பயனில்லை. உன் 'பிராவிடெண்டு பண்டி'ல் கடன் வாங்கிக் கல்யாணத்தை முடிப்பதுதான் நல்லது என்பது என் கருத்து. ஜெயா எப்பொழுது ஊருக்குத் திரும்பிப் போகிறாள்?

கருணாவின் விவாகத்தை எப்பொழுது நடத்தப் போகிறாய்? நீ முன் கூட்டியே எழுதினால்தான் லீவுக்கு ஏற்பாடு செய்து கொண்டு எங்களால் கிளம்பி வரமுடியும். வீட்டில் எல்லோரையும் விசாரித்ததாகச் சொல்லவும். உன் சகோதரி,

லக்ஷ்மி

"இதற்குத்தானா இடித்து போய் உட்கார்ந்திருக்கிறீர்கள்! இதைப் பாருங்கள்!" என்று தனக்கு வந்த கடிதத்தைக் கோபுவினிடம் கொடுத்தாள் ஜெயா.

சிவராமன் எழுதியிருந்தான்.

என் அன்புள்ள ஜெயாவுக்கு,

உன் கடிதம் கிடைத்தது. உன் அண்ணா விருப்பப் படி அவர் உன்னை எப்பொழுது அனுப்பச் சம்மதிக்கிறாரோ, அப்பொழுது நீ கிளம்பி வரலாம். அவருடைய வார்த்தையைத் தட்டி விட்டு நீ அவசரப் பட்டுக் கிளம்பி வருவதை நான் சிறிதும் விரும்பவில்லை. என் விருப்பம் நீ எந்த விதத்திலும் அவருடைய மனத்தை நோகச் செய்யக் கூடாது என்பதுதான்.

ஒரு சந்தோஷச் செய்தி. அரசாங்கத்தாருடைய பொருள் உதவியில் காசி சர்வ கலாசாலையில் வாசித்துக் கொண்டிருந்த என் தம்பி ரகு எம். எஸ்ஸி. பாஸ் செய்து விட்டான். அத்துடன் அவனுக்கு மைசூர் அரசாங்கத்தார் நிர்வாகத்தில் நடக்கும் சர்க்கரைத் தொழிற் சாலையில் மாதம் நானூறு ரூபாய் சம்பளத்தில் வேலை ஆகி அதையும் ஒப்புக் கொண்டு விட்டான். இப்பொழுது உன் அண்ணா தன் பெண் கருணாவுக்கு மூணாந்து வரன் தேடுவதாக அறிந்தேன்.

எனக்கு ஒரு ஆசை. உன் அண்ணா சம்மதித்தால் ரகுவுக்குக் கருணாவைக் கல்யாணம் செய்து கொள்ளலாம். கருணாவுக்கு ரகு எவ்விதத்திலும் ஏற்றவனாயிருப்பான் என்பதே என் கருத்து. நாம் இருவரும் சொன்னால் ரகு தட்டமாட்டான். அவனைச் சம்மதிக்க வைக்கும் நம்பிக்கை எனக்கு நிச்சயம் இருக்கிறது. செய்ய வேண்டியவைகளைப் பற்றி உன் அண்ணா இஷ்டத்துக்கே விட்டு விடலாம். இது விஷயத்தில் உன் அண்ணா விருப்பம் என்ன என்பதைத் தெரிந்து எழுது. குழந்தையை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள். முடிந்தால் அடுத்த வாரம் அவ்விடம் புறப்பட்டு வருகிறேன். உன்,

சிவராமன்

கடிதத்தைப் படித்து முடித்த கோபுவுக்கு என்ன பேசுவதென்றே புரியவில்லை.

"என்ன அண்ணா! மௌனம் சாதிக்கிறீர்கள்! நீங்கள்தான் ஏற்கனவே என் மைத்துனர் ரகுவைப் பார்த்திருக்கிறீர்களே! கருணாவுக்கு ஏற்ற வரன்தானே! நிங்கள் அந்தஸ்தைப் போல அந்தஸ்தில்லா விட்டாலும்......" என்று முடிக்காமலே வாக்கியத்தை நிறுத்தினாள் ஜெயா.

"ஜெயா, என்னை மன்னித்து விடு! இத்தனை நாள் ஏதோ பிரமை என் கண்ணை மறைத்திருந்தது. இன்றுதான் என் உள்ளம் தெளிந்தது. இதற்காக நான் என்றென்றைக்கும் உனக்கும் மாப்பிள்ளைக்கும் கடமைப்பட்டவன் ஆவேன். நானே இக் கடிதத்துக்குப் பதில் எழுதி விடுகிறேன்" என்று உணர்ச்சி வசப்பட்டுக் கூறினான் கோபு. அதற்கு மேலும் ஜெயா, சிவராமனைக் குறித்துக் கோபு கொண்டிருந்த கருத்துக்களை மீண்டும் கிளறி அவன் மனத்தைச் சங்கடத்துக்கு உள்ளாக்க விரும்பவில்லை.

சிவராமனது பெருமுயற்சியின் பேரில் அடுத்த முகூர்த்தத்திலேயே ரகு அம்மி மிதித்து, அருந்ததி பார்த்துக் கருணாவின் கரம் பற்றினான்.

* * *

மறு நாளே ஜெயாவைக் குழந்தையுடன் அனுப்பி விட்டு இரண்டு நாள் கழித்துப் போகலாமென்று தங்கி விட்டான் சிவராமன். அவர்களை அழைத்துப் போக ஸ்டேஷனுக்கு வந்திருந்தான் கோபு. கண்ணனை ஜெயாவின் கரங்களிலிருந்து வாங்கிக் கொண்டதும் அவன் கேட்ட முதல் கேள்வி "மாப்பிள்ளை எங்கே!" என்பதுதான்.

"அவர் வரவில்லை" என்றாள் ஜெயா.

"சரிதான். நானே நேரில் வந்து அழைத்திருக்க வேண்டும். அம்மாதிரி செய்யாதது என் குற்றம் தான். இப்பொழுது மட்டும் என்ன! நானே கிளம்பிப் போய் அவரை அழைத்து வந்து விடுகிறேன்" என்றான் கோபு. அவன் குரலில் உறுதி தொனித்தது.

"அதற்குள் என்னென்னமோ பேச ஆரம்பித்து விட்டீர்களே, அண்ணா! நான் விளையாட்டுக்கல்லவா அம்மாதிரி கூறினேன். கண்டிப்பாக இரண்டு நாள் கழித்து அவர் வருவார், அண்ணா!" என்றாள் ஜெயா புன்முறுவலுடன்.

"அதுதானே பார்த்தேன்! மாப்பிள்ளையின் குணம் எனக்குத் தெரியாதா!" என்றான் கோபு விட்டுக் கொடுக்காமல்.

இதைக் கேட்டு ஜெயா மெள்ளச் சிரித்தாள். அச்சிரிப்பில் பொதிந்திருந்த பொருளைக் கோபு உணர்ந்தானோ, என்னவோ!



பசுமலைப் பள்ளிகளின் 108-வது ஆண்டு விழா சமீபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. மேற்படி விழாவின் போது ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு அவர்களின் சரித்திரத்தில் சில முக்கிய பகுதிகளை நாடகமாக ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் திறமையாக நடித்தனர். அதற்கு ஊக்கமும் உற்சாகமும் ஊட்டி வரும் பசுமலை உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் ஸ்ரீ ஆ. மைக்கேல் பொன்னுசாமி அவர்களைப் பாராட்டுகிறோம். நாடகத்தில் பங்கு கொண்டு நடித்தவர்களைப் படத்தில் காணலாம். ★ ★ ★





நெஸில்ஸின் மற்றுமோர் நல்ல பண்டம்

சூடாகவும் குளிர்ச்சியாகவும் சாப்பிடுவதற்கு ஏற்ற நெஸில்ஸின் **மைலோ** எந்த நேரத்திலும் சாப்பிடுவதற்குரிய ருசியுள்ள பானம். அது முழுவதும் சுத்தமான முழு ஆடை நிறைந்த பால், மால்ட் சத்துக்கள், வலிவு ஊட்டும் உலோகச் சத்துக்கள் மற்றும் ஏ, பி, டி முதலிய விட்டமின் சத்துக்களும் நிறைந்தது. அதன் இனிய சாக்லேட் ருசி, சிறியவர் பெரியவர் எல்லோரிடையேயும் பிரசித்தியடைந்திருக்கிறது. உங்களுக்கு விருப்பமான ஹோட்டலில் சாப்பிட்டுப் பாருங்கள். வீட்டிலும் சாப்பிடுங்கள். அது உங்களுக்கு நல்லது. தயார் செய்வது மிகச் சுலபம். நிச்சயமாக மிகச் சிறந்த பானம்.

இரண்டாம் எலிஸபெத் அரசியின் முடிசூட்டு விழா!

ஒய். ஜி. துரைசாமி.



யுதிஷ்டிரரை நச்சுப் பொய்கையின் கரையில் யமதருமன் கொக்கு ரூபத்தில் கேட்டான், "இந்த உலகத்தில் மிக்க ஆச்சர்யமான சம்பவம் யாது!" என்று. யுதிஷ்டிரர், "தினந்தோறும் கணக்கில்லாமல் ஜனங்கள் ஆயுள் முடிவதைப் பார்த்துக் கொண்டே யிருந்தும் நாமும் அப்படியே ஒரு நாள் மறைய வேண்டியவர்கள்தான் என்பதை உணராமல் நிரந்தரமாக வாழப் போவதாக எண்ணி நடக்கிறானே மனிதன் அதுதான் மிக்க ஆச்சர்யம்" என்று பதில் அளித்தார்.

ஆனால் அவர் 1953-ம் வருஷத்தில் இருந்திருந்தால் "இந்த உலகத்தில் எல்லா தேசங்களிலும் குழப்பம் நிறைந்திருக்கிறது. ஒழுங்கான அரசாட்சியும் மக்களின் நல்வாழ்வும் குன்றியிருக்கிறது. அதிலும் முக்கியமாக ஐரோப்பாவில் அரசாங்கங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தலை சாய்ந்து சிங்காதனங்கள் ஆட்டம் கொண்டு மன்னர்கள் மண்ணைக் கவ்வி வருகிறார்கள். இப்படிப்பட்ட சரித்திர காலத்தில் இங்கிலாந்து ஒரு தேசத்தில் மாத்திரம் நிலையான பொதுஜன ஆட்சியோடு ஒட்டினதான ஒரு அரசு ஆளும் நிலைமையில் ஒரு அரசி பட்டத்துக்கு வந்து முடிசூடும் விழாவானது நாடு முழுதும் உண்மையான உணர்ச்சியுடனும் தேச பக்தியுடனும் கொண்டாடப்படுகிறது. உலகம் முழுதும் இதில் உற்சாகத்துடன் பங்கெடுத்துக் கொண்டு ஆனந்தப்படுகிறதே. இதுவே மிக மிக ஆச்சர்யம்!" என்றுதான் கூறியிருப்பார்.

உண்மையிலேயே இந்த முடி சூட்டு விழா அநேக முறைகளில் உலகத்து மக்களுக்கெல்லாம் ஒரு அழகான உண்மையை எடுத்துக் காட்டும் விசேஷ சம்பவமாக இருந்தது. அநேக வருஷங்களுக்குப் பின் இங்கிலாந்தில் ஒரு பெண்மணி பட்டத்துக்கு வருவது என்னும் விஷயமே ஒருவர் பின்னொருவர் மன்னர் தோன்றுவதைப் போலில்லாமல் மக்களுக்கு அபரிமிதமான உற்சாகத்தையும் ஊக்கத்தையும் மூட்டி விட்டது. வரும் அரசியின் பெயர் எலிஸபெத் என்பது இன்னும் தனி விசேஷத்தையும் உணர்ச்சியையும் அளித்திருக்கிறது ஆங்கில மக்களுக்கு. முதல் எலிஸபெத் அரசி சரித்திரத்தில் பலவிதங்களில் பெயர் பெற்றவராவர். அவர் ஆட்சியில் இங்கிலாந்து மிக்க உன்னத நிலையிலிருந்தது. கலைகள் வளர்ந்தோங்கின. மக்கள் மிகவும் ஊக்கத்துடனும் ஒத்துழைப்புடனும் நல்வாழ்க்கை நடத்தினர். ஆங்கிலக் கப்பல்கள் கடல்களைக் கடந்து பெரும் பகைவர்களையெல்லாம் முறியடித்து ஜயக்கொடி நாட்டித் திரும்பின. அதற்கு எல்லாவிதத்திலும் ஒப்பிடக்கூடிய முறையில் இங்கிலாந்து மறுபடியும் இரண்டாம் எலிஸபெத் அரசாட்சியில் உலகத்திலேயே தனிப் பதவியும் உயர்வும் பெறக்கூடிய சின்னங்கள் உள்ளன என்று தேசபக்தியுள்ள ஆங்கிலேயர்களுக்குத் தோன்றி யிருக்கிறது.

பெயர் எலிஸபெத் என்பது மாத்திரமா! அழகும், இளமையும், எழிலும், அரசிக்கேற்ற கம்பீரமும், கண்ணியமும், இன்னும் இவற்றையெல்லாம் விட மக்களிடம் உண்மையான அன்பும் ஆதரவும் நிறைந்த சுபாவமும் சேர்ந்து ஒவ்வொருவரும் இந்த முடிசூட்டு விழாவைத் தங்கள் வீட்டு விழாவாகவே எண்ணி ஆனந்தம் பொங்கக் கொண்டாடினர். சரித்திரத்திலேயே இது போன்ற நிகழ்ச்சி எங்கேயாவது இருந்திருக்கக் கூடுமா என்ற வியப்பு ஏற்பட்டது.

ஜூன் இரண்டாம் தேதி நடக்கும் விழாவுக்கு ஜனவரியி லிருந்தே ஏற்பாடுகள் ஆரம்பித்தன. லண்டன் மா நகரம் முழுவதும் இந்திரபுரியோ குபேர பட்டணமோ என்று நினைக்கும்படி அலங்கரிக்கப்பட்டது. பொதுக் கட்டிடங்களும் காரியாலயங்களும், கடைகளும், வீதிகளும், பொது மக்களின் வீடுகளும் எல்லாம் வர்ணங்களாலும் கொடிகளாலும் தோரணங்களாலும் மின்சார ஒளிகளாலும் பல வித விநோத முறைகளில் அழகேறின. பார்த்துக் கொண்டே யிருக்கையில் நாளுக்கு நாள் அலங்காரங்கள் பெருகிக் கொண்டே வந்தன. கடைசியில் விழாவுக்கு ஒரு வாரத்துக்கு முன் ஊர் முழுவதும் மயனால் சிருஷ்டிக்கப்பட்ட மாய நகரமோ என்று பிரமிக்கும்படியாக இருந்தது. அதேவிதமாக ஜனங்களும் நாளுக்கு நாள் உற்சாகம் அதிகரித்துக் கடைசியில் உற்சவ காலத்தில் ஆனந்தம் பொங்கி ஆரவாரத்துடன் தம்மை மறந்து களிக்கூத்தில் மூழ்கும் சிறு குழந்தைகளாக மாறினர். இந்தக் கொடுமையான காலத்தில், உலகத்திலேயே வறுமையும் பிணியும் அதிகமாயுள்ள சூழ்நிலையில் இந்த வீண் ஆடம்பரங்களும் அபரிமிதமான பணச் செலவும் எதற்கு என்று முதலிலெல்லாம் முகம்

களித்து ஆட்சேபித்தவரும்கூட விழா நெருங்க நெருங்கத் தங்களைச் சுற்றிலும் பொங்கியெழுந்த உற்சாகத்தைத் தாமும் பருகிக் குதூகலத்தில் கலந்து கொண்டு விட்டார்கள்.


விழா தினத்தன்று காலை அரசி பக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து பவனி புறப்பட்டு வெஸ்ட் மினிஸ்டர் ஆலயத்துக்குச் சென்றார். அங்கு பழைய பண்டைக்கால சம்பிரதாயப்படி கடவுள் சன்னிதானத்தில் பிரிட்டிஷ் பண்பாட்டுக் கேற்றவாறு கிறிஸ்தவ சமய முறையில் முடி சூட்டும் சடங்கு நடைபெற்றது. பின்னர் ஊர்வலத்துக்கென்று நிருவப்பட்டிருந்த மார்க்கத்தில் பவனி வந்து கடைசியில் அரண்மனை திரும்பினார் அரசி. இந்த ஊர்வலத்தின் அழகு கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. பல தேசத்துப் பட்டாளங்களும் பலவிதமான பல வர்ணங்களாலான உடை அலங்காரங்களுடன் வரிசை வரிசையாக முன் நடந்தனர். பிறகு பல தேசத்துப் பிரதிநிதிகள், மன்னர்கள், மந்திரிகள்—வரிசையாகக் குதிரை வண்டிகளில் வந்தனர். கடைசியில் எல்லாவற்றுக்கும் சிகரமாகச் சூரியனுடைய ரதமே வந்து விட்டதோ என்று வியக்கும்படி வெண் குதிரைகள் பூட்டிய பொன் வண்டியில் அமர்ந்து வந்தார் அரசி, பொன் முகப்பில் அமைந்த வைரக்கல் போன்ற ஒளியுடன்.

இந்தக் காட்சியைப் பார்ப்பதற்காக லட்சக் கணக்கான ஜனங்கள் ஊர்வலம் வரும் வீதிகளின் இருபுற நடைபாதைகளில் இரண்டு நாட்களுக்கு முன்னரே குடியேறி விட்டார்கள். பக்கிங்ஹாம் அரண்மனைக்கு முன்னுள்ள "மால்" என்னும் அகன்ற ராஜ பாட்டையின் ஓரங்களில் எள்ளுப் போட இடமில்லை. அங்குதான் மற்ற இடங்கள் எல்லாவற்றையும் விட ஜனக் கூட்டம் அதிகம். விழாவுக்கு இரண்டு வாரங்கள் முன்னுளிருந்தே அங்கு கும்பல் கும்பலாக ஜனங்கள் நாள் முழுவதும் போய் வந்து கொண்டிருந்தார்கள். காரணம் தினம் ஏதாவது விழா சம்பந்தமான ஏற்பாடுகளோ ஒத்திகைகளோ நடந்து கொண்டிருக்கும். ஊர்வலம் வரும் நிகழ்ச்சியில் ஒவ்வொரு அங்கமும் வெகு உன்னிப்பாக ஒத்திகை செய்யப்பட்டது. வெஸ்ட் மினிஸ்டர் ஆலயத்தில் நடக்கும் முடிசூட்டும் சடங்கும் அப்படித்தான். அரசியை வைத்தே வெகு தீவிரமாக ஒத்திகை செய்யப் பட்டது. ஒவ்வொரு அம்சமும் நிருவப்பட்ட முறையில் சரியான நேரத்தில் — விநாடிக் கணக்கில் — நடை பெறுவதற்காக விழாவில் பங்கெடுத்துக் கொண்ட ஒவ்வொருவரும் முனைந்து உழைத்தனர். போலீஸ் பாதுகாப்பு முறைகளும் வீதிகளில் ஜனங்களது நடமாட்டமும் வண்டிகளது போக்கும் வெகு ஒழுங்குடனும் கட்டுப்பாடுடனும் ஏற்படுத்தப் பட்டிருந்தன. ஜனங்களும் மிக அமைதியாகவும் ஒத்துழைப்புடனும் வரிசைக் கிரமமாகவும் ஒழுங்காகவும் நடந்து கொண்டதுடன் பாதையோரங் களிலும் அமர்ந்தனர். இந்தக் கட்டுப்பாடும் ஒழுங்கு முறையும் அதிகார வர்க்கம் அமைத்த நிபந்தனைகளுக்கு முற்றும் இணங்கி ஒழுகும்படி நடக்கும் ஆங்கில மக்களிடம் எப்போதும் சாதாரணமாகக் காணலாம். தங்கள் உணர்ச்சியையும் தேசாபிமானத்தையும் காட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்க வேண்டுமா! அமோகமான உற்சாகத்துடனும் ஒவ்வொருவரும் ஒழுங்குக்கு இணங்கித் தாமே போலீஸாராயினர். போலீஸாரும் மனித சுபாவமே உருவாகி ஜனங்களுடன் வேடிக்கையாகப் பேசியும் அன்பு காட்டியும் தங்கள் பாதுகாப்பு முறைகளைக் கையாண்டனர். இப்படிப் பரஸ்பரம் அதிகாரிகளும் பொது ஜனங்களும் ஒருவரை யொருவர் மிஞ்சும்படியான ஆர்வமும் ஒத்துழைப்பும் காட்டிய காட்சி உலகத்துக்கே ஒரு பாடம் கற்பிக்கும் முறையிலிருந்தது.

இங்கிலாந்தில் விதித்த முறைக்கும் கட்டுப்பாட்டுக்கும் உள்ளாகாதது ஒன்றே ஒன்று. அது சீதோஷ்ண நிலை. இரண்டு மணி நேரம் சேர்ந்தாற்போல் சீதோஷ்ணம் ஒரே மாதிரி யிருப்பது துர்லபம். ராத்திரி ஒரே மழை பெய்யும்; காலை எழுந்து பார்த்தால் இரண்டு அங்குல கனம் பனி குவிந்திருக்கும். உடனே பனிசென்று வெய்யில் அடிக்கும். அதற்குச் சந்தோஷப்படுவதற்குள் ஐந்தடிக் கப்பால் இருப்போரையும் காண முடியாதபடி மறைக்கும் மூடுபனி சூழ்ந்து விடும்.

அறுபத்தாறு வயது சென்ற விஞ்ஞான நிபுணர் ஒருவர் முடிசூட்டு விழாவுக்கு இரண்டு மாதம் முன்னர் வேடிக்கையாக என்னிடம் "நீ வேண்டுமானால் பார்! ஜூன் மாதம் 2-ம் தேதி முழுதும் மழை பெய்யும்; அதுதான் எங்கள் இங்கிலாந்து" என்று புன்னகையுடன் சொன்னார். நான் அதைப் பொருட்படுத்த வில்லை. ஏனென்றால் ஜூன் மாதம் கோடைக்காலம்; வெய்யில் கொளுத்த

பொன் ரதத்தில் ராணி எலிஸபெத்தும் அவர் கணவரும்.





பக்கிங்காம் அரண்மனை மாடி முகப்பில் ராணி எலிஸபெத் தம் கணவருடனும் குழந்தைகளுடனும் வந்து நின்று ஜனங்களுக்குக் குதூகலத்துடன் வணக்கம் செலுத்துகிறார்.

வேண்டியது. ஆனால் தன் இயற்கைக் குணத்தைக் காட்டி விட்டது ஆங்கில வானம். முடிசூட்டு விழாவுக்கு முதல் நாள் காலையிலிருந்தே மழை. மாலை நான்கு மணிக்குப் பக்கிங்ஹாம் அரண்மனையின் முன்பும் "மால்" ராஜ வீதியிலும் கூட்டம் எப்படி யிருக்கிறதென்று பார்ப்பதற்குச் சில நண்பர்களுடன் சென்றேன். கொட்டுகிற மழையில் ஆயிரக்கணக்கான மக்கள் சொட்டச் சொட்ட நனைந்து கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். ஒருவராவது மழையைப் பொருட்படுத்தவில்லை. உல்லாசமாக விளையாட்டுப் பேச்சு பேசிக் கொண்டும் கூட்டமாகப் பாடிக்கொண்டும் பொழுது போக்கிக் கொண்டிருந்தார்கள். சிறுவர்களும் வயதானவர்களும் ஆண் பெண் யாவரும் மலர்ந்த முகத்துடன் பொறுமை பூண்டு இரவு முழுதும் கழித்தனர். இரவெல்லாம் மழை பெய்து கொண்டுதா னிருந்தது. விழா தினம் உதித்தது. சூரியன் என்கிற பேச்சே கிடையாது. மழை அவ்வப்போது பெய்து கொண்டே யிருந்தது நாள் பூராவும். மழை சற்று மத்தியில் நின்ற போது எலும்புக்குள் குடைந்து செல்லும் குளிர் காற்று அடிக்கும். மாற்றி மாற்றி மழையில் நனைந்தும் காற்றில் உலர்ந்தும் காலம் கழித்தனர்.

கட்டணம் கொடுத்து உட்கார்ந்து பார்க்க வேண்டுவோர்க்கு ஊர்வலம் வரும் மார்க்கம் பூராவும் நடைபாதைகளுக்குப் பின்புறம் அடுக்குப் பலகைகள் (காலரி) நல்ல முறையில் கோக்கப்பட்டிருந்தன. சுகமாகக் காலை நீட்டிக் கொண்டு தாராளமாக உட்காரலாம். அமருவதற்கு ஒவ்வொருவருக்கும் ஒரு மெத்தையும் இருந்தது. தத்தம் இடமும் வரிசையும் டிக்கெட்டில் அச்சடித்துப் பலகையிலும் நம்பர் வாரியாகப் போட்டிருந்தது. பக்கத்திலுள்ளவர்களைக் கடந்து போவதற்கும் தாராளமாக இடமும், காலரிக்கு நடுவில் அங்கங்கே மேலே போவதற்குப் பாதைகள் விடப்பட்டிருந்தன. மேலே ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்கு நடந்து போகக்கூடிய அழகான தாழ்வாரம். (பால்கனி) அங்கங்கே கீழே இறங்குவதற்குப் படிக்கட்டுகள். ஜலவாதி, ஆகாரத்துக்கும் சிற்றுண்டிகளுக்கும் பானங்களுக்கும் அங்கங்கே கூடாரங்கள். அவ்வப்போது வீதிகளையும் காலரி சுற்றுப் புறங்களையும் சுத்தம் செய்து கொண்டே போகும் ஆட்கள் பட்டாளம்.

இந்தக் காலரியில் இரண்டு விதம். ஒன்று மேலே பந்தல் போட்டு மூடப்பட்டது; மற்றது திறந்த முறையிலுள்ளது. சர்க்காரே விதித்திருந்த கட்டணம்—ஆளுக்கு ஆறு பவுனும் நான்கு பவுனும். அதாவது எண்பது ரூபாயும் ஐம்பத்தைந்து ரூபாயும். "மால்" ராஜவீதியில் அமைக்கப்பட்டிருந்த பந்தல் போட்ட காலரி ஒன்றில்தான் நானும் உட்கார்ந்து ஊர்வலக் காட்சியைப் பார்த்தேன். காலை ஆறு மணிக்கே எங்கள் இடங்களில் உட்கார்ந்து விட்டோம். மற்ற வீதிகளிலுள்ளவர்கள் ஊர்வலத்தை ஒருதரம் தான் பார்க்க முடிந்தது. ஆனால் "மாலி"ல் இருந்தவர்கள் அரண்மனையிலிருந்து காலையில் வெஸ்ட்மினிஸ்டர் ஆலயத்துக்குப் போகும்போதும், முடி சூடியபின் ஊர்வலத்துக்குப் புறப்படும் போதும், கடைசியில் அரண்மனை திரும்பும் போதும். ஆக மூன்று முறை பார்க்க முடிந்தது. காலரியில் இருந்த ஆயிரக்கணக்கான ஜனங்களில் எல்லா தேசத்தவரும் கூடியிருந்தனர். எல்லா இனத்தவரும், வெவ்வேறு மதத்தவரும், பலவித தொழிலைச் சேர்ந்தவரும், ஆண், பெண் கிழவர், குழந்தைகள் என்னும்படி நானாவித மக்களும் இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்று கூடி ஒரே மனப்பான்மையுடன் ஒரே லக்ஷியத்துடன் அந்நியோந்நியமாக நாள் முழுதும் கழித்தனர். அவ்வப்போது காலரியிலுள்ள மக்களும் தெருவோரத்தில்—கட்டணம் கொடுக்கச் சக்தி யில்லாமலோ, இடம் கிடைக்காமலோ—கூடியிருந்த ஜனக் கூட்டமும் ஒருவருக்கொருவர் வாழ்த்தும் "ஹுரே" கோஷமும் போட்டுக்


கொண்டு வந்தனர். வித்தியாசமே மறந்து ஒன்றுபட்டுப் போன இந்த நிலையை நிரூபிக்கச் சில அழகான சம்பவங்கள் ஆங்காங்கு நடந்தன. நான் கண்ட ஒன்றை மட்டும் சொல்லுகிறேன்.

எங்கள் காலரி பந்தல் போடப்பட்டது. ஆயினும் அழகுக்கென்று போடப் பட்டதானதால் மழை அதிகமாகத் துன்புறுத்தா விட்டாலும் குளிர் காற்றின் வேகத்தாலும் அதனால் அடிக்கும் மழைச் சாரலாலும் பீடிக்கப்பட்டவர்களாயிருந்தோம். ஒரு சமயம் "காலரியிலுள்ளவர்களுக்கு மூன்று வாழ்த்துகள் போடுங்கள்" என்று தரையிலிருந்தவர்கள் கத்தினார்கள். "தரையிலிருந்தவர்களுக்கு மூன்று வாழ்த்துகள் போடுங்கள்!" என்று காலரியிலிருந்து கூவினோம். ஒருவர் திடீரென்று "நம் சகோதரர்களும் சகோதரிகளும் மழையில் பூராவும் நனைகிறார்கள்! எல்லோரும் தம் தம் குடைகளைக் கீழே அவர்களுக்குக் கொடுத்து உதவுங்கள்" என்று கத்தித் தன் குடையையும் கீழே கொடுத்தனுப்பினார். உடனே காலரியிலிருந்த ஒவ்வொரு குடையும் தரைக்குச் சென்றுவிட்டது. தரை மக்கள் குதூகலத்துடன் ஆரவாரம் செய்து காலரி மக்களை வாழ்த்திக் குடைகளை விரித்து மழையிலிருந்து சற்று விடுபட்டார்கள். ஊர்வலம் கடைசியாக அரண்மனைக்குள் நுழைந்த பிறகு—பாருங்கள் ஆச்சரியத்தை!—ஒன்று தவறாமல் எல்லா குடைகளும் பத்திரமாகத் தங்கள் தங்கள் சொந்தக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டன. கண்ணால் பார்த்திராவிட்டால் நம்பக்கூட முடியாத ஒரு பண்பாடு, ஒரு ஒழுக்கம்!

விழாவுக்கு ஒருவாரம் முன்னாலிருந்தே, வெளியூர்களிலிருந்து தினந்தோறும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் நிறைந்த ஸ்பெஷல் பஸ்களும் மோட்டார் கோச்சுகளும் லண்டன் தெருக்களை நிரப்பின. உள்ளூர் வாசிகளும் வெளிநாடுகளிலிருந்து லக்ஷக் கணக்கில் வந்து லண்டனில் கூடிய ஜனங்களும், இங்கிலாந்தின் இதர பாகங்களிலிருந்து வேடிக்கை பார்க்கவந்த மக்களும் ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு வீதிகளின் நடை பாதைகளிலும் சதுரங்களிலும் கூடி ஒளியலங்காரங்களைப் பார்த்துப் பார்த்துப் பிரமித்து வந்தனர். முக்கியமாக, "மால்" பாட்டை, ஆக்ஸ்பர்டு தெரு, ஆக்ஸ்பர்டு ஸர்க்கஸ், ரீஜண்டு தெரு, பிக்காடிலி ஸர்க்கஸ், ட்ரபால்கர் சதுக்கம், ஒயிட்ஹால், பால்மால் முதலிய இடங்களில், சாதாரண நாட்களிலேயே ஆளைப் பயித்தியமாக அடிக்கும் போக்குவரத்து, நடந்து செல்லும் ஜனங்களானாலும் சரி, வண்டிகளானாலும் சரி. இந்த விழாவுக்கு இரண்டு வாரம் முன்னாலிருந்து விழா கழிந்து மூன்று வாரங்கள் வரை காலையிலிருந்து இரவு மூன்று மணி வரையிலும் கூட எறும்புப் புற்றோ, மனிதத் துளிகளாலான பெருங் கடலோ என்றெல்லாம் நினைக்கும்படி ஜனக் கூட்டம் பொங்கி வழிந்தது.

விழா முடிந்த பிறகும் தினந்தோறும் ஆயிரக் கணக்கில் வண்டிகளும் லட்சக் கணக்கில் கால் நடை ஜனங்களும் அலங்காரங்களையும் ஒளி அமைப்புகளையும் ஓயாது பார்க்கக் கூடிக் கொண்டே யிருந்தனர். அதிலும் மாலை வேளையில் கூட்டம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லவே முடியாது. ஆனால் அதிலும் ஆச்சரியத்தை உண்டு பண்ணும் விஷயம், ஒருவராவது நடை பாதையை விட்டு வீதியில் இறங்கி நடக்கவே மாட்டார்கள் என்பதுதான். வண்டிகளும் ஒன்றையொன்று முந்தி இடைஞ்சல் செய்யாமல் வரிசையாகப் போய்க் கொண்டிருக்கும். ஒரு பர்லாங்கு முன்னேறுவதற்கு ஒரு மணி பிடிக்கும். இந்த விழா சமயத்தில் எப்படிப்பட்ட கூட்டமும் நெருக்கடியும் இருந்தாலும் அமைதியாகவும் தத்தம் இடத்தை உணர்ந்து கொண்டும் ஜனங்கள்

டாக்டரின் நன்றி!



நடந்தார்கள். அதன் பயனாக இங்கிலாந்துக்கு வந்திருக்கும் மற்ற தேசத்தவர்க்கும் கஷ்டமும் வெறுப்பும் கொஞ்சங்கூட இல்லாமல் விழாவின் எல்லா அம்சங்களையும் பூரணமாக அநுபவிக்கும் பாக்கியம் கிடைத்தது.

பலவித துறைகளில் உள்ளவர்களும் வெவ்வேறு தேசத்தாரும் இன்று உலகம் பூராவும் உலாவும் கொடுமைகள், பிணிகள், துவேஷங்கள், அதிகார மனப்பான்மை, கிளர்ச்சியை வளர்க்கும் அரசியல் சூழ்ச்சிகள் என்ற பலவித குழப்பங்களின் நடுவில் தம்மை மறந்து இப்படிக் குழந்தைகள் போல் இந்த முடிசூட்டு விழாவைக் கொண்டாடினார்களே! முதலில் வேண்டாம் என்றவர்களும், அரசுகள் ஒழிய வேண்டும், ஏகாதிபத்தியம் தற்காப்புக்காகச் செய்யும் சூழ்ச்சிகளில் இது ஒன்று என்று ஆட்சேபித்தவர்களும், மன்னரது ஆட்சி என்னும் சகாப்தம் மலையேறி விட்டது, அதை வளரச் செய்யும் சதி இது என்று வெறுத்தவர்களும், பண நெருக்கடியுள்ள இந்த நாட்களில் லட்சக் கணக்கான பவுன்கள் செலவழித்து இந்த விழா நடத்துவது பெரிய குற்றம், இந்தப் பணத்தில் பொது மக்களுக்கு உதவும்படியான நல்ல ஏற்பாடுகள் ஏதாவது செய்யக் கூடாதா என்றவர்களும், எல்லாருமே இந்த முடிசூட்டு விழாவின் மாயையில் சிக்கித் தம்மை மறந்து ஆழ்ந்த ஆனந்தத்தில் மூழ்கியிருந்தார்கள்.

திரு. வி. க. மணி மண்டபம்

நன்கொடை வேண்டுகோள்

தமிழ்ப் பெரியார் திரு. வி. க.வின் சிறந்த பண்புகளும் அரும் பெருந் தொண்டுகளும் தமிழுலகத்துக்கு நன்றாகத் தெரிந்தவை. அவர் பிரிவை ஆற்றாது, பற்பல இடங்களில் அன்பர்கள் திரண்டு அநுதாபக் கூட்டங்கள் நடத்தியுள்ளனர்.

அப் பெருமகனாரின் ஆவி பிரிவதற்குச் சில நாள் முன்பே, அவர் மாணவர்களும் அன்பர்களும் சின்னமாக, அவர் பெயரால் மணிமண்டபம் ஒன்றை, அவர் தோற்றுவித்த சென்னை ராயப்பேட்டை ஸ்ரீ பால சுப்பிரமணிய பக்த ஜன சபையின் சிறந்த வெளி நிலத்தில் எழுப்ப வேண்டும் என்று பல அன்பர்கள் ஒன்று கூடி ஆலோசித்துத் தீர்மானித்தனர். அம் மண்டபத்தை, சிறந்த பொருள்கள் பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்த்தல், நூல் நிலையம் அமைத்தல், திரு. வி. க. வின் நூல்களை ஆராய்தல், அவரது கையெழுத்துப் பிரதிகள், அவர் வெளி யிட்ட பத்திரிகைகள், படித்த நூல்கள், உபயோகித்த பொருள்களில் கண்காட்சியில் வைத்துக் காப்பாற்றுவதற் குரியவற்றைச் சேகரித்துப் பாதுகாத்தல் போன்ற காரியங்களுக்குப் பயன் படுத்திக் கொள்ளலாகும்.

இந்தத் திருப்பணி விரைவில் நிறைவேறுவதற்காகத் தாங்கள் தாராளமாக நன்கொடை அளித்துதவும்படி கோருகிறோம்.

சென்னை 1—10—53	திரு. வி. க. மண்டப அமைப்புக் குழுவினர்.

திரு. வி. க. மண்டப நிதிக்கு 1—11—53 ல் "கல்கி" இதழில் வெளியான தொகைகளுக்குப் பின்னர், கீழ்க்கண்ட நன்கொடைகள் அறிவிக்கப் பட்டிருக்கின்றன :—

ஸ்ரீமான்கள் கருமுத்து தியாகராஜ செட்டியார், "தமிழ்நாடு" அதிபர், மதுரை ரூ 600; சுப்பிரமணிய முதலியார், சுதேசி நடைப் பவுண்டரி, சென்னை ரூ. 101; ஆர். மாசிலாமணி முதலியார், மேயர் கம்பெனி, சென்னை ரூ. 101; கே. திருநாவுக்கரசு முதலியார், குமரன் அச்சகம், காஞ்சி, ரூ. 100; டி. எஸ். அவிநாசிலிங்கம் செட்டியார், எம்.ஏ., கோவை, ரூ. 100; சைவ சித்தாந்த மகா சமாஜம், சென்னை, ரூ. 100; சி. நடராஜ முதலியார், வக்கீல், புதுப்பாக்கம், சென்னை ரூ 51; மு. அங்கமுத்து முதலியார், ராயப்பேட்டை, சென்னை, ரூ. 50; எஸ் கணபதி, ஸுபீரியர் பனியாட் கம்பெனி, சென்னை, ரூ. 50; என். டி. கிருஷ்ணசாமி முதலியார், வேளாளத் தேனாம்பேட்டை, சென்னை, ரூ. 50; கல். முருகேச முதலியார், திருவல்லிக்கேணி, சென்னை, ரூ. 25; எம். நாராயணசாமி முதலியார், சாது அச்சுக்கூடம், ராயப்பேட்டை, சென்னை, ரூ 25; ஜெயப்பிரகாச முதலியார், ராயப்பேட்டை சென்னை, ரூ 21; வேலூர் வார வழிபாட்டுச் சங்கம் காரியதரிசி மா. சந்திரசேகரன் மூலமாக ரூ. 16; சுந்தர விநாயக முதலியார், ராயப்பேட்டை, சென்னை, ரூ. 15; திருவள்ளுவர் செந்தமிழ் சிவ நெறிக் கழகம், ரூ. 15; திருமதி பி. ஆர். மெய்யம்மை காரைக்குடி, ரூ. 10; எம். அமிர்தலிங்கம், அண்டர்பருதி, சரபோஜிராஜபுரம் போஸ்டு, பூந்தோட்டம் (வழி), ரூ 10, பி. திருஞான சம்பந்தம். அரசர் கல்லூரித் தலைவர், திருவையாறு, ரூ 5; எம். எம். எஸ். சையத் ஆலியார், கீழக்கரை, ரூ 5; திருமதி சிவகாமி அம்பாள் பாகம் பிரியாள் மாதர் கழகம், தூத்துக்குடி ரூ. 5.

ரூ 3-0-0 அளித்த நன்கொடையாளர்:— திருவாளர்கள், சிவலிங்கம் திருக்குறள் கழகம், கரும்பக்குடி; ரூ 2-0-0 அளித்த நன்கொடையாளர்கள் :—ஸ்ரீமான்கள் அ. மாரிசாமி, திருச்சி; கே. எஸ். கோவிந்தராஜன், தமிழ் மாணவர் மன்றம், கல்கத்தா; ரூ 1-0-0 அளித்த நன்கொடையாளர்கள் :— ஸ்ரீமான்கள் எஸ். எம். பழனியப்பன், ஒட்டன் சத்திரம்; பி. சுப்பராயலு, திண்டுக்கல்; ஆர். அரிராம். ஆம்பூர்; திருவல்லிக்கேணி அன்பர் ஒருவர்.

குண்டக்கல் ஸன்மார்க்க சங்கம் காரியதரிசி மூலம் ரூ. 13—0—0 க்கு விவரம் :

ஸ்ரீமான்கள் கே. நாகரத்தினம் ரூ. 3; ஏ. எம். ஜகதீசன், ரூ. 3; எஸ் மஹாலிங்கம் ரூ. 2. ரூ. 1—0—0 அளித்த நன்கொடையாளர்கள் :— ஸ்ரீமான்கள் வி. தண்டபாணி; கே. சுந்தரராமன்; ஏ. கடாதரன்; என். துரைசாமி ஐயர்; ஆர். கிருஷ்ணன்; எம். சுந்தரம்; வி நாகராஜன்; ஏ. கே. ஜயராமன்; எஸ். ராமசாமி.

ஸ்ரீ எஸ். நாராயணஸ்வாமி; அணா 8. ஸ்ரீ எம். ஆர். வரதராஜன் அணா 8.

குறிப்பு :—திரு. வி. க. மணி மண்டப நிதிக்கு நன்கொடைகள் அனுப்ப விரும்புவோர் ஸ்ரீ எஸ். சச்சிதானந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி., காரியதரிசி, திரு. வி. க. மண்டப அமைப்புக் குழு. 175/A. லாயிட்ஸ் ரோட், சென்னை, 14. என்ற விலாசத்துக்கு அனுப்பக் கோருகிறோம்.



துப்புரவான சலவைக்கும்...
தூய்மையான
துணிமணிகளுக்கும்
SWASTIK OIL MILLS LTD
ஸ்வஸ்திக்
777
பார் மற்றும் ஸூபர்பைன் கேக்
சாலச் சிறந்தது — இது ஒரு ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் தயாரிப்பு
இந்திய சோப் மற்றும் வாசனைத் திரவியங்கள் தயாரிப்பாளர் சங்கத்தின் அங்கத்தினர்கள்
S.O.M. 232

நான் இப்பொழுது மிகுந்த தெம்புடன் இருக்கிறேன்—
ஊளைச் சதை
கரைந்த பின்னர்



ஊளைச் சதை கரைவதற்காக நான் "க்ருஷன்" ஸால்ட் உட்கொண்டேன். இரண்டே வாரங்களில் 5 ராத்தல் கனம் குறைந்தது பற்றிப் பெரிதும் மகிழ்வுற்றேன். ஐந்து வாரங்களில் 10 ராத்தல் கனம் குறைந்து விட்டது. க்ருஷன் சிகிச்சைக்கு முன்னர் நான் எப்பொழுதும் அசதியும் மந்தமுமுள்ளவளாயிருந்தேன். ஆனல் இப்பொழுதோ மிகுந்த தெம்புடன் சுறுசுறுப்பாயிருக்கிறேன். நான் "க்ருஷன்" கட்சியிலே இருப்பதுடன் எப்பொழுதும் க்ருஷனையே சிபாரிசு செய்வேன்."— K. G.

உட்புற இந்திரியங்கள் சரிவர வேலைசெய்யத் தவறும்பொழுது ஜீரணிக்கப் படாத கழிவு பொருள்கள் குடலுக்குள் சேருவதால் சதைக் கோளங்கள் உண்டு பண்ணப் படுகின்றன. குடல்களும், மூத்திர கோசங்களும் சரிவர ஒழுங்காய் இயங்குவதற்கு நன்கு உதவுவதால் "க்ருஷன்" சதைகள் உண்டாவதை தீவிரமாக எதிர்க்கிறது. மெதுவாக, ஆனல் நிச்சயமாக அதிகப் படியான சதை மறைய ஆரம்பிக்கிறது. தினசரி ஒரு சிறு அளவு க்ருஷன் உட்கொள்ளுவது உங்களை மந்தமான, ஊளைச் சதை யுள்ளவரன்றி, வீர்ய மிகுந்த ஒற்றை நாடிச் சரீர முள்ளவராகச் செய்யும்.

"க்ருஷன்" உங்கள் ஆரோக்கியத்திற்கும் ஆனந்தத்திற்கும் உதவுகிறது

K8A—4



ஏனங்குடி பண்ணையார்

— வீரபாண்டியன் —

கோபாலனும் ஜம்புநாதனும் ஆற்றங் கரையை விட்டுப் புறப்பட்டபொழுது அந்தி மயங்கி இருட்டத் தொடங்கி விட்டது. இருவரும் மௌனமாக நடந்தனர்.

ஜம்புநாதன் முன்னால் நடந்து கொண்டிருந் தான். சற்றுமுன் ஏற்பட்ட கோபத்தின் பிரதி பலிப்பு அவன் நடையில் காணப்பட்டது.

கோபாலன் அவனுக்குப் பின்னால் நடந்து வந்தான். அவன் மனத்திலும் ஆத்திரம் குமுறித் தான் இருந்தது.

மாலையில் ஆற்றங்கரைக்குக் குதூகலத்தோடு உல்லாசமாக உலாவ வந்த நண்பர்கள், இப் பொழுது எலியும் பூனையுமாகத் திரும்பிச் சென்று கொண்டிருந்தனர். இருவரது மனத்திலும் ஒருவர் மீது ஒருவருக்கு ஆத்திரம் இருந்தது.

சாயங்காலம் நடந்தது அந்தச் சம்பவம்......

ஆற்றங்கரைப் படித்துறைக்குச் சற்று தொலை வில் இருந்த பெரிய ஆல மரத்தடியில் ஜம்புநாத னும் கோபாலனும் அமர்ந்திருந்தனர். உலகச் செய்திகளிலிருந்து உள்ளூர் விவகாரம் வரை அவர்கள் பேச்சில் அடிபட்டன. துடிப்புள்ள வாலிப உள்ளங்களல்லவா! அவர்கள் பேச்சில் பெரும்பகுதி பெண்களைப் பற்றியே சுழன்றதில் வியப்பென்ன! ஆகவே மாலையில், வறண்டு கிடந்த ஆற்றுக்கு ஊற்று நீர் மொள்ள வரும் அழகான பெண்களெல்லாம் அவர்கள் பேச்சில் முக்கிய இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தனர்.

திடீரென்று ஜம்புநாதன் "ஆஹா!" என்று துள்ளிக் குதித்தான்.

"என்னடா" என்றான் கோபாலன்.

"அங்கே பார்..." என்று படித் துறையைச் சுட்டிக் காட்டினான் ஜம்பு. திரும்பிப் பார்த்த கோபாலனின் முகம் சட்டென மாறியது. இதை ஜம்பு கவனிக்கவில்லை. திடீரென கோபாலனின் தொடையைத் தட்டி "அந்த மான் குட்டி யாரடா!" என்றான் ஜம்பு.

"நம் சாமிநாத வாத்தியார் மகள்." இதைக் கூறிவிட்டுக் கோபாலன் முகத்தைச் சுளித்தான்.

"அட......சுசீலாவா! அவள் சின்னப் பெண் ணாக இருக்கும் போது பார்த்தது. பலே, பலே, ஜோராக இருக்கிறாளே......" என்றான் ஜம்பு.

கோபாலன் பதில் பேசவில்லை. சற்று முன்பு உற்சாகத்தின் எல்லைக் கோட்டில் நின்று கலாட்டா செய்து கொண்டிருந்த அவன் இப்படி திடீர் அமைதியில் ஆழ்ந்து விட்டது ஜம்புவுக்கு ஆச்சரியத்தை விளைவித்தது. "ஏண்டா, இப்படி!" என்று அவன் தோளைப் பிடித்துக் குலுக்கினான்.

"அனாவசியமாக எதற்கு ஊர்ப் பெண்களைப் பற்றி வம்பளக்க வேண்டும்!" என்று மெல்ல முனகினான் கோபாலன்.

"அட......இந்த ஞானோதயம் எப்படா ஏற் பட்டது!" என்று கூறிய ஜம்பு ஒன்றும் புரியா மல் விழித்தான்.

அவனுக்கு இன்னும் ஆச்சரியம் நீங்கவில்லை. 'உர்'ரென்று முகத்தை வைத்துக் கொண்டு உட் கார்ந்திருந்த கோபாலனை ஆழ்ந்து நோக்கிய வண்ணம் "படித்துறையில் இதுவரை பார்த்த எத்தனையோ பேரில் இவள் ஒருத்தி. எல்லாரை யும் பற்றிப் பேசியது போலவே இவளைப் பற்றியும் பேசினேனும். இதில் என்ன தப்பு......" என்றான் ஜம்புநாதன்.

"சுசீலாவைப் பற்றி நாம் பேசுவது நல்லதல்ல. அவ்வளவுதான் நான் சொல்ல முடியும்" என்று கசப்போடு கூறினான் கோபாலன்.

"சுசீலாவைப் பற்றிப் பேசினால்......!" என்று சற்று அழுத்தந் திருத்தமாகக் கேட்டான் ஜம்பு.

"அவள் கலியாணமாகாத ஏழைப் பெண். அவளைப் பற்றி நாம் பேசுவது பிறர் காதில் பட்டு அவளைப் பற்றித் தவறான வதந்தி பரவ நேர்ந்தால் அவள் வாழ்வே பாழாகி விடும். அப்புறம் அவ ளுக்கு வாழ்வளிக்க நம்மால் முடியுமா!"

ஜம்புவின் ஆத்திரம் வளர்ந்தது. வேண்டு மென்றே தன்னைக் கோபாலன் அவமானப் படுத்த நினைக்கிறான் என்று அவன் மனம் கருதியது.

"இனி நான் ஒவ்வொரு நாளும் அவளைப் பற்றித் தான் பேசப் போகிறேன்" என்று ஆத்திரத் தோடு கத்தினான்.

கோபாலன் திடுக்கிட்டான். "அவள் வாழ்வு கெட்டால் உனக்குச் சந்தோஷமாக இருக்குமாக் கும்......!" என்றான் மெதுவான குரலில்.

"வாழ்வாவது கெடுவதாவது...நானே அவளைக் கலியாணம் செய்து கொண்டு விடுகிறேன்."

ஜம்புவின் இந்த உறுதியான பேச்சு கோபால னுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவனுக்கும் ஆத்திரம் பிறந்தது. "இந்த ஜன்மத்தில் அது உன்னால் முடியாது" என்றான்.

"ஏன் முடியாது!"

"அந்தப் பெண் ஒப்புக் கொள்ள வேண்டுமே!"

"ஏனங்குடி பண்ணையாரை மணக்க அவளுக் குக் கசக்குமோ! எனக்குத் தன் பெண்ணைக் கொடுக்க அந்த ஏழை வாத்தியார் தயங்கினால் அவரைவிட முட்டாள் இருக்க முடியாது."


இதைக் கூறிவிட்டு அவன் எழுந்தான். அவனைத் தொடர்ந்து கோபாலனும் எழுந்தான். பிறகு இருவரும் நடக்கத் தொடங்கினர்.

★

ஏனங்குடி பெரிய பண்ணை யென்றால் அந்தப் பெரிய கிராமத்தின் ராஜா இருப்பிடம் என்று சொல்வார்கள். அந்த வட்டாரத்தில் அதிக நிலங்களும் செல்வமும் நிறைந்த குடும்பம் ஜம்புலிங்கத்தினுடையது. இரண்டு வருடங்களுக்கு முன்பு தான் ஜம்புலிங்கத்தின் தந்தை காலமாகி விட்டார். இப்போது தாயும் அவனுமாக ஏனங்குடியில் தன் பொறுப்பைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

கோபாலன் ஒரு ஏழை. சின்னஞ்சிறு வயதில் பெற்றோரை இழந்து அனாதையாக நின்று தன் தாய் மாமன் ஆதரவில் அவன் வளர்ந்தபோது திண்ணைப் பள்ளிக்கூடத்தில் ஜம்புவிடம் நட்பு ஏற்பட்டது. அந்தச் சின்னஞ்சிறு வயதிலேயே ஜம்பு கோபாலனுடன் உயிருக்கு உயிராகப் பழகத் தொடங்கினான். பெற்றோரிடம் சொல்லிக்கோபாலனுடைய தேவைகளைப் பூர்த்திசெய்து வந்தான்.

கன்னிலம் உயர்தரப் பள்ளியில் எஸ். எஸ். எல். ஸி. படிப்புடன் அவர்கள் கல்வி முற்றுப் பெற்று விட்டது. கோபாலன் உள்ளூர் ஆரம்பப் பாடசாலையில் ஒரு ஆசிரியனானான். ஜம்புவும் கோபாலனும்



மாலை நேரங்களில் அருகிலிருக்கும் முடிகொண்டான் ஆற்றின் கரையில் அமர்ந்து உல்லாசமாகப் பொழுது போக்கி விட்டு வருவது வழக்கம்.

ஆற்றுக்கு அக்கரையில் சற்றுத் தொலைவில் சாமிநாத வாத்தியாரின் வீடு இருந்தது. அவ்வூர் ஆரம்பப் பாடசாலையின் தலைமை ஆசிரியர் அவர்தான். ஜம்புவும் கோபாலனும் அவரிடம் படித்தவர்களே. இப்போது கோபாலன் அவருக்குத் துணையாசிரியனாக வேலை பார்த்து வந்தான்.

சாமிநாத வாத்தியார் நீண்ட காலத்துக்கு முன் மனைவியை இழந்து விட்டவர் என்பதும், அவருக்குச் சுசீலா என்று மகள் ஒருத்தி உண்டு என்பதும் ஜம்புவுக்குத் தெரியும்.

ஜம்புவுக்கு கன்னிலம் உயர்தரப் படிப்பு ஏற்பட்டதும் மீண்டும் சுசீலாவைப் பார்க்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டதில்லை.

வற்றிக் கிடக்கும் மணற் படுகைகளில் சில இடங்களில் ஆற்றில் ஊற்று நின்றுவிடும். அக்கம் பக்கத்தில் ஊற்று நீர் சுரக்கும் இடங்களுக்குச் சென்று பெண்கள் நீர் கொண்டு வருவார்கள்.

அன்று மாலை அப்படித்தான் கோபாலனும் ஜம்புவும் பேசிக் கொண்டிருந்த பக்கம் சுசீலா வந்திருந்தாள். அவள் வரவுதான் அன்று அந்த உயிர்த்தோழர்களின் நட்பை அசைத்து வைத்தது.

அன்றிரவு ஜம்புவுக்குத் தூக்கம் வரவில்லை. மாலை நடந்த அந்த வாக்குவாதத்தைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தான். கோபாலனின் அர்த்த மற்ற பேச்சுக்கள் அவனுக்குப் புரியவில்லை.

செல்லப் பிள்ளையாக வளர்ந்ததால் ஜம்பு கொஞ்சம் முரட்டுச் சுபாவம் உள்ளவனாகத்தான் இருந்தான். சிறிய வயதில் பல இடங்களில் வலுச் சண்டைக்கு நிற்பான். இப்பொழுது கிராமத்தின் பொறுப்பேற்றபின் பழைய முரட்டுச் சுபாவத்தை அடக்கியே இருந்து வந்தான். மற்றபடி வேறு குற்றங்களை அவனிடம் காண முடியாது.

அன்று ஜம்பு சுசீலாவிடம் பொங்கி வழியும் பேரழகைக் கண்டு பிரமிப்பு அடைந்தானாயினும் அப்படியொன்றும் உறுதியை இழந்து சுசீலாவிடம் மனத்தைப் பறிகொடுத்து விடவில்லை. விளையாட்டாகத்தான் பேசினான். இதைக் கோபாலன் வினையாக எடுத்துக் கொண்டு தன் மீது குற்றப் பத்திரிகை வாசித்ததை அவனால் சகித்துக் கொள்ள முடியவில்லை. வேறு யாராவது சொல்லியிருந்தால் கூட அவன் கவலைப் பட்டிருக்க மாட்டான். பத்து வருடங்களுக்கும் மேலாகச் சகோதரன்போல உடனிருந்து பழகியவன், இப்

படிக் குற்றஞ் சாட்டியது அவன் மனத்தில் அர்த்த மற்ற ஒரு வைராக்கியத்தை விதைத்தது.

★

ஜம்புநாதனின் அந்தப் பேச்சைக் கேட்டு அவனுடைய தாயார் காமாட்சி யம்மாள் திகைத்து விட்டாள். "ஏண்டா உன் புத்தி இப்படிப் போச்சு!" என்றாள் வேதனையுடன்.

"நான் அந்த சுசீலாவைக் கலியாணம் செய்து கொள்ளப் போவது நிச்சயம். இதில் தவறு என்ன! வாத்தியார் நம்ம வகுப்புத்தானே!"

ஜம்பு முரட்டுத்தனமாக அடித்துப் பேசினான். அவனுக்குக் கோபம் வந்தால் அப்புறம் அவன் தீர்மானத்துக்குக் குறுக்கே நிற்க யாராலும் முடியாது என்பதை அவன் குழந்தைப் பருவத்தி லிருந்தே பார்த்து அனுபவப் பட்டிருந்த காமாட்சி யம்மாள் பெட்டிப் பாம்பானாள். திருமணத்தைப் பற்றி அவள் கண்டு வந்த கனவுகள், போட்ட பெரிய பெரிய திட்டங்கள் இப்போது மண்ணோடு மண்ணாகத் தகர்ந்து விழுந்தன.

அன்று மாலையே ஜம்பு சாமிநாத வாத்தியார் வீட்டுக்குச் சென்றான். வாசற்படியருகில் முறத்தில் அரிசியைப் புடைத்துக் கொண்டிருந்த சுசீலா ஜம்புநாதனின் எதிர்பாராத பிரவேசத்தைக் கண்டு முறமும் கையுமாக விழுந்தடித்துக் கொண்டு உள்ளே ஓடினாள். போகும்போது கூடத்தில் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருந்த தந்தையிடம் "அப்பா, பெரிய பண்ணையார் வருகிறார்!" என்று மரியாதையுடன் எச்சரித்து விட்டுத் தான் சென்றாள்.

"வாங்க, தம்பி!" என்று வாத்தியார் உபசரித்துக் கொண்டே அருகில் ஒரு சிறிய பெஞ்சை முன்னால் இழுத்துப் போட்டார். ஜம்பு அதில் அமர்ந்தான்.

பிறகு இருவரும் பொதுவாகப் பழைய விஷயங்களைப் பற்றிப் பேசினர். உள்ளே இருந்த சுசீலா "அப்பா!" என்று குரல் கொடுத்தாள்.

"கம்மா எடுத்து வாம்மா! யாரு, நம்ப ஜம்புதானே! என்னமோ வேற்று மனுஷான் மாதிரி தயங்குகிறாயே!" என்று வாத்தியார் செல்லமாகக் கோபித்துக் கொள்ளவே, சுசீலா இரண்டு டம்ளர்களில் காப்பியைக் கொண்டு வந்து தந்தையின் சாய்வு நாற்காலிக் கைப் பிடியில் வைத்து விட்டு ஓட்டம் பிடித்தாள்.

ஜம்பு நிதானமாகப் பேச்சை எடுத்தான். அவருடைய வறுமை நிலையைப் பற்றிக் கவலை தெரிவித்தான். அதை மாற்றத் தான் பெருமுயற்சி எடுத்துக் கொண் டிருப்பதாகக் கூறிக் கடைசியாக விஷயத்துக்கு வந்தான்.

முதலில் வாத்தியார் திகைத்து விட்டார். சமாளித்துக் கொண்டு ஜம்புவை ஒரு தடவை அமைதியாகப் பார்த்தார். பிறகு சாய்வு நாற்காலியின் கைப்பிடி மீது கைகளை ஊன்றிக் கொண்டு பேசத் தொடங்கினார்.

"உன்னுடைய நல்ல மனத்தைப் பாராட்டுகிறேன், தம்பி! உன்னுடைய தகுதிக்கும் குணத்துக்கும் ராணி மாதிரி ஒரு பெண் கிடைப்பாள்..." சுசீலா விவகாரம் தீர்ந்து போன விஷயம்!"

"தீர்ந்து போன விஷயமா...!" ஜம்பு வியப்புடன் குறுக்கிட்டான்.

"ஆமாம், ஜம்பு! நம்ம கோபாலன் சுசீலாவைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிறான். சுசீலாவும் சின்ன வயதிலிருந்தே அவனிடம் பிரியம் வைத்திருக்கிறாள். நானும் ஏழை, அவனும் அனாதை! அதனால்......"

ஜம்புவின் முகம் சட்டென மாறியது. தன் உள்ளுணர்வை மறைத்துக் கொள்ள எவ்வளவோ முயன்றும் முகம் அதைக் காட்டிக் கொடுத்து விட்டது. என்றாலும் நிலைமையைச் சமாளிக்கக் கருதி "அப்படியா, அப்போ இரட்டிப்பு மகிழ்ச்சி! கோபாலன் சுகப்படுவதில் என்னைவிட ஆனந்தப் படுபவர் வேறு யார் இருக்க முடியும்! கோபாலன் "சுசீலா திருமணத்துக்கு என்னுடைய முழு ஆதரவும் கிடைக்கும்" என்று கூறிவிட்டு ஜம்பு அவசரமாக விடை பெற்றுக் கொண்டான்.

வாத்தியாருக்கு ஒன்றும் புரியவில்லை. ஜம்புவின் ஆத்திரம் அவருக்குப் புதிதாக இருந்தது. அவனுக்கும் கோபாலனுக்கும் உள்ள தோழமையை அவர் அறிந்திருந்தார். இம்மாதிரி விஷயங்களில் அவர்களிருவருக்கு மிடையே மனஸ்தாபம் ஏற்படக் கூடும் என்று அவரால் நினைக்கக் கூட முடியவில்லை.



★

சுசீலாவைத் தனக்குத் தர வாத்தியார் மறுத்துவிட்டது கூட ஜம்புவுக்குப் பெரியதாகத் தோன்றவில்லை. ஆனால் சுசீலா கோபாலனிடம் பிரியம் வைத்திருக்கிறாள் என்று அவர் கூறிய வார்த்தைகள் தான் ஜம்புவின் மனத்தில் பெருந் தீயாகப் பற்றி எரிந்தது. கோபாலன் மீதுள்ள வெறுப்பை இந்தச் சொல் மேலும் மேலும் அதிகப் படுத்தியது.

"அவனிடம் பிரியம் வைத்திருக்கிறாளா, என்னிடம் இல்லாத என்ன தகுதியை அவனிடம் பார்த்து விட்டாளாம்! இந்தக் கலியாணம் நடக்கிறதா என்று தான் பார்த்து விடுகிறேனே" என்று தனக்குத் தானே புழுங்கினான் ஜம்பு.

என்றாலும் கோபாலனிடம் ஓரேயடியாக விரோதித்துக் கொண்டு அவன் விலகி நின்று விட வில்லை.

கோபாலன் பம்பாயில் ஒரு கம்பெனிக்கு வேலைக்கு

வைகைத் திட்டம் வழி விடுமா?

திருமங்கலம் தாலுக்கா மிகவும் பிற்போக்கடைந்த பிரதேசம். நீர்ப் பாசன வசதியே கிடையாது. தற்காலத்திய சித்தாந்தப்படி பஞ்சப் பிரதேசம். இந்தத் தாலுக்காவைச் செழிப்பான பிரதேசம் ஆக்க வேண்டும். நீர்வளம் நிறைந்த பிரதேசமாக மாற்ற வேண்டுமென ராஜாஜி மந்திரி சபையில் இன்று ஸ்தல ஸ்தாபன மந்திரியாக இருக்கும் ஸ்ரீ கே. ராஜாராம் அவர்கள் பல வருட காலமாக முயன்றார். பல பிரயத்தனங்கள் செய்து கடைசியில் வைகை அணைக்கட்டுத் திட்டத்துக்கு உருக் கொடுத்தார். சர்க்காரும் ஏற்றுக் கொண்டு சர்வே செய்தனர். வைகை நதியின் குறுக்கே ஆண்டிப்பட்டியருகில் அணையைக் கட்டி, ஆற்றைத் தேக்குவது என்பதுதான் வைகை அணைக்கட்டுத் திட்டம்.

ஏற்கெனவே வைகை ஆற்றுத் தண்ணீரை உபயோகித்துப் பயனடையும் பிரதேசங்களுக்குப் பாதிக்காதவாறு, அந்தப் பிரதேசங்களுக்குப் போக உபரியாக இருக்கும் தண்ணீரை, இது வரை வீணாக்கப்பட்டு வந்த தண்ணீரை, அணையிலிருந்து வாய்க்கால் மூலம் திருமங்கலம் தாலுக்காவில் பாய்ச்சுவது. அதன் மூலம் சுமார் பதினாறு ஆயிரம் ஏக்கருக்கு அதிகமாகச் சாகுபடி செய்ய வசதி ஏற்படுத்தித் தருவது என்ற முடிவுக்கு வந்தனர் சர்க்கார். பலப்பல நாள், பலப் பல அதிகாரிகள் வேலை செய்து சர்வே செய்து உருவாக்கினர் இத்திட்டத்தை. கடைசியில் திட்டக் கமிஷனின் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டுமே எனத் தவமிருந்தனர்.

தவமும் பலித்தது. ஐந்தாண்டுத் திட்டத்தில் வைகைத் திட்டம் சேர்த்துக் கொள்ளப் பட்டது! ஆனால் அதன் பலன் திருமங்கலம் தாலுகாவுக்குக் கிடைக்காமல் தடுக்கப்பட்டு விட்டது. வைகைக் கால்வாய் வரும், வரும் என்று வழி மேல் விழி வைத்துக் காத்திருந்த திருமங்கலம் தாலுக்காவாசிகள் இன்று ஏக்கம் நிறைந்த விழிகளுடன், சோர்வு நிறைந்த உள்ளத்துடன் செய் வகை யறியாது தவித்து நிற்கின்றனர்.

இந்தச் சோர்வை மாற்ற வேண்டும். சர்க்கார் புனராலோசனை செய்து, வைகைத் திட்டத்தில் திருமங்கலம் தாலுக்காவில் ஓடும் கால்வாய்த் திட்டத்தையும் சேர்த்துத் திருமங்கலம் தாலுக்கா விவசாயிகள் செழிக்கச் செய்ய வேண்டும். வைகை திருமங்கலம் தாலுக்காவுக்கு வழி விட வேண்டும். திருமங்கலம் தாலுகா மக்கள் சுதந்திரம் பெற்றதின் முழுப் பயனையும் அடையச் செய்ய வேண்டும். சிலர் நினைக்கிறபடி திருமங்கலம் தாலுக்காவுக்குக் கால்வாயினால் தண்ணீர் விடுவதனால் யாருக்குமே பாதகம் கிடையாது. வீணாகும் உபரித் தண்ணீரைத்தான் இந்தக் கால்வாயில் விடப்படும் என்பதைத் தெளிவாக்கினால் தங்களுக்குப் பாதகம் என்று கருதுபவர்களும் சரி என ஒத்துக் கொள்வார்கள். தண்ணீர் வீணாகச் செய்வதினால் யாருக்கு என்ன லாபம்? அப்படி வீணாகச் செல்லும் தண்ணீரை அண்டை ஜில்லாக்காரர், அடுத்த தாலுக்கா சகோதரர்கள் பெற்றுப் பயன் அடைவதில் யாருக்கு என்ன ஆட்சேபம் இருக்க முடியும்? திருமங்கலம் தாலுக்கா கால்வாய்த் திட்டத்தை எதிர்ப்பவர்கள் இவைகளைச் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

ராஜாஜி சர்க்கார் உடனடியாகக் கவனித்து, திருமங்கலம் தாலுக்கா மக்களுக்கு ஒரு சந்தோஷச் செய்தியை வழங்குவார்களா?

உசிலம்பட்டி
15-11-53

கே. வி. முருகன்

னுச் செய்து கொண்டிருந்தான். எதிர்பாராமல் அந்த வேலை அவனுக்குக் கிடைத்து விட்டது. உடனடியாக பம்பாய்க்கு வந்து வேலையை ஒப்புக் கொள்ளும்படி கம்பெனியின் நிர்வாகியிடமிருந்து அழைப்பு வந்திருந்தது.

இந்தச் செய்தியை யறிந்து பேரானந்தம் அடைந்தான் ஜம்புநாதன். உடனடியாகக் கிடைக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று பலமாக வற்புறுத்த ஆரம்பித்தான். கோபாலனுக்கு பம்பாய்க்குச் செல்லுவதில் முழுமனதில்லை. நல்ல சம்பளம் கிடைத்தாலும் சொந்த ஊரை விட்டுத் தன்னந்தனியாக அவ்வளவு தூரம் செல்ல அவன் தயங்கினான். ஜம்பு விடவில்லை. அவன் பம்பாய் செல்லுவதற்கான எல்லா முயற்சிகளையும் தானே முன்னின்று செய்தான். வாத்தியாரும் கோபாலனை உற்சாகப் படுத்தவே கோபாலன் அன்றிரவு ஒன்பது மணி ரயிலில் நன்னிலத்திலிருந்து பம்பாய் புறப்படுவது என்று முடிவு கட்டினான்.

ஊருக்குப் புறப்படும் அன்று மாலை கோபாலன் எதிர்பாரா விதமாய் கமலாவைச் சந்தித்தான். தன் பம்பாய் பிரயாணம் குறித்து நண்பர்கள் சிலரிடம் சொல்லிக் கொண்டு இருட்டும் நேரத்தில் கோபாலன் ஆற்றங்கரை வழியாகத் திரும்பி வந்து கொண்டிருந்தான். ஒரு இடத்தில் ஆற்றைக் குறுக்கே கடந்தபோது அங்கிருந்த ஊற்றடியில் ஒரு பெண் நீர் எடுத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். மனம் நிறைந்த சிந்தனையோடு நடந்து கொண்டிருந்த கோபாலன் அந்தப் பெண் இருந்த இடத்தைக் கடந்தபோது "கொஞ்சம் நிற்கிறீர்களா!" என்று யாரோ கூறிய குரல் கேட்டுக் கோபாலன் நின்று திரும்பினான். ஊற்றடியில் நின்றிருந்தது கமலா என்பதை அப்பொழுதுதான் அந்த மங்கிய ஒளியில் கவனித்தான்.

கோபாலனும் கமலாவும் பரஸ்பரம் நேசித்தாலும், அந்த நேசம் கண்ணோடு கண் நோக்கி மகிழ்வதோடுதான் இதுவரை இருந்து வந்தது. அன்று கமலா வலிய தன்னுடன் பேச வந்தது கோபாலனுக்கு ஆச்சரியத்தை விளைவித்தது.

"என்னையா கூப்பிட்டாய்!" என்று அவளருகில் நெருங்கினான் கோபாலன்.

"ஆமாம், நீங்கள் பம்பாய்க்குப் போகவேண்டிய அவ்வளவு அவசியம் என்ன நேர்ந்து விட்டது!"

அவள் குரலில் இருந்த திடமும் துணிவும் கோபாலனைப் பிரமை யடையச் செய்தது. "பணம் சம்பாதிப்பதற்காக" என்று சுருக்கமாகக் கமலாவின் கேள்விக்குப் பதிலளித்தான்.

"இப்படி ஊரை விட்டு ஓடி யாருக்காகப் பணம் சம்பாதிக்கிறீர்கள்!"


இது கமலாவின் அடுத்த கேள்வி.

"உனக்காகத்தான்!"

கமலா தயங்காமல் பதிலளித்தாள். "எனக்காகத்தானே! அப்போது நான் சொல்லுவதைக் கேளுங்கள். இப்படி நாடோடி வாழ்வு வாழ்ந்து நீங்கள் மூட்டை கட்டிக் கொண்டு வரும் பொருளை நான் விரும்பவில்லை. வாத்தியார் வேலையில் கிடைக்கும் சொற்பப் பொருளே போதும்."

இதைக் கூறும்போது அவள் குரலில் தொனித்த உரிமைப் பண்பைக் கோபாலன் கவனித்தான். அவனுக்கு வாயடைத்துப் போய் விட்டது.

"கமலா... நீ உலகம் அறியாதவள், நான் சொல்வது என்ன வென்றால்......" என்று கோபாலன் ஏதோ பேசத் தொடங்கியபோது கமலா அவசர



சிலவு குறைக்க டயர்...

புதுப்பிக்கவும்

பத்து வருட நுண்ணிய அனுபவ முறையில், பழைய பஸ், கார் டயர்களை செப்பனிட்டு புதுப்பிக்கிறோம்.

முன்னணி இயந்திர முறையில், நாட்டின் ரஸ்தாக் களுக்கு உகந்த "ட்ரெட்" அமைத்து நீடித்த உழைப் பைக்கான பணியாற்றுகிறோம்.

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்.

புதுக்கோட்டை

(ஓர் டி. வி. எஸ். ஸ்தாபனம்)

TVS

மாக நீர்க் குடத்தை எடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டு "உங்கள் இஷ்டம். நீங்கள் பம்பாய் போவதை நான் தடுக்கவில்லை" என்று கூறிக் கொண்டே அங்கிருந்து அவள் போய் விட்டாள்.

கோபாலன் திகைத்துப் போய் அப்படியே நின்றான். அவன் மனதில் ஆட்டங்காண ஆரம்பித்தது. பம்பாய் பிரயாணத் தீர்மானம் மூன்றும் பின்னுமாக ஊசலாட்ட மெல்ல அந்த இடத்தைவிட்டு அவனும் நகர்ந்தான்.

அன்று இரவு கோபாலனுடைய பிரயாணம் நின்று விடாதபடி ஐம்புநாதன் மிக எச்சரிக்கையாகக் கவனித்துக் கொண்டான். மிக சாமர்த்தியமாகப் பேசிப் பேசி அவன் மனக் குழப்பத்தை நீக்கித் தானே ரயிலேற்றி விட்ட பிறகுதான் ஐம்புநாதன் வீட்டுக்குத் திரும்பினான்.



ஐ. நா. சபை கொண்டாட்ட தின வைபவத்தன்று ஸ்ரீமதி எலினர் ரூஸ்வெல்ட் ஐ. நா. சபைத்தலைவி ஸ்ரீமதி விஜயலட்சுமிக்குச் சபா நாயகர்கள் பிரசங்கம் புரிவோர்களுக்குக் கால நேரத்தைக் குறிக்க உபயோகிக்கும் சுத்தி ஒன்றைப் பரிசாக அளித்தார்.

★

சீண்டிவிடப்பட்ட புலி போல ஐம்புநாதன் தன் அறைக்குள் வளைய வளைய வந்தான். அவன் மனத்தில் ஆயிரம், ஆயிரமாயிரம் எண்ணங்கள் ஒன்றோடொன்று மோதிப் போரிட்டுக் கொண்டிருந்தன. எல்லாம் சுசீலா, கோபாலனைப் பற்றியதுதான்.

விஷயம் அவனுக்கே வியப்பாக இருந்தது. ஒரு அற்ப விஷயத்துக்காக அவன் ஏன் வெற்றியடைய வேண்டும். சுசீலாமீது அவன் மனம் இன்னும் கூட பற்று வைக்கவில்லை. சிறு சபலங்கூட அவன் உள்ளத்தில் தலை யெடுக்கவில்லை.

அவன் மனத்தில் மேலோங்கி நின்றது ஒரு விதப் பழி வாங்கும் வெறிதான். கோபாலனை வாயடைக்கச் செய்து தன் சக்தியை நிதர்சனப்படுத்த வேண்டும் என்று ஒரு மன எழுச்சிதான் அவனிடம் குடி கொண்டிருந்தது.

கோபாலனைப் பற்றி நினைக்கும்போது ஐம்புவுக்குச் சிலசமயங்களில் ஒருவித பரிதாப உணர்ச்சி ஏற்படத்தான் செய்தது.

ஆனால் பிறப்போடு பிறந்த ஒரு கெட்ட பழக்கம். பல தடவை தவிர்க்க முயன்றும் விடாது பற்றிக் கொண்ட அந்தப் பிடிவாத குணம், முரட்டுச் சுபாவம் இப்பொழுது ஐம்புவின் மனத்தில் மேலோங்கி விட்டது. "என் உப்பையே தின்று விட்டு என்னைக் குத்திக் காட்டி அவமானப்படுத்துவதா! இவன் என்ன பெரிய யோக்கியனா!" என்று மனத்தின் ஒரு மூலையிலிருந்து அடிக்கடி கருவிக் கொண்டிருக்கும் ஒரு சக்தி அவனுடைய மனிதத் தன்மையை மண்டையிலடித்து விட்டது.

சுவற்றிலிருந்த கடிகாரம் பன்னிரண்டு தடவை அடித்துக் காலம் அகாலமாகி விட்டதை அறிவித்து விட்டுத் தன் போக்கில் நகரத் தொடங்கிற்று.

ஐம்புநாதன் எதையும் கவனிக்கவில்லை. தன்னை மறந்து சிந்தனையில் ஆழ்ந்தவனாய்ப் பின்புறம் கைகளைக் கட்டிய வண்ணம் தரையை அளப்பது போல நிதான நடைபோட்டான். மனமோ புயல் வேகத்தில் பாய்ந்து கொண்டிருந்தது.

கோபாலன் அடுத்த தடவை ஊர் வந்து சேரும் போது கணவன்—மனைவியாக சுசீலாவும் தானும் அவனை வரவேற்கவேண்டும். இதற்கு வழி என்ன!

இரண்டு வழி அவனுக்குப் புலப்பட்டது. முதல் வழி கொஞ்சம் மனிதத் தன்மை கலந்தது. சுசீலாவை யாருக்கும் தெரியாமல் கடத்தி வந்து கட்டாய மணம் புரிவது. மணமாகிவிட்ட பிறகு வாத்தியாரால் என்ன செய்ய முடியும்! பேசாமல் பணிய வேண்டியதுதானே.

அடுத்த தீர்மானம் பயங்கரமானது. ரகஸ்யமாக வாத்தியாரைத் தீர்த்துக் கட்டி விட்டால்...!

இந்த இரண்டில் எந்தத் தீர்மானம் சரியானது என்பதைத் தான் முடிவு கட்ட முடியாமல் ஐம்புநாதன் திணறிக் கொண்டிருந்தான்.

முதல் தீர்மானப்படி நடந்தால் ஊரார் பழிக்கு இலக்காக நேரிடும். தன் குடும்பத்தின் மதிப்புக்கே பங்கம் ஏற்பட வழியுண்டு.

இரண்டாவது தீர்மானம் பயங்கரமானதாக இருந்தாலும் ஊராரின் கண்களில் சுலபத்தில் மண்ணைத் தூவி விடலாம். ஒரு அனாதைப் பெண்ணுக்குக் கை கொடுப்பதாகப் பிரமாத விளம்பரம் செய்துவிட்டு சுசீலாவை ஏக ஆர்பாட்டத்துடன் மணக்கலாம். ஆகவே இரண்டாவது தீர்மானம் பெரும்பாலும் நிலைத்துவிட்டது. இது மாறிவிடப் போகிறது என்ற அச்சத்தால் உடனடியாக ஏற்பாடு செய்துவிட எண்ணிய ஐம்புநாதன், உடனே மேல் துண்டை எடுத்துப் போட்டுக் கொண்டு வெளியே இருளில் புறப்பட்டான்.

ஐம்பு மீண்டும் திரும்பும்போது கிட்டத் தட்ட விடியும் நேரமாகி விட்டது. கிராம எல்லையைத் தாண்டி இரண்டு அடியாட்கள் இருந்தனர். ஐம்புவின் உப்பைத் தின்று வாழ்பவர்கள். கொலை பாதகம் எதுவுக்கும் அஞ்சாத முரடர்கள். அவர்களைச் சந்தித்து விட்டுத் திரும்பினான் ஐம்பு.

இப்படிப்பட்ட ஒரு விபரீதச் செயலுக்கு வித்தூன்றிய பிறகுதான் அவன் மனத்தில் அமைதி பிறந்தது. வீட்டில் வந்து படுத்த உடனேயே நல்ல உறக்கத்தில் ஆழ்ந்து விட்டான்.

★

மறுநாள் ஜம்புநாதன் முன் எச்சரிக்கையாகச் சில காரியங்களைச் செய்வதில் முனைந்தான். இரவு நடக்க விருக்கும் அந்தப் பயங்கர நிகழ்ச்சிக்கும் தனக்கும் ஒருவிதத் தொடர்பும் கிடையாது என்று நிரூபிப்பதற்காகக் காலையிலேயே ஊரைவிட்டு வெளியே எங்காவது புறப்படுவது என்று முடிவு கட்டினான். சம்பவம் நடந்தபோது ஊரில் இல்லை என்பதை ருசுப்பிக்க வேண்டுமல்லவா !

நாகப்பட்டினத்தில் தனக்கு ஒரு அவசர வேலை இருப்பதாகவும், ஒரு வேளை திரும்புவதற்கு இரண்டொரு நாள்கூட ஆக நேரிடலாம் என்றும் தாயாரிடம் கூறிவிட்டு வெளியே புறப்பட்டான். நாகை சப் இன்ஸ்பெக்டர் ஜம்புநாதனின் நெருங்கிய நண்பர். இரண்டு நாட்களை அவர் வீட்டிலேயே கழித்து விட்டால் நடக்க விருக்கும் கொலை பாதகத்திலிருந்து சுலபமாகத் தப்பித்து விடலாமல்லவா! அங்கே போவதென்ற தீர்மானத்துடன்தான் கிளம்பினான்.

அவன் கொஞ்ச தூரம் சென்ற போது இரவு சந்தித்த அடியாட்கள் எதிரே வந்தனர். அவர்களிடம் விஷயம் முடிந்ததும் தனக்கு அறிவிக்கும்படி கூறிவிட்டு நாகைக்குச் சென்று விட்டான்.

★

“பம்பாயில் ஏகப்பட்ட மழையாமே...... பார்த்தீர்களா !” என்றார் இன்ஸ்பெக்டர்.

எதிரே சாய்வு நாற்காலியில் அமர்ந்து கண்களை மூடிக் கொண்டிருந்த ஜம்புவின் காதுகளில் இது விழவில்லை. அவன் மனம் ஏனங்குடியில் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது.

இன்னும் இரண்டு அல்லது மூன்று மணி நேரத்தில் அந்த பயங்கரச் செயல் முடிந்துவிடும் என்று நினைத்துக் கொண்டிருந்தான்.

“என்ன மிஸ்டர் இப்படி !” என்று ஆச்சரியத்துடன் கேட்டார் இன்ஸ்பெக்டர்.

“ஒன்று மில்லை......பம்பாய்ச் செய்தி எதுவோ படித்தீர்களே...அதுதான் மனத்தை என்னவோ செய்தது. என்ன அது ! நன்றாகப் படியுங்கள்...” என்று தடுமாறிக் கொண்டு கூறினான் ஜம்பு.

பம்பாயில் பயங்கரமாக வீசிய புயலைப் பற்றிய செய்தியை இன்ஸ்பெக்டர் சத்தம் போட்டுப் படிக்கத் தொடங்கினார். “பம்பாயில் பிரபலமான ரமண்லால்தேசாய் பிளாஸ்டிக் சாமான்கள் கம்பெனியின் பெரிய கட்டடம் புயலினால் பாதிக்கப்பட்டுத் தரையோடு தரையாக சரிந்துவிட்டது...” என்று அவர் படித்துக் கொண்டே சென்றார்.

“ஆ...” என்று திகைத்துப் போய்க் கூச்சல் போட்டான் ஜம்பு. அந்தக் கம்பெனியில் தான் கோபாலன் வேலை செய்கிறான்.

“பாவம்...அப்போது கம்பெனியில் வேலை செய்து கொண்டிருந்த எல்லோரும் மரணமடைந்து விட்டனராம்......”

இன்ஸ்பெக்டர் பரிதாபத்துடன் கூறினார். ஜம்பு அவர் கையிலிருந்து பத்திரிகையைப் பாய்ந்து பிடுங்கினான். அதில் கட்டிடச் சரிவில் மரணமடைந்து விட்டவர்களின் பட்டியல் தரப்பட்டிருக்கும் பகுதியில் வேகமாகக் கண்களை ஓட்டினான் அவன் நினைத்தது நடந்தே விட்டது. பட்டியலில் கோபாலனின் பெயரும் இருந்தது.

இன்ஸ்பெக்டர் சிரமப்பட்டு விஷயத்தைப் புரிந்து கொண்டு பரிதாபப்பட்டார்.

ஜம்பு இருந்தாற்போலிருந்து எழுந்தான். இன்ஸ்பெக்டரிடம் பரபரப்புடன் “உங்கள் மோட்டார் சைக்கிளைக் கொஞ்சம் கொடுங்கள். நான் உடனடியாக இப்போதே வீட்டுக்குப் போயாக வேண்டும். நானே வந்து விவரம் கூறுகிறேன்” என்று கூறிவிட்டு அவர் பதிலைக் கூட எதிர்பார்க்காமல் ஒரு பக்கத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் பாய்ந்து ஏறி உட்கார்ந்தான். பட, படவென்று பேரொலியை எழுப்பிக் கொண்டு மோட்டார் சைக்கிள் பறந்தது.

★

மேற்கண்ட நிகழ்ச்சிகள் நடந்த சுமார் ஒரு மாதத்துக்குப் பிறகு ஒரு நாள் ஏனங்குடியில் ஜம்புநாதனின் வீடு அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது. பெரிய பெரிய பந்தல்களெல்லாம் போடப்பட்டுப் பிரமாதமாக அலங்கரிக்கப்பட்டிருந்தன. மணமகன் சிரஞ்சீவி கோபாலன், மணமகள் சுசீலாவுக்கு மணமாலை சூட்டினான். இந்தக் காட்சியை மகிழ்ச்சி பொங்கும் கண்களால் பருகிய வண்ணம் ஜம்புநாதன் மெய் மறந்து நின்றான்.

அன்று மாலை புது மணத் தம்பதிகள் தனிமையில் பேசிக் கொண்டனர். “பம்பாய்க்குப் போக வேண்டாம் என்று சொன்னேனே கேட்டீர்களா !” என்று குறைப்பட ஆரம்பித்தாள் சுசீலா.

“போனதால் என்னவாம் ......!”

“கடவுளாகப் பார்த்துக் கட்டிடம் இடியும் தருவாயில் உங்களைக் கடைத் தெருவுக்கு அனுப்பி விட்டார். இல்லாவிட்டால்......” என்று அந்த நிகழ்ச்சியைக் கற்பனை செய்யக்கூடப் பயந்து கண்களை மூடிக் கொண்டாள் சுசீலா.

உண்மையாகவே அந்தச் சம்பவத்தை நினைத்துக் கொண்டபோது கோபாலனுக்கு உடல் சிலிர்த்தது. கட்டடம் இடிவதற்குப் பத்து நிமிஷங்களுக்கு முன்புதான் அவன் ஒரு அவசர வேலையாகக் கடைத்தெருவுக்குப் புறப்பட்டான். அவன் சென்றது மற்ற யாருக்கும் புரியாது. அதனால் தான் கூட்டத்தில் அடியில் நசுங்குண்டவர்களில் அவனும் இருந்திருக்க வேண்டுமெனக் கருதி, மரணமடைந்தவர்களின் பட்டியலில் அவன் பெயரும் இருந்தது.

“ஒரு ஆச்சரியம் தெரியுமா !” என்று தன் கணவனைப் பார்த்துக் கேட்டாள் சுசீலா.

“என்ன !” என்றான் கோபாலன்.

“உங்களுக்கு அபாயம் வர இருந்த மறு நாள் இரவு இங்கே எங்கள் வீட்டிலும் ஒரு ஆபத்து நேர்ந்தது. நடு இரவில் யாரோ சில முரடர்கள் வீட்டுக்குள் புகுந்து அப்பாவின் கழுத்தை நெறித்து அவரைக் கொலை செய்ய முயன்றார்கள்...”


“அப்புறம்...!” என்றான் கோபாலன்.

“உங்களைக் காப்பாற்றிய கடவுள், உங்களுக்காக எங்களையும் காப்பாற்றினார் போலிருக்கிறது. ஏனங்குடி பண்ணையார் திடீரென்று மோட்டார் சைக்கிளில் வந்து இறங்கிக் கொலைகாரர்களை விரட்டியடித்தார் ......”

“அப்படியா ! என் ஜம்பு எவ்வளவு நல்லவன் தெரியுமா !” என்று தன்னை மீறி யெழுந்த நன்றி யுணர்ச்சியுடன் மெய்மறந்து கூறினான் கோபாலன்.

கோபாலன் ஊர் வந்து சேர்ந்த உடனே ஒரு விநாடிகூட தாமதியாமல் திருமணத்துக்கு ஜம்பு ஏற்பாடு செய்து அதைச் சிறப்பாகத் தன் செலவிலேயே நடத்தி வைத்ததன் உட்பொருள் கோபாலனுக்கு எப்படிப் புரியும் !

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras



வெண்மையாக
சலவை செய்யப்பட்டுள்ளன
பிரகாசமாக
சலவை செய்யப்பட்டுள்ளன
ஸன்லைட்
சோப்பினால் தான்
துணிகளை
அடித்துத் துவைக்காமலே
வெண்மையாகவும்
பிரகாசமாகவும்
சலவை செய்கிறது!
SUNLIGHT
SOAP
SUNLIGHT SOAP

S. 206-50 TM

REGD. No. M. 4392

Registered as a newspaper in Ceylon

